Registered as a News Paper

பக்கம் – 16

# ஈழநாதம்

வெள்ளிநாதம் Weekly


விலை: 12.00

நாதம் -13 திருவள்ளுவர் ஆண்டு 2034 31 - 07 பெப்ரவரி 2003 ஓசை 347



## விடைபெறப்போகும் ஹொவ்டே







## நம்பியாரின் பரிந்துரைகள்!

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி 31.01.2003

# 'பேர்லின்' ஒரு சிறந்த தேர்வு

சமாதானத்தை நோக்கிய நகர்வின் ஐந்தாம் கட்டப் பேச்சுவார்த்தைக்கான அமர்விடமாக ஜேர்மனியின், பெர்லின் நகர் தேர்வாகியுள்ளது.

இந்தத் தேர்வு பலநினைவுப் பதிவுகளை ஆழ் மனதிலிருந்து மேலே கொண்டு வரவே செய்கிறது.

ஜேர்மனி என்றதும் அந்த தேசத்தின் வேறெந்த அம்சங்களையும் விட மனத்திரையில் முன்னுக்கு வருவது 'அடேல்ப் ஹிட்லர்' என்ற சர்வாதிகாரியின் தோற்றம் தான்.

உலகம் எவரை மறந்தாலும் அவரை மறக்காது.

உலக வரலாற்றின் போக்கையே மாற்றிய இரண்டாம் உலகப் போரின் - அதன் அனர்த்தங்களின் - ஏன் அதன் அர்த்தங்களின் காரணகர்த்தாவும் அவர்தான்.

போர்வெறி - இனவெறி - ஆக்கிரமிப்பு வெறி-ஆதிக்க வெறி அழிப்பு வெறி - போன்ற அனைத்தினதும் மொத்தவடிவமான ஹிட்லரின் தேசத்தில் - இந்த வெறிகள் அனைத்தும் எவ்வாறு துவம்சம் செய்யப்பட்டது என்பதும், பின் அத்தேசம் எவ்வாறு துண்டாடப்பட்டது என்பதும் - அதற்குப்பின்னரும் அந்தத் தேசம் இடிபாடுகள் - இடர்கள் -- பிரிவுகள் அனைத்திலுமிருந்து மீண்டு, மீண்டும் ஒன்றாக இணைந்து ஓர் உன்னத வலிமை மிக்க சக்தியாக இன்று உயர்ந்துள்ளது என்பதும் வரலாறு.

ஜேர்மனி ஊடாக உலகம் கற்க வேண்டியவை ஏராளம்.

அதுவும் சிறிலங்கா போன்ற நாடுகளும், அவற்றின்

அதிகாரத்துவம் மிக்க தலைமைகளும் கற்றுணர வேண்டியவை ஏராளம்...

சிறிலங்காவின் இனவெறி அரசுகளும் அதன் ஆதிக்க அதிகாரவெறி கொண்ட தலைமைகளும், சிறுபான்மைத் தமிழ்மக்களுக்கு எதிரான அவர்களின் அடக்குமுறைகளும், அதனைத் தொடர்ந்த மிகவும் அநாகரிய முறையில் தமிழ் மக்கள் மீது அவர்கள் மேற்கொண்ட இருதசாப்த கால போரும் இந்த நாட்டை எவ்வளவுக்குச் சீரழித்தது என்பதும் கூட வரலாறு தான்...

இன்று போர் நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டு சமாதானப் பேச்சுவார்த்தைகள் சர்வதேச மத்தியஸ்தத்துடன் கட்டம் கட்டமாக முன்னெடுக்கப்படுகின்ற போதிலும் சர்வாதிகார வல்லமை கொண்ட சிறிலங்காவின் சனாதிபதி சந்திரிகா இன்னமும் எந்த வகையில் இந்தப் பேச்சுவார்த்தையைக் குழப்பலாம் என்ற இனவெறிச் சிந்தனையுடனே செயற்பட்டு வருகிறார்.

அரைநூற்றாண்டுக்கும் மேலான பிரச்சினைக்கும், இருதசாப்பகாலப் போருக்கும் முடிவுகாணக்கூடிய - இணக்கமான சூழ்நிலை நடைபெறும் சர்வதேச அனுசரணையுடனான ஒரு பேச்சுவார்த்தை நகர்வினை வெறுமையான அரசியல் சுயநல லாபங்களை மனதில் கொண்டே அணுக முயல்கிறார்.

சமாதானத்தை, உதட்டளவில் வரவேற்பதாக பாசாங்கு பண்ணிக் கொண்டு அதற்கான சகல ஏற்பாடுகளையும், அதற்கு முயலும் சகல சக்திகளை ஆத்மார்த்த நிராகரிப்பவராகவும், எதிர்ப்பவராகவுமே உள்ளார். அமைதித் தீர்வை எட்டுவதை விட, ஆட்சிக் கதிரையைப் பற்றிக் கொள்வதிலேயே அவர்குறியாக உள்ளார்.

சமாதானத்தைக் குழப்ப சாத்தான்களுடனும் கூட்டுவைக்கும் மூன்றாந்தர அரசியல் அணுகுமுறைகளே அவருக்கு இன்று அர்த்தமுள்ளதாகத் தெரிகிறது.

அவரின் தந்தையாரின் காலத்தில் - அற்ப பதவி வெறியுடன் மூட்டப்பட்ட இன வாதத்தீ, அவரின் அன்னையின் காலத்தில் கொழுந்து விட்டுஎரியச் செய்யப்பட்டு, அவரின் காலத்தின் தமிழினத்தை முற்று முழுதாக அழித்து, தமிழர்களின் பாரம்பரிய தாயக பூமியை முழுமையாக ஆக்கிரமிக்கும் பெருந்தீயாகி 'அக்கினிச்சுவாலை'யாகி யுத்த சன்னதம் கொண்டு நின்றது.

சந்திரிகாவின் போர்வெறியாட்டம் விடுதலைப்புலிகளால் அதற்கு தேவையான வழிமுறைகளாலேயே அடக்கப்பட்டது.

ஆனாலும் அதிகார வெறியும், பதவி அகங்காரமும், இன்னமும் அவருக்கு அடங்க வில்லை என்பது அவரது சமகால சமாதான எதிர்ப்பு நடவடிக்கைகளின் மூலம் தெளிவா கின்றது.

இதேபோன்ற மூர்க்கத்தனமான - ஹிட்லரின் போர்வெறியும், ஆக்கிரமிப்பு மனோபாவமும், இன அழிப்புக் கொள்கையும், அதிகார ஆணவமுமே ஹிட்லரின் வீழ்ச்சிக்கும், ஜேர்மனி கிழக்கு - மேற்கு எனப்பிரியவும், அந்நிய ஆதிக்க சகதிகள் அங்கு நிலை கொள்ளவும் காரணமாயிற்று

மீண்டும் அந்த பிளவுண்ட நாடும், பிரிவுண்ட மக்களும் இணைய ஒரு அரை நூற்றாண்டு காலம் தேவைப்பட்டது.

பெர்லின் மதில் கட்டப்பட்ட நாள் ஜேர்மனியின் வரலாற்றில் 'கறை' படிந்த - 'மனிதம்' நிராகரிக்கப்பட்ட நாளென்றால், அதே மதில் இடிக்கப்பட்ட நாள் 'மனிதத்தின்' மேன்மை வலுப்பட்ட நாளென்றே கூற வேண்டும்.

இன்று ஜேர்மன் கம்பீரமாக மீண்டும் உலக அரங்கில் - தமது வரலாற்று அனுப வங்களில் இருந்து பாடம் கற்றுத் தெளிந்த ஒரு நாடக உன்னத நிலையை நோக்கி உயர்ந்து வருகிறது...


இன்று இனப்பிரச்சினைக்கு முன் வைக்கப்பட்டுள்ள சமஷ்டி அரசியல் தீர்வு குறித்த திட்டத்தை நடைமுறைப்படுத்தி வெற்றி கண்டு வரும் ஒருநாடாகவும் அது விளங்கு கிறது.

அந்த நாடு - அதே வரலாற்று புகழ்மிக்க பெர்லின் நகரில் சிறிலங்கா அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமான சமாதானப் பேச்சின் ஐந்தாம் கட்டத்தை நடத்த வரவேற்று கதவுதிறந்துள்ளது.

போரின் - அழிவுகளுக்கும், மேலாதிக்க - ஆக்கிரமிப்பு வெறியின் வீழ்ச்சிக்கும் அடையாளமான 'பெர்லின்' சிறிலங்கா அரச பிரதிநிதிகளுக்கும் சனாதிபதிக்கும், இந்தப் பேச்சுவர்த்தைக்கான பாதையை தன்னை நோக்கித் திருப்பியதன் மூலம் எதனையோ மறைமுகமாக ஆனால் மிக அழுத்தமாகக் கூறுவதாகவே தோன்றுகின்றது.

ஆனால் இதனைப் புரிந்து கொண்டு, சமாதானத்தை ஆத்மார்த்தமாகப் பற்றிக் கொண்டு, மனிதப்பண்புபேணி, இனப் பிரச்சினைக்கு நியாயபூர்வமான, நிலையான, தீர்வொன்றை தருவதற்கு. சிறிலங்காவின் பன்முகப்பட்ட ஆட்சி அதிகாரபீடங்களில் உள்ளவர்களின் மத - இனவாத சிந்தனைகள் இடங் கொடுக்குமா?

அவர்கள் தங்களை ஒரு தடவை ஹிட்லரின் மறுவடிவங்களாக மனப்பூர்வமாக - உருவகப்படுத்தி -- உணர்வு பூர்வமாக சிந்திப்பார்களேயாயின் ஒரு வேளை சாத்தியமாகலாம்... சாத்தியமாகுமா?




## தூரனின் பார்வையில்

# தீர்வை நோக்கிய திக்விஜயங்கள்; ஒரு பார்வையும், சில எண்ணங்களும்

**ஒஸ்லோவில** மூன்றாம் கட்டப் பேச்சுவார்த்தையின் போது இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றை எட்டும் இலக்கு நோக்கிய நகர்வில் சமஷ்டி அமைப்பிலான - சுயநிர்ணய உரிமையுடன் கூடிய தீர்வொன்றின் அடிப்படையில் ஒரு திட்டத்தினை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வதற்கு இருதரப்பினரும் ஓர் இணக்கப் பாட்டை எட்டியதை அடுத்து எந்தவகையிலான சமஷ்டி தீர்வு சிறிலங்காவின் அரசியல் யதார்த்தத்திற்கு பொருத்தமானதாக, சாத்தியமானதாக அமையும் என்பது குறித்து ஆராயும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சமஷ்டி அரசியல் அமைப்பின் மூலம் தமது உள்நாட்டு இனத்துவ அடிப்படையிலான பிரச்சினைகளுக்கு அமைதியான தீர்வுகளைக் கண்டு முன்னேறியுள்ள நாடுகளில் அத்தகைய ஆட்சிமுறை எந்தச் சூழலில் எந்த வகையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது என்பதையும் அதன் அடிப்படையில் எந்த நாட்டின் அணுகுமுறை சிறிலங்காவின் இனப்பிரச்சினைக்கு உறுதியானதும், நிரந்தரமானதும் எல்லாவற்றிலும் மேலாக தமிழ் மக்களின் அபிலாஷைகளை - அரசியல் மற்றும் வாழ்வியல் உரிமைகளை, பாதுகாக்கக்கூடியதுமான தீர்வினை எட்ட வழிகாட்டும் என்பதையும் கண்டறியும் திக் விஜயங்கள் நடந்துகொண்டிருக்கின்றன.

சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வு சுவிஸ் நாட்டில் எவ்வாறு நடைமுறைப் படுத்தப்படுகின்றது என்பது குறித்து பார்த்தும் கேட்டுமறிவதற்கு ஒஸ்லோவில் மூன்றாம் கட்டப் பேச்சுவார்த்தை முடிந்தகையோடு அரச மற்றும் விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் அங்கு சென்றிருந்தமை தெரிந்ததே.

இதேவேளை இதேவிடயம் குறித்து சிறிலங்காவின் எதிர்க்கட்சி மற்றும் இதர கட்சிகளுக்கு 'விளக்க' மளிக்கும் பொருட்டு கனேடிய அரசசார்பற்ற 'FORUM OF FEDERATIOM' என்ற அமைப்பைச் சார்ந்த குழுவொன்று எதிர்வரும் மார்ச்மாதத்தில் கொழும்பு வரவுள்ளதாகத் தெரிகின்றது.

சமஷ்டி அமைப்பு மாநிலங்களை நிர்வகிப்பதற்கு மிகச்சிறந்த வழிமுறையாகும். பாதுகாப்பு நிதி - வெளிநாட்டு உதவிகள் மத்திய அரசாங்கத்தின் கீழேயே இருக்கும். அமெரிக்கா, பெல்ஜியம், இந்தியா போன்ற நாடுகள் சமஷ்டி ஆட்சிமுறையையே கடைப் பிடிக்கின்றன என 'உபதேசம்' செய்துள்ளார் ஐரோப்பிய யூனியனின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர்.

கனடா - ஜேர்மன் மற்றும் ரஷ்யா போன்ற நாடுகளுக்கும் மத்திய தரைக்கடற் பகுதி நாடுகளுக்கும் சமஷ்டி முறைமை பற்றி ஆராய விடுதலைப்புலிகள் விரைவில் செல்வார்கள் என்று நோர்வேயின் விசேட சமாதானத்தூதுவரான எரிக்சொல் ஹெய்ம் கூறுகிறார்.

அவுஸ்ரேலியாவில் உள்ளது போன்ற சமஷ்டி ஆட்சிமுறை இலங்கைக்குப் பொருத்தமானதாக இருக்குமென்றும் - இது பிரிந்துள்ள இலங்கையை ஐக்கியப்படுத்த உதவுமெனவும், கலாசாரம், தரம்வேறுபட்ட பொருளாதாரத்தேவைகள், மக்கள் தாம்வாழும் பிரதேசங்களில் தமது தலைவிதியை நிர்ணயித்தல் என்பன சமஷ்டி முறையில் அவசியம் என்றும் அவுஸ்ரேலிய நாடாளுமன்ற உறுப்பினரான முதல் இலங்கையரும், சிங்களவருமான 'பெரேரா' என்பவர் பரிந்துரை செய்துள்ளார். இவர் யாழ். பல்கலைக்கழகப் பட்டதாரியுமாவார்.

பெல்ஜியம் - ஒஸ்ரியா - ஸ்பெயின் மற்றும் ஜேர்மனி போன்ற நாடுகளில் சமஷ்டி முறை எவ்வாறு நடைமுறையில் உள்ளது என்பது குறித்து ஆராய்வதற்கு அரச மற்றும் ஏனைய தரப்பினைச் சேர்ந்த 15 பேர் கொண்ட குழுவொன்றும் அரசியல் ஆய்வு யாத்திரை மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிகிறது.... இப்படி இன்னும் பலவற்றைக் கூறலாம்.

ஆக, சிறிலங்காவின் இனப்பிரச்சினை சமஷ்டி ஆட்சிமுறை தொடர்பான பரந்த அளவிலான, ஆய்வு, மீளாய்வு, மற்றும் பகுப்பாய்வுக்கு ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்பது உண்மை. ஆனாலும் இதன் முடிவு வெறும் தீர்வைநோக்கிய திக் விஜயங்களாக முடிவு காணாவெற்று அரசியல் உலாவாக முடிந்துவிடுமோ என்ற ஐயமும் எழவே செய்கிறது.

சமஷ்டி மூலம் நாட்டைத் துண்டாட ரணில் வழிசெய்து விட்டார் எனச் சிங்கள மக்களைத் தூண்டி - இனவாதப் பிரச்சாரங்களை தீவிரப்படுத்திவரும் சந்திரிகா அம்மையாரின் அரசியல் பின்னோடிகள் அவர்களைச் சார்ந்தோரும் சமாதானத்திற்கு தாம் ஆதரவு என்று அறிக்கைகளை விட்டுக் கொண்டு தீர்வு பற்றிய விடயங்களுக்கு எதிர்ப்பைத் தெரிவிப்பவர்களாகவே உள்ள நிலையில்...

'வடக்கு, கிழக்கு இணைப்பை எதிர்த்து சமஷ்டித் தீர்வின் மூலம் நாடு பிளவுபடுவதைத் தடுக்கவேண்டும்' என கொஞ்சக்காலம் தலைமறைவாகியிருந்த முன்னாள் பிரதமர் ரட்ணசிறிவிக்கிரம நாயக்கா சூளுரைத்து வரும் நிலையில்....

'சமஷ்டி' என்ற சொல்லை உச்சரித்தாலே - அதனை ஒரு ஆபத்தான சிங்கள மக்களுக்கு எதிரான நடவடிக்கையாக இனங்காட்டி இனரீதியிலான குழப்பங்களை ஏற்படுத்தி குழம்பிய குட்டையில் அரசியல் மீன்பிடிக்க ஜே.வி.பி.யினர் தயாராக உள்ள நிலையில்....

சமாதான முயற்சிகள் சிங்கள இனத்திற்கும் பௌத்த சமயத்திற்கும் இழைக்கப்படும் துரோகமென்றும், சமஷ்டித் தீர்வு சிங்கள தேசத்தை துண்டாக்கும் நடவடிக்கையென்றும், அல்லும் பகலும் 'சிகல உறுமய' போன்ற பேரினவாத - மதவெறிச் சிந்தனை (?) யாளர்கள் கூச்சலிட்டு வரும் நிலையில்...

ஒட்டு மொத்தமாகப் பேச்சுவார்த்தைகளை எதிர்த்து சமாதான முயற்சிகளைக் குழப்பும் நோக்கத்துடன் தமது நடவடிக்கைகளை இனத்துவேஷ அடிப்படையில் 'பிக்குகள் பெரமுன' தீவிரப்படுத்தத் தொடங்கியுள்ள நிலையில்...

எல்லாவற்றிற்கும் மேலாக அமைதி முயற்சிகள் அனைத்தையும் சீர்குலைக்கும் வஞ்சக எண்ணத்துடன் பன்முகத் திட்டங்களை தேசியரீதியிலும், சர்வதேச ரீதியிலும் மேற்கொண்டு வரும் சிறிலங்காவின் சனாதிபதியின் சதித்திட்டங்கள் ஒரு நியாயமான தீர்வுக்கு சகல வழிகளிலும் (தனது நிறைவேற்று அதிகார வலுப்பலத்தைப் பயன்படுத்தி) முட்டுக்கட்டை போட்டுவரும் நிலையில்....

இனப்பிரச்சினைக்கு சமஷ்டித் தீர்வைத் தேடி மேற்கொள்ளப்படும் இந்த திக்

(15ம் பக்கம் பார்க்க..)

# நம்பியார் : வில்லனா கதாநாயகனா?





**உயர்பாதுகாப்பு** வலயங்களில் மீளக்குடியமர்த்துவது பற்றிய ஜெனரல் சதீஸ்நம்பியாரின் பரிந்துரைகள் விரைவில் கிடைக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இது தொடர்பாக மேற்கத்தைய படைத்துறை நிபுணர்கள் சிலரிடமும் ஆலோசனைகள் கேட்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

இது ஒன்றைக் காட்டுகிறது. விவகாரம் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் சக்திக்கு மீறிய ஒன்றாகக் காணப்படுகிறது என்பதே அது.

புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் இந்தப்பிரச்சினை யுத்தநிறுத்தக்கண்காணிப்புக்குழுவின் உதவியோடு தீர்க்கப்பட்டிருந்திருக்க வேண்டும்.

ஆனால் இரண்டு விசயங்கள் நிலமைகளைக் குழப்பிவிட்டன.

ஒன்று சமாதானத்துக்கு எதிரான பிராந்திய மட்டத்திலான அணி இராணுவத்துக்குப் பின் பலமாயிருப்பதும் ரணில் ஒப்பீட்டளவில் பலவீனமானவராகக் காணப்படுவதும்.

மற்றது இதுவிசயத்தில் யுத்தநிறுத்தக்கண்காணிப்புக் குழுவின் நிலைப்பாடு அதிகமதிகம் ராணுவத்தின் பயங்களைப் பிரதிபலிப்பதாகக் காணப்படுவதாகப் புலிகள் நம்புவது.

இந்த இரண்டு காரணங்களும் சேர்ந்து விவகாரத்தை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அதிகார வரையறைகளுக்குள் தீர்க்கப்பட முடியாதபடி செய்து விட்டன.

ஸ்கன்ரிநேவிய நாடுகளின் பிரதிநிதிகளைக் கொண்ட யுத்த நிறுத்தக்கண்காணிப்புக் குழு புரிந்துணர்வு உடன்படிக்கையின் தேவைகளின் நிமித்தம் உருவாக்கப்பட்டது.

ஒருசாட்சிபோலிருந்து யுத்தநிறுத்தத்தைக் கண்காணிப்பது இவர்களுடைய வேலை என்று கூறப்பட்டது.

ஆனால், புரிந்துணர்வு உடன்படிக்கை மீறப்படும் ஒரு நிலை வந்தால் முரண்டு பிடிக்கும் தரப்பின் மீது ஒருகட்டத்துக்கும் அப்பால் அழுத்தத்தைப் பிரயோகிக்க அவர்களால் முடியாது.

இவ்வாறான சந்தர்ப்பங்களிலேயே பொதுவாக அமைதி காக்கும் படைகளைப் பற்றிச் சிந்திக்கப்படுகிறது.

அமைதிகாக்கும் படை எனப்படுவது ஒன்றில் பிராந்திய மட்டத்தில் உருவாக்கப்படுகிறது. அல்லது சர்வதேச மட்டத்தில் உருவாக்கப்படுகிறது.

மரபுரீதியான அமைதி காக்கும் பணிகளில் யுத்தத்தில் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கிடையில் யுத்தநிறுத்தத்தைப் பேணுவதே அமைதிப்படையின் வேலையாய் இருந்து வந்தது.

கெடுபிடிப்போரின் பின்னான உலகில் அமைதி காக்கும் பணி எனப்படுவது அதிகமதிகம் யுத்தம் புரிதலாகவே காணப்படுகிறது.

அமைதி அல்லது சமாதானம் என்று அவர்கள் கூறும் ஏதாவது ஒரு ஒழுங்கை யுத்தகளத்தில் ஸ்தாபிக்க முற்படும் போது அதை எதிர்க்கும் தரப்பின் மீது படைபலத்தைப் பிரயோகிப்பது என்பது இன்று உலகு பூராகவும் உள்ள ஒரு பொதுப்போக்காயுள்ளது.

ஈழப்போரிலும் ஏற்கனவே ஒரு அமைதிகாக்கும் படையின் வருகை நிகழ்ந்தது.

இந் நிலையில் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் கைகளைத்தாண்டிப் பிரச்சினை சர்வதேச மட்டத்திற்கு எடுத்துச் செல்லப்படுகையில் அதில் இந்தப்பிராந்தியத்திற்கு வெளியில் உள்ள நாடுகளின் படைத்துறை நிபுணர்கள் அதிகம் சம்பந்தப்படுவதையிட்டு இந்தியா மகிழ்ச்சியாய் இல்லை என்று கூறப்படுகிறது.



என்பதினாலேயே இலங்கை அரசாங்கம் சதீஸ் நம்பியாரை அணுகியதாக நம்பப்படுகிறது.

இந்திய அமைதிகாக்கும் படை விலகிய பின்னரான ஈழப்போர் அரங்கில் சமாதான முயற்சிகளில் பிராந்தியத்திற்கு வெளியில் இருந்து பெறப்படும் படைத்துறை ஆலோசனைகளையிட்டு இந்தியா காட்டிவரும் அதிருப்தி காரணமாகவே ரணில் விக்கிரமசிங்க யுத்தநிறுத்தக்கண்காணிப்புக்குழு என்ற ஒரு அமைப்புக்குமப்பால் போகத்தயங்குவது தெரிகிறது.

இதில் உள்ள கொடுமை என்னவென்றால் யுத்தத்துக்காக எந்தப் பிசாசிடமிருந்தும் கொழும்பு உதவி பெறும் போது அதையிட்டு

**நிலாந்தன்**

ஒப்பீட்டளவில் அலட்டிக் கொள்ளாத புதுடில்லி சமாதானத்துக்காக பிராந்தியத்துக்கு வெளியிலுள்ள நாடுகளிடமிருந்து படைத்துறை உதவிகள் பெறப்படும் போது அதிலிருக்கும் "வரையறைகளை" உணர்த்துமாப்போல் நடந்து கொள்வது என்பது.

யாதார்த்தத்தில் ஈழப்போரின் இப்போதுள்ள களநிலவரத்தின் படி ஒரு அமைதி காக்கும் படைக்கான தேவை இன்னமும் உணரப்படவில்லை.

ஏற்கனவே ஒரு அமைதி காக்கும்படையிடம் பெற்ற மிகக் கசப்பான அனுபவங்களினடியாக தமிழர்களும், சிங்களவர்களும், முஸ்லிம்களும் கூட இது விசயத்தில் மிகவும் முன்னெச்சரிக்கையோடு இருப்பது போலத் தெரிகிறது.

பொதுவாக இறுதித்தீர்வு என்று ஒன்று வரும் போதே அதை அமுல்படுத்த அப்படியொரு அமைதிப்படை தேவைப்படுவதுண்டு. நிகழும் சமாதான முயற்சிகள் அத்தகைய ஒருவளர்ச்சியை நோக்கிப்போக இன்னும் பலகாலம் செல்லும்.

ஆனால் சிலசமயம் உயர் பாதுகாப்பு வலயம் பற்றிய சர்ச்சை மேலும் சூடாகுமிடத்து யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவை விடப்பலமான பயன் பொருத்தமான ஒரு ஏற்பாட்டைக் குறித்துச் சிந்திக்கவேண்டி ஏற்படலாம்.

நம்பியாரிடமும் ஏனைய மேற்கத்தையப் படைத்துறை நிபுணர்களிடமும் ஆலோசனைகள் கேட்கப்பட்டிருப்பது என்பது இதற்கான ஒரு மங்கலான தொடக்கமாய் அமையக்கூடும்.

இதில் நம்பியார் முன்பு ஐ.பி.கே.எவ். காலத்தில் புதுடில்லியிடமிருந்த சிந்தனைகளின் நீட்சியாக முடிவெடுக்கப்போகிறாரா அல்லது தனிப்பட்ட முறையில் தனது கிழக்கைரோப்பிய அனுபவங்களின் பிரகாரம் முடிவெடுக்கப்போகிறாரா என்பதிலிருந்தே இனி அடுத்த கட்டம் ஆரம்பமாகும். ■

# பன்முகம் 8

# மசாடா

**யாழ்ப்பாணமே** ஒட்டுமொத்தமாக வெளியேறியபோது எனக்கு மசாடா தான் நினைவுக்கு வந்தது.

மசாடா என்பது இஸ்ரேலில் உள்ள செங்குத்தான 100 மீற்றர் உயரமுள்ள மலைக்குன்று. இதற்கென்று ஒரு தனிவரலாறு, தன்மான வரலாறு, வீர வரலாறு உண்டு.

கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலம் தொட்டே யூத சமுதாயம் ரோமானியருக்கு அடிமைப்பட்டுக் கிடந்தது. யூதமக்கள் தமது அடிமைத்தளையை நீக்குவதற்காவும் உரோமியரை விரட்டுவதற்காவும் சிறு சிறு தீவிர குழுக்களாகச் செயற்ப்பட்டு வந்தனர். அத்தகைய குழுக்களில் ஒன்று தான் சீலொட் (ZEALOTE) எனப்படும் ஆயுதக்குழு.

கி.பி.65-73 வரை இவர்கள் போராட்டம் தீவிரமாக இருந்தது. உரோமானியப் படையை, அதன் முக்கியமானவர்களைத் திடீரென வழிமறைத்துத்தாக்கி கொலை செய்து விட்டு மசாடா மலையில் சென்று மறைந்து விடுவார்கள். இந்த மலை மீது பழக்கப்படாதவர் யாருமே ஏறமுடியாத அளவுக்கு இயற்கையரணாக அமைந்தது. இத்தனைக்கும் மிகக்குறுகிய ஒடுக்கமான வளைவுகள் கூடிய ஒற்றையடிப் பாதை மட்டும் தான் இதில் அமைந்திருந்தது. அதற்குப் பெயர் 'பாம்புப்பாதை' என்பதாகும்.

சீலொட் தீவிரவாத அமைப்புக்கு இறுதி நாட்களில் தலைமை தாங்கி வழிநடத்தியவர் ஜாயீரின் மகனான எலியேசர் என்பவன்.

கி.பி. 72ல் ரோமானிய ஆளுநராக பிளேவியஸ் சில்வா என்பவன் நியமனம் பெற்றுவந்தான். சீலொட் அமைப்பை எப்படியாவது அழித்துவிடுவது என்பதில் அவன் உறுதிபூண்டிருந்தான். எனவே தாக்குதல் நடாத்திவிட்டு சீலொட் போராளிகள் சென்று மறைந்து கொள்ளும் மசாடா மலையைச் சுற்றிப்பெருந்தொகையான படையினருடன் சென்று எட்டு முகாம்களை அமைத்து காவலிட்டான். மசாடா மீது யாரும் ஏறவோ, அதிலிருந்து வெளியேறவோ முடியாத வண்ணம் காவல் கடுமையாக இருந்தது. இதனால் மலையின் மீது உள்ள போராளிகள் பட்டினிச்சாவை எதிர்நோக்கிச் சரண்அடைவர் என எதிர்பார்த்தான்.

ஆனால் அதன் விளைவோ பிளேவியன் சில்வா எதிர்பார்த்ததற்கு முற்றிலும் எதிராக அமைந்தது. மசாடா மீது ஏற முயன்ற உரோமை வீரர்களின் மீது பெரும் கற்களை உருட்டியும், தீக்கணைகளை எறிந்தும் பாரிய படை இழப்புக்களை ஏற்படுத்திக் கொண்டேயிருந்தான். ஒரு சில வாரங்களில் பணியவைக்கலாம் என நினைத்த பிளேவியஸ் சில்வா பலமாதங்களாகியும் உக்கிரமாகப் போராடிக் கொண்டிருக்கும் சீலொட் போராளிகளை கைது செய்ய புதிய உத்தியைக் கையாண்டான்.

மசாடா மலைக்கும் பக்கத்து மலைக்கும் இடையில் உள்ள பள்ளத்தாக்கினை நிரவி, பெரும்சுவர்ப்பாதையாக எழுப்பி அதன் மீது படைநடாத்திச் சென்றான். இதனை செயல்படுத்த நீண்ட நாட்கள் எடுத்தன. போராளிகளின் எதிர்ப்புத் தொடர்ந்து கொண்டே இருந்தது.

இனித்தாம் பிடிபட்டு விடுவோம் என்பதை உணர்ந்த எலியேசர் மலைமேல் இருந்த போராளிகள், அவர்கள் குடும்பத்தவர்கள் அனைவரையும் மொத்தம் 960பேரையும் ஒன்று கூட்டி தனது இறுதி உரையை நிகழ்த்தினார்.

சீலொட் போராளிகளைச் சேர்ந்த ஒருவரேனும் உரோமானியர் கையில் உயிரோடு பிடிபடக்கூடாது என்று சபதம் எடுத்தான். அவனைச்சாந்த அனைவரும் அதற்குச் சம்மதித்தனர். தெரிவு செய்யப்பட்ட மொத்தம் ஒன்பது பேர் ஏனையோரை வெட்டிக் கொன்றனர். அவர்கள் களஞ்சியப்படுத்தி வைத்திருந்த உணவு மற்றும் பொருட்கள் அனைத்தையும் தீக்கிரையாக்கினர். இறுதியில் தாமே தமது வயிறுகளைக் கிழித்துக் கொண்டு மரணத்தைத் தழுவிக் கொண்டனர்.

உரோமானியப் படை வெற்றிக்களிப்புடன் மசாடாவினுள் பிரவேசித்தபோது எரிந்த எச்சங்களையும், குருதிதோய்ந்த உடலங்களையும் தான் கண்டனர். மொத்தம் 960 சடலங்கள். இவற்றுள் ஆண்கள், பெண்கள், குழந்தைகளும் அடங்குவர்.

சீலொட் போராளிகளில் யாரோ ஒருவன் தன் சந்ததியை அழிக்க விரும்பாதவனாக தனது குடும்பத்தில் இரண்டு பெண்களையும் ஐந்து பிள்ளைகளையும் மலைக்குகை ஒன்றினுள் மறைத்து வைத்துவிட்டே தான் இறந்து போனான். எஞ்சிய அந்த எழுவருமே அங்கு நடந்தவைக்கு சாட்சியங்கள்.

இஸ்ரவேல் என்ற ஒரு யூத நாடு உருவாக்கப்பட்ட பின்னர். சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னர் வந்த அந்தச் சந்ததி அந்தப் போராளிகளை மறக்கவில்லை. 1969ஆம் ஆண்டு மசாடா குன்றில் ஒரு குகைக்குள் ஆண்கள், பெண்கள், சிறுவர்களது எலும்புகள் மண்டை ஓடுகளாம் மனித எச்சங்களைக் கண்டு எடுத்தனர். அது சீலொட் போராளிகளுடையவையே என்று ஆய்வுகள் மூலம் கண்டறிந்தனர். அவ்வெச்சங்களை பெரும் இராணுவ மரியாதையுடன் அடக்கம் செய்தனர். மசாடா குன்றும் தற்பொழுது போக்குவரத்துக்கான நவீன வசதிகள் அமைக்கப்பட்ட உல்லாசப் பிரயாணிகளின் இடமாகமாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

மசாடாவை உரோமானியப் படை கைப்பற்றியபோது போராளிகள் சரணடையாமலே இன்னும் பல வருடங்கள் தாக்குப்பிடிக்க கூடியமுன் ஆயத்தத்துடன் இருந்திருக்கின்றனர் என்று கண்டு வியந்தனர்.

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய பின்னர்: அரசு விதித்திருந்த பொருளாதார, மருந்து, பிரயாணத் தடைகளுக்குள் விடுதலைப் போராளிகள் எத்துணை பலத்துடனும், பாதுகாப்பு வசதிகளுடனும் இருந்திருப்பார் என்று கண்டு வியந்துதான் போயிருப்பர்.

இன்றும் இஸ்ரவேல் படையில் புதிதாக இணைந்து பயிற்சியை முடித்துக் கொண்ட போர்வீரர் சத்தியப் பிரமாணம் செய்யும் இடம் மசாடா மலைக் குன்றம் தான். அப்பொழுது அவர்கள் கூறும் உறுதிமொழி.

"MASADA SHALL NOT FALL AGAIN" மசாடா மீண்டும் வீழ்ச்சியுறாது என்பதுவே.

யாழ்ப்பாணத்தை விட்டு அன்று நாம் வெளியேறியபோது "இன்று நாம் எம் மண்ணை விட்டு வெளியேறுகின்றோம். மீண்டும் இந்த மண் எம்கைவசம் வந்து சேரும்" யாழ்ப்பாணம் மீண்டும் வீழ்ச்சியுறாது" என்று அப்பொழுது நாம் சபதம் எடுப்போம் என்ற சொற்கள் என் இதயத்தில் ஒலித்துக் கொண்டேயிருந்தது.

**நாவண்ணன்**

## தாய்லாந்தின் “த நேஷன்” பத்திரிகையில் வெளியான ஆய்வுக்கட்டுரை தெரிவிக்கும் கருத்துக்கள்.

# ஒஸ்லோவில் கற்ற துன்பியல் பாடம் சிறிலங்காப் பேச்சுக்களுக்கும் பொருந்தும்

றுசாங்கன்




**ஒஸ்லோவில் செய்துகொள்ளப்பட்ட மத்திய கிழக்கு உடன்படிக்கையின் தோல்வியிலிருந்து சிறிலங்கா அரசும் விடுதலைப்புலிகளும் கற்றுக்கொள்ளவேண்டியது நிறையஉண்டு.**

**தாய்லாந்து** அரசாங்கம் சிறிலங்காவின் சமாதானப் பேச்சு முயற்சிகளுக்கு களம் வழங்கியதுபோல,தாய்லாந்தின் ஊடகங்களும் சிறிலங்காவின் சமாதானப் பேச்சுக்களுக்கு கூடுதல் முக்கியத்துவம் வழங்கிச் செய்திகளை வெளியிட்டிருந்தன.இவற்றுள் தாய்லாந்திலிருந்து வெளியாகும் “த நேஷன்” பத்திரிகை செய்திகளுடன், ஆய்வுக் கட்டுரைகளையும் வெளியிட்டதன் மூலம் இந்தச் சமாதான முயற்சிகளுக்கு அதிக முன்னுரிமை கொடுத்திருந்தது. தாய்லாந்தின் “நகொன்பத்தம்” நகரில் அமைந்துள்ள றோசாத் தோட்ட விடுதியில் **(ROSE GARDEN)** பேச்சுக்கள் ஆரம்பித்த தினமான ஜனவரி 6ஆம் திகதியில் தாய்லாந்துக்கான நோர்வே நாட்டுத் தூதுவரின் சமாதான முயற்சிகள் தொடர்பான செவ்வியினை வெளியிட்ட “த நேஷன்” 9ஆம் திகதி பேச்சுக்கள் சில உடன்பாடின்மைகளுடனும் முடிவுற்ற நிலையில் வரலாற்று அனுபவங்களிலிருந்து கற்றுக் கொள்ளவேண்டிய பாடம் தொடர்பில் ஆய்வுக்கட்டுரை ஒன்றை வெளியிட்டிருந்தது.குமார் கிருஷ்ணன் என்பவரால் எழுதப்பட்டிருந்த இப்பத்தியின் சில பகுதிகளை இங்கே விரிவாகநோக்குவது ,தாய்லாந்தின் அதிக வாசிப்புக்கு உட்படும் ஒரு ஊடகத்தின் நிலைப்பாட்டை நமது நாட்டவர் புரிந்துகொள்ள உதவும்.

தற்போதைய சமாதானப் பேச்சுக்களுக்கான ஆரம்பவித்தினை இட்டதுடன், தொடர்ந்தும் பல இடையூறுகளுக்கு மத்தியிலும் அதில் உறுதியுடன் ஈடுபட்டு வரும் புலிகளின் நிலைப்பாடு,சர்வதேச அளவில் விடுதலைப் புலிகள் தொடர்பில் ஏற்படுத்திவரும் சாதகமான நிலைப்பாட்டையும் இந்தப் பத்தி உணர்த்துவதாக உள்ளது.சிறிலங்கா அரசு கடந்த காலங்களில் மேற்கொண்டுவந்த விஷமப் பிரசாரங்களையும் கடந்து,ஈழத் தமிழர் பிரச்சினையை அதன் வரலாற்றுப் பின்புலத்துடன் நோக்குமளவுக்கு சர்வதேச அபிப்பிராயம் வளர்ந்துள்ளமையை இப்பத்தி மேலும் உணர்த்துவதாக உள்ளது.இனிப் பத்தியை நோக்குவோம்.

சிறிலங்கா அரசு விடுதலைப் புலிகளுடன் ஒரு சமாதான முயற்சியில் முனைப்புடன் ஈடுபடுவது என்பது இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் சாத்தியமற்ற ஒரு காரியம் போலவே தென்பட்டது.ஆனால் தற்போது வரலாற்றில் முதற்தடவையாக ஒரு வருட காலமாக கடைப்பிடிக்கப்பட்டுவரும் போர் நிறுத்தத்தின்மூலம்,வன்முறைகளிலிருந்து சிறிலங்கா தேசம் விடுபட்டுள்ளது.

இத்தகைய ஒரு எதிர்பாராத நிலை எய்தப்பட்டமைக்கான பாராட்டுக்கள் யாவும் நோர்வே நாட்டுக்கே உரியது. அவர்களுடைய இணக்கப்பாட்டு முயற்சியின் மூலமே இருதரப்புக்கும் இடையே இருந்த ஆழ்ந்த பிளவு இல்லாதொழிக்கப்பட்டுள்ளது.கடந்த மாதம் ஒஸ்லோவில் இடம் பெற்ற பேச்சுக்களில் இருதரப்புமே சமஷ்டி அடிப்படையிலான ஒரு தீர்வுக்கு உடன்பட்டிருப்பது இதில் எட்டப்பட்டுள்ள இன்னும் ஒரு அதிகபட்ச சாதனையாகும்.

கடந்த காலத்தில் இஸ்ரேல்- பாலஸ்தீனியர்களுக்கு இடையே ஒரு சமாதான உடன்படிக்கையும்,ஊடகங்களின் பார்வையில் படாமல், ஒஸ்லோவிலேயே நிறைவேற்றப்பட்டது.மத்திய கிழக்குப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக எடுக்கப்பட்ட மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு முயற்சியாக இம்முயற்சி அப்போது அமைந்திருந்தது.இப்போது அது சிக்கலுக்குள் மாண்டுபோயுள்ளது.

ஆனால்,இந்த இஸ்ரேல் - பாலஸ்தீன அமைதி உடன்பாட்டின் தோல்வியிலிருந்து சிறிலங்கா அரசாங்கமும்,தமிழீழ விடுதலைப் புலிகளும் கற்றுக்கொள்ளவேண்டிய விடயங்கள் அதிகளவில் உள்ளன.

ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு இருதரப்புக்களுக்குமிடையே ஒரு பரஸ்பர புரிந்துணர்வை ஏற்படுத்துவதற்கு ஒஸ்லோ உடன்படிக்கை முயற்சிசெய்தது. இக் காலப்பகுதிக்குள் இஸ்ரேலியர்களுக்கு எதிரான தாக்குதல்கள் எதுவும் இடம் பெறாமல் பார்த்துக்கொள்வது என பாலஸ்தீனம் உறுதியளித்திருந்தது. இதேபோல் பாலஸ்தீனியர்களின் மண்ணில் தான் ஆக்கிரமித்த பகுதிகளை மீண்டும் அவர்களிடமே கையளிப்பது என இஸ்ரேல் உடன்பட்டிருந்தது.

ஆரம்பத்தில் இருதரப்பும் இவ்விடயத்தில் உறுதியளித்ததுபோலவே செயற்பட்டதனால், மத்தியகிழக்குச் சர்ச்சைக்கு ஒரு முடிவு காணப்படக்கூடிய ஏதுநிலைகள் தென்பட்டன.ஆனால் நினைத்தபோல எதுவும் நடைபெறவில்லை.இந்த உடன்படிக்கை பின்னர் முறிந்து போனது. இந்த முறிவுக்கு இருதரப்புத் தலைமைகளின் பொறுப்பற்ற தன்மைகளே காரணமாக அமைந்திருந்தது.ஒவ்வொரு தடவையும் இருதரப்பு இணக்கப்பாடு சிக்கல்களுக்குள்ளானபோதும்,சர்ச்சை தீர்க்கப்பட்டு விடவேண்டும் என்பதே அனைவரது பிரார்த்தனையாகவும் இருந்தது.ஆனால் பிரார்த்தனை பலிக்கவில்லை.

பாலஸ்தீனியர்களின் தரப்பில், கமாஸ்,ஜிகாத் போன்ற அமைப்புக்களைக் கட்டுப்படுத்துவது பேச்சுக்களில் ஈடுப்பட்ட தரப்பால் முடியாத காரியமாகிப் போனது.அதேபோல் இஸ்ரேலியர்களும் உடன்படிக்கைக்கு எதிராக தமது படை வலிமையை அதிகளவில் பயன்படுத்தினர்.

சிறிலங்காவின் சமாதான முயற்சிகள் இந்த விடயத்தின் ஒருவகையில் வித்தியாசப்படுகிறது. ஒஸ்லோவின் சமாதான முயற்சிகளின் தோல்விக்குக் காரணியாக அமைந்த கமாஸ் அல்லது ஜிகாத் போலல்லாது,இங்கே முரண்பாட்டுடன் சம்பந்தப்பட்ட பிரதான தரப்பான விடுதலைப் புலிகள் அமைப்பு, அமைதி முயற்சியில் நேரடியாக ஈடுபட்டுள்ளது.ஆனால்,அக்காலப்பகுதியில் இஸ்ரேலில் நிலவிய அரசியல் சூழ்நிலைகளிலிருந்து சிறிலங்கா அரசு கற்றுக் கொள்ளவதற்கு அதிக விடயங்கள் உள்ளன.

1993இல் கைச்சாத்தான ஒஸ்லோ உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவதற்கு தொழிற்கட்சி எடுத்துவந்த அனைத்து முயற்சிகளுக்கும் வலதுசாரி லிகுட் கட்சி இடையூறுகளை விளைவித்து வந்தது. சிறிலங்காவின் அரசியல் நிலைமையும் இதிலிருந்து அதிகம் வேறுபடவில்லை.சிறிலங்காவின் மிக அதிகளவு முரண்பாடான அரசியல் சூழ்நிலையே சமாதான முயற்சிகளுக்கு பிரதான அச்சுறுத்தலாக விளங்குகிறது. சிறிலங்காவின் சனாதிபதியான சந்திரிகா குமாரதுங்கவே நோர்வே நாட்டை நடுநிலை பாத்திரம் வகிக்குமாறு முதலில் அழைப்பு விடுத்திருந்தார்.அதேசமயம் தனது கடும்போக்கான அரசியல் அணுகுமுறையூடாக அவர் போரையும் முன்னெடுத்துவந்தார்.

தற்போது அவரது பிரதான அரசியல் எதிரியான ஐக்கிய தேசிய முன்னணி, தேர்தலில் சமாதானத்துக்கான ஆணையைப் பெற்று,சமாதான முயற்சிகளை முன்னெடுத்து சர்வதேச சமூகத்தின் பாராட்டையும் பெற்றுள்ளது.ஆனால் சமாதான முயற்சியின் ஒவ்வொரு படிநிலையிலும் சனாதிபதி முட்டுக்கட்டைகளைப் போட்டு வருகிறார். இதன் உச்சக்கட்டமாக அவர் நோர்வேயின் மத்தியஸ்தப் பாத்திரத்தையும் கடுமையாக விமர்சிக்கத்தவறவில்லை.

அரசாங்கத்தினால் எடுக்கப்பட்டுவரும் ஒவ்வொரு முடிவையும் சந்திரிகா தலைமையிலான எதிர்க்கட்சி எதிர்த்தே வருகிறது. விடுதலைப்புலிகள் மீதான தடைநீக்க விவகாரத்திலும்,வானொலி உபகரணங்களின் இறக்குமதி விவகாரத்திலும்,ஆயுதக்களைவு விவகாரத்திலும் அது பிரச்சினைகளை உண்டுபண்ணி வருகிறது.பொதுமக்களது உணர்வுகளைத் தூண்டிவிடுவதற்காக பொதுசன ஐக்கிய முன்னணியானது,அரசாங்கம் எதிர்பார்க்காத பல விட்டுக்கொடுப்புக்களைப் புலிகளிடமிருந்து எதிர்பார்க்கிறது.

ஆண்டுகள் பல கடந்தபோதிலும்,தீர்வு விடயத்தில் அடிப்படையில் மாற்றம் எதுவும் ஏற்பட்டுவிடவில்லை.1957ஆம் ஆண்டில் அப்போதைய தமிழ்த் தலைவரான எஸ்.ஜே.வி.செல்வநாயகத்துக்கும்,தற்போதைய சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்காவின் தந்தையாரான பண்டாரநாயக்காவுக்கும் இடையே இனமுரண்பாட்டுக்குத் தீர்வுகாணும் வகையிலான ஒரு உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டது.இந்த உடன்படிக்கை எதிர்க்கட்சியினால் மேற்கொள்ளப்பட்ட ஒரு மாபெரும் பாதயாத்திரைமூலம் செயலற்றுப்போகச் செய்யப்பட்டது.


எந்த ஒரு அரசியல் தீர்வுமுயற்சிக்கும் அவசியமான அரசியலமைப்பு மாற்றம், ஆளும்- எதிர்க்கட்சிகளிடையேயான முரண்பாடான அணுகுமுறைகளால் சாத்தியமற்றுப்போனது.ஒருதரப்பால் மேற்கொள்ளப்பட்ட விட்டுக்கொடுப்பு, மற்றையதரப்பால் நெருக்கடிகளுக்குள்ளாக்கப்பட்டது. இத்தகைய அணுகுமுறைகள் காரணமாக சிறிலங்காவின் அமைதிக்கான பாதை,கண்ணிவெடிகள் நிறைந்த மிகவும் நீண்டதோர் பாதையாகவே உள்ளது.

அண்மைக்காலமாக உயர்பாதுகாப்பு வலயங்களில் மக்களை மீளக்குடியேற்ற அனுமதிக்கவேண்டும் என்ற விடுதலைப் புலிகளின் கோரிக்கையும்,இதற்கு மாற்றீடாக புலிகள் ஆயுதங்களைக் கையளிக்க வேண்டும் என்று படைத்தரப்பில் விடுக்கப்பட்ட நிபந்தனையும் சிக்கலை மேலும் அதிகரித்துள்ளது. இந்த விவகாரத்தை மேலும் சிக்கலானதாக்குவதன்மூலம் அரசாங்கத்தை நெருக்கடிக்குள்ளாக்க எதிர்க்கட்சிகள் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றன.

விடுதலைப் புலிகளிடமிருந்து ஆயுதங்களைக் களையுமாறு கோரும் விவகாரம் இலகுவில் தீர்க்கமுடியாத ஒரு பிரச்சினையாகவே இருக்கும்.விடுதலைப்புலிகள் மிக நீண்டகாலமாக தமது படைவலிமையை கட்டியெழுப்பிவந்துள்ளதுடன்,தமிழ் மக்களின் தரப்பில் குரல்தரவல்ல பிரதான சக்தியாகவும் தம்மை வளர்த்துக் கொண்டுள்ளனர்.

1987ஆம் ஆண்டு செய்துகொள்ளப்பட்ட இந்திய இலங்கை உடன்படிக்கையின்கீழ் ஆயுதங்களைக் கையளித்ததால் ஏற்பட்ட கசப்பான அனுபவங்கள் விடுதலைப் புலிகளுக்கு உண்டு.ஒரு அரசியல் இணக்கப்பாடு காணப்படும்வரையில் இந்த விடயத்தை முன்னிறுத்தாமல் விடுவதன் மூலம் இந்தக் காலத்தின் பெறுமதியை சிறிலங்கா அரசும் உணர்ந்து கொண்டுள்ளது.

ஒரு இறுதித் தீர்வு எட்டப்படவேண்டுமானால் அதற்கு நடைமுறைச் சாத்தியமான, புதிய திட்டங்கள் இருந்துவிட்டால் மட்டும் போதாது.அதற்கு வலிமையான சர்வதேச ஆதரவும்,அழுத்தமும் அவசியமானது.கடும்போக்கான அரசியலே மத்திய கிழக்குச் சர்ச்சையைத் தீர்ப்பதற்கான ஒஸ்லோ உடன்பாட்டின் தோல்விக்குக் காரணமாக அமைந்தது என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது.




**செய்தி :** முரண்பாடற்ற அரசியல் நடத்த பாராளுமன்றக்குழு அமைக்கத்திட்டம் அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு.....

மயிலர் : பாவம் பீரிஸ் ஐயா... அரசியலுக்கு வந்தநாள் முதலா எத்தினை திட்டத்தைத் தான் போட்டிருப்பார்? சந்திரிகா அம்மையாருக்குப் பின்னாலை தீர்வுப் பொதியென்ற பெயரில் எதனையோ சுமந்து கொண்டிருந்தார்... பொதியைச் திறந்தால் பிரச்சினை தீருமென்றார். பொதி திறபடவுமில்லை பிரச்சினை தீரவுமில்லை... இப்ப ரணிலுக்குப் பின்னாலை அதிகாரப்பரவலாக்ககலிலை ஆரம்பித்து சமஷ்டி ஆராச்சியிலை வந்து நிற்கிறார் பாருங்கோ... அதுசரி முரண்பாடற்ற அரசியல் நடத்த பிறகேன்... ஒரு தூதுக்குழு... சரி... அதிலையாவது இவையளுக்குள்ள ஒரு உடன்பாடு வருகிறதா எண்டுபாப்பம்.

**செய்தி :** வடக்கு கிழக்கில் பௌத்த ஆலயங்களைப் புனரமைக்க இந்தியா உதவும்... இந்தியத்தூதர் தெரிவிப்பு...

மயிலர் :அங்கை பாபர் மசூதி இடிப்பு... இங்கை பௌத்த விகாரைகள் புனரமைப்பு.... இந்தியாவின்ரை போக்கே விளங்கேல்லைப்பாருங்கோ.... இதற்கு இந்திய அரசு ஆராய்ச்சியாளரையும் அனுப்பிவைக்கப் போகுதாம்...இதைத் தான் சந்தர்ப்பவாத அரசியல் எண்டு சொல்லுறதோ?


பல்லாயிரக் கணக்கான மக்களின் குடியிருப்புகளில் ஆக்கிரமித்து நிற்கும் இராணுவத்தை அகற்றி அந்தமக்களைக் குடியேற்ற உதவ இந்தியாவுக்கு மனமில்லை... பௌத்த விகாரைகள புனரமைக்க மட்டும் வேகம் காட்டுகினம்... அதுக்கு ஒரு நம்பியாரை விட்டார்கள் இதுக்கு எந்தத் தம்பியாரை அனுப்பப் போகினமோ....?எல்லாம் இந்த ராமராஜ்ஜியக் காரருக்கே வெளிச்சம்!

**செய்தி :** சனாதிபதி தனது, அதிகாரத்தைத் தேவைப்படும் போது பயன்படுத்துவார் என்கிறார் மகிந்த ராஜபக்ஷ...

மயிலர் :பாவம் மகிந்த ராஜபக்ஷ.... அவரையே தூக்கியெறிய அம்மணி காலம் பார்த்து நிற்கிறார் என்பது விளங்காமல் ராஜபக்ஷ மற்றவர்களை மிரட்டுகிறார் பாருங்கோ.... கொஞ்சநாள் முந்தித்தான் அம்மணியை கொலைசெய்யச் சதிசெய்த குழுவில் ராஜபக்ஷவும் ஒருவர் என்ற செய்தி வெளிவந்ததை மறந்து விட்டார் போலும், அதுவும் அவரை பதவியில் இருந்து இறக்க மேற்கொள்ளப்பட்ட தந்திரம் தான்... பாவம் ராஜபக்ஷ!

# நறுக்கென...

## மீண்டும் சிறைக்குள் ரத்வத்தைகள்...



காலம எப்படி மாறி விட்டது பாருங்கள்.

ஒரு காலத்திய பொதுசன ஐக்கிய முன்னணியின் அதிகாரவலுவும் ஆதிக்கத்திமிரும் கொண்ட அந்தப் பெருந்தலைக்கு இப்படிப் பரிதாபமான நிலை ஏற்படுமென்று எவராவது கற்பனை செய்து பார்த்திருப்பார்களா?

பொதுசன ஐக்கிய முன்னணியினர் செய்த பாவமெல்லாம் இப்பொழுது ஒன்று திரண்டு ரத்வத்தையின் தலையில் அல்லவா வந்து விழுந்திருக்கிறது.

ஜெனரல் ரத்வத்தை பிரதிப்பாதுகாப்பு அமைச்சராக இருந்த அந்த 'முன்னொரு காலத்தில்' 'பப்புவா நியூகினி' யைச் சேர்ந்தவரான 'ஜோயல் பெரா' என்ற நகர்விளையாட்டு வீரர் படுகொலை செய்யப்பட்டவழக்கில் அநுரத்த ரத்வத்தையின் மகன் லொகான் ரத்வத்தை முக்கிய சந்தேக நபரென பத்திரிகைகள் எல்லாம் செய்திகளை வெளியிட் டுப் பரப் பரபரப்பை ஏற்படுத்திய சமயத்தில் அந்தப் பிரச்சினையை தனது அதிகாரச் செல்வாக்கைப் பயன்படுத்தி சத்தமின்றியே மூடிமறைக்க, அந்தவழக்குக்கு என்ன நடந்ததென்றே எவரும் அறிந்து கொள்ள முடியாத வகையில் செய்து விட்ட புண்ணியவான் இந்த ரத்வத்தை.

எத்தனை ஊழல்கள், மோசடிகள், அரசியல் அயோக்கியத்தனங்கள் - சமூகவிரோதச் செயற்பாடுகளில் இவரதும் இவரது புதல்வர்களான லொகான், சானுக்க, மகேன் ஆகியோரும் சம்பந்தப்பட்டுள்ளதாக பல்வேறு தருணங்களில் செய்திகள் வெளிவந்தபோதும் நிறைவேற்று அதிகாரவலுவின் பின்னணியுடன் அவையனைத்தும் மூடி மறைக்கப்பட்டன.

சட்டம், நீதி, பாதுகாப்பு என அனைத்தும் அநுரத்தவின் சட்டைப்பையுள் சுருண்டு கிடந்த காலம் அது...

எத்தனை தமிழ் இளைஞர்கள் யுவதிகளை இவரும் இவரது மருமகளான சனாதிபதியும் அவர்களின் எடுபிடிகளாகச் செயற்பட்ட பாதுகாப்புப்படைகளும் பயங்கரவாதத் தடைச்சட்டம் என்ற கண்மூடித்தனமான - அநீதியான சட்டத்தைப் பயன்படுத்தி சந்தேகம் என்ற பெயரில் கைது செய்து காலவரையறையற்று சிறையில் அடைக்கப்பட்டு சித்திரவதைக்குள்ளாக்கப் பட்டதுடன்... இன்னமும் விடுதலையாகாது துயரை அனுபவித்து வருகின்றனர்.

ரிவிரச, ரத்ஜெய, எடிபல, ஜெயசிக்குறு, ரணகோஷ, வாட்டர்ஷெட், அக்கினிகீல... எனத் தொடர் இராணுவ நடவடிக்கைகளை வடபகுதிகள் மீதும், கிழக்குப் பகுதிகள் மீதும் அநாகரீகமாக மேற்கொண்டு தமிழ்மக்களின் அவலத்தில் கைதட்டி, கொடி யேற்றி, 'பைலா' நடனமாடி இன்னும் என்னனென்னவோவெல்லாம் செய்தவர்.... ஓயாதஅலையில் அடிபட்டு ஒதுக்கிடம் தேடமுடியாது அவமானத்தால் தட்டுத்தடுமாறி அலைந்தவருக்கு காலமும் வரலாறும் வெகுமானங்களை அடுத்தடுத்து வழங்கத் தொடங்கியுள்ளது.

கடந்த வாரத்தில் வெளியான கொழும்புப்பத்திரிகைகள் ரத்வத்தை அவரது இரு புதல்வர்களும் கைவிலங்கால் பிணைக்கப்பட்ட நிலையில் சிறைக்குச் செல்வதற்காக பொலிசாரால் பொலிஸ் வாகனத்தை நோக்கி அழைத்துச் செல்லும்(!) காட்சியை பிரசுரித்திருந்தன....

ஆடைகளின் கம்பீரத்தால் அவமானத்தை மூடிமறைக்க பகீரதப் பிரயத்தனம் எடுக்கும் ரத்வத்தையின் பரிதாப நிலையை அவர்களின் முகங்கள் எடுத்துக் காட்டின...

இவர்களுக்கான பிணை மனுக்களை நிராகரித்து சிறையிலடைக்க உத்தரவிட்ட நீதிபதிகள் 'நீதி' சிறையிலிருந்து விடுவித்திருக் கிறார்கள் என்றே கூறவேண்டும்...

'அதிகாரம் அநீதிக்கு பாதுகாப்பினை தற்காலிகமாக வழங்கலாம். நீதி அதனை பழிவாங்க காலம் தோறும் காத்துக் கொண்டே இருக்கும்...'

## மீண்டும் உறுதிப்படுத்தப்படும் பாதுகாப்பு ஒதுக்கீடு....



'பாதுகாப்புத்துறைக்கான நிதி ஒதுக்கீட்டில் எந்தவிதமான வெட்டும் மேற் கொள்ளப்படவில்லை' என்று அமைச்சர் பீரிஸ், முப்படை மற்றும் பொலிஸ் அதிகாரிகளுக்கு மத்தியில் பேசும் போது கூறியுள்ளமையானது சில செய்திகளை தெளிவுபடுத்துகின்றன.

தேர்தல் காலத்தின் போதும் அதன்பின்னரும் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் ஐ.தே, முன்னணி அரசின் பிரதமரான ரணிலும் ஏனைய பிரமுகர்களும் (பீரிஸ் உட்பட) சமாதானத்திற்காக தமது அரசு அர்ப்பணிப்புடன் திறந்த மனதுடன் செயற்படும் என்றும் போர் நிறுத்தப்பட்டு அதற்கென இதுவரை ஒதுக்கப்பட்டு வந்த பெருமளவிலான நிதி அபிவிருத்திக்கு ஒதுக்கப்படும் என்றும் பாதுகாப்புக்கான நிதி ஒதுக்கீடே இந்த நாட்டின் சகலவளங்களையும் உறிஞ்சி நிற்கின்றதென்றும் உள்ளூரிலும், சர்வதேசத்திலும் வாய்கிழியப் பேசிவந்துள்ளமை தெரிந்த விடயமே.

அது வெறுமனே தென்பகுதி மக்களைத் திருப்திப்படுத்த, தமிழ் மக்களைப் பேய்க்காட்டப் பயன்படுத்தப்பட்ட தேர்தல்கால வெற்றுவாக்குறுதிகள் என்பது இப்போது தெளிவாகி வருகிறது

போர்நிறுத்தம் ஏற்பட்டு, புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தானதன் பின்னர் தான் ஒரேயடியாக அடுத்துவரும் மூன்றாண்டுகளுக்கான ஆயுதக் கொள்வனவு மற்றும் பாதுகாப்புப் படைச் செலவினங்களுக்கான நிதி ஒதுக்கீடு பற்றி ஆராய்ந்தார்கள் என்பதை இச்சமயத்தில் நினைவிற்கொள்ள வேண்டிய விடயமாகின்றது. இந்த நடவடிக்கையின் போது 'திறைசேரி' வெறுமையாக உள்ளது என்று திறைசேரிச் செயலர் சரித்தரத்வத்தை கூறியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

பேச்சு வேறு, செயல் வேறு இது சனநாயக அரசியலின் பொதுப்பண்பாகி விட்டது. பீரிசும் இதற்கு விலக்கல்லவே.... முன்பு மக்களைத் திருப்திப்படுத்த அப்படிப் பேசினார்கள். இப்போது பாதுகாப்பு படையினரைத் திருப்திப்படுத்தவேண்டிய கட்டம்....

அப்போது திறைசேரி வெறுமையாக இருந்தது... இப்போது வெளிநாட்டு.... சமாதானத்தின் பேரிலான உதவிகள் வந்து குவியும் வேளை திறைசேரி காலியாக இல்லை... ஆகவே பாதுகாப்புக்கான நிதி ஒதுக்கீட்டை வெட்ட வேண்டிய தேவையில்லை என்று பீரிஸ் நினைக்கிறார் போலும்... அதுமட்டுமல்ல இராணுவம் ஒருகட்டத்தில் அமைதி நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படும், ஐ.நா அமைதிகாக்கும் படையில் அவர்களுக்கு வேலைவாங்கிக் கொடுக்கப்படும் என்றெல்லாம் கூட இதே அரசு தான் பிரகடனம்செய்திருந்தது.

ஆனால் இப்போது பீரிஸ் அவர்கள் இராணுவத்தின் ஆளணிப்பலமும் அதன் சக்தி மற்றும் ஆயுத வளங்கள் எந்தவகையிலும் குறைக்கப்படாதென்றும், அந்தவகையான எந்த நடவடிக்கையையும் அரசு மேற்கொள்ளாதென்றும் - அந்தக் கூட்டத்தில் கூறியுள்ளார்.

அதேவேளை எந்த வொரு சமாதானத்தீர்வும் எட்டப்படும் பட்சத்தில் அந்தச் சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திடும் முன்னர் விடுதலைப்புலிகள் ஆயுதங்களைக் கீழேவைக்க வேண்டும் என அரசாங்கம் தெரிவித்துள்ளதாகவும் அவர் 'விரிவுரை' யாற்றியுள்ளார்.

ஆக அரசு தனது படைபலத்தை, வளத்தை, அதன் போர் முனைப்பை குறைக்கப் போவதில்லை.

தீர்வு கைச்சாத்தாகும் முன்னர் புலிகள் ஆயுதங்களைக் கீழே போட வேண்டும்.

'பாதுகாப்புச் செலவினம் குறைக்கப்படாது...'

தாய்லாந்தில் சமாதானம் பேசக்குழையும் பீரிஸ் கொழும்பில் ஒரு 'பிரதிப்பாதுகாப்பு' அமைச்சரின் தொனியிலேயே பேசியுள்ளமை தெளிவாக உள்ளது.

## இடதுசாரிகள் ஜே.வி.பியின் தலைமையை ஏற்பார்களா?



அண்மையில் சிறிலங்காவின் சனாதிபதி சந்திரிகா உதிர்த்துள்ள மற்றொரு கருத்து முன்னாள் (?) அல்லது பழம் பெரும் இடது சாரிக்கட்சிகளுக்கும்... இடதுசாரித்துவம் பேசிக் கொண்டே காலத்தைக்களித்து வந்துள்ள முன்னோடி பொது உடமைச் சித்தாந்த வாதிகளுக்கும் ஓங்கி முகத்தில் அறைந்த ஒன்றாகவே உள்ளது.

அதாவது அம்மையாரின் 'அருள்வாக்கின்' படி தற்போது சிறிலங்காவின் இடதுசாரி அணிக்கு தலைமையேற்கும் தகுதி நிலையில் ஜே.வி.பி.யே இருக்கின்றதாம்!

தற்போது தனது எதிர்கால அரசியல் நலனுக்காக சந்திரிகாவும் தமது எதிர்கால அரசியல் இலக்கினை எட்டுவதற்காக ஜே.வி.பி.யும் ஒருவரையொருவர் பொறிக்குள் சிக்கவைக்கும் தந்திரோபாயத்துடன் கூடிய 'கூட்டணி' அமைப்பு முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டுள்ள தருணத்தில்..

ஜே.வி.பியுடன் புதிய இணக்கப்பாடுகளை எட்டுவதில் சந்திரிகா முனைப்புடன் செயல்பட்டு வருவதால், ஏற்கனவே சிறிமா காலம்முதல் சிறிலங்கா சுதந்திரக்கட்சியை 'இடது சாரித்தனம்' கொண்ட கட்சியாக நம்பி, பதவிக்கதிரைகளுக்காகத் தமது சமதர்ம இலட்சினைகளை தாரைவார்த்துவிட்டு - வெறும் சித்தாந்தங்களை வாயளவில் மட்டுமே உதிர்த்துக் கொண்டு சந்திரிகாவின் ஆட்சிக்காலம்வரை - அதன் இனவாத அரசியலை அங்கீகரித்து, தமிழ் மக்களுக்கெதிரான அதன் போர் முனைப்புக்கும், ஆக்கிரமிப்பு செயற்பாடுகளுக்கும் மௌன அங்கீகாரம் அளித்த சிறிலங்கா சமசமாஜக்கட்சியும், கம்யூனிஸ்ட் கட்சியும் ஏனைய அரைகுறை இடதுசாரிகளும், அதிருப்பதியுற்று பொதுசனஜக்கிய முன்னணியில் இருந்து சிறிலங்கா சுதந்திரக் கட்சியை நீக்கத் திட்டமிட்டிருக்கும் வேளையில்....

சந்திரிகா இந்த ஜே.வி.பி.யின் தலைமைதாங்கும் தகுதி நிலைபற்றிய தனது மதிப்பீட்டை பகிரங்கப்படுத்தியுள்ளார். இதன் மூலம் அவர் சொல்லவரும் செய்தி இதுதான்... தற்போது பொ.ஐ.முன்னணிக்குள் அங்கம் வகிக்கும் இடதுசாரிக்கட்சிகள் அனைத்தும் ஜே.வி.பியின் தலைமையின் கீழ் ஒன்றிணைய வேண்டும். அல்லது தமது அமைப்புக்களைக் கலைத்து விட்டு சோமவன்ச அமரசிங்க, விமல் வீரவன்ச மற்றும் ரில்வின் சில்வா போன்றவர்களின் தலைமையின் கீழ் இணைந்து விட வேண்டும் என்பதே அதுவாகும்.

ஒருகாலத்தில் தமிழ் சிங்கள வெகுசனங்களிடையே புத்திஜீவிகள் மற்றும் அரசியல் தெரிந்தோர்களின் மதிப்புக்கும், கௌரவத்திற்கும் உரியவர்களாக விளங்கிய இடது சாரித்தலைமைகள் சிறிமாவோவின் அரசில் இணைந்து செயற்பட ஆரம்பித்த போது தான் அவர்களின் தனித்துவ, அரசியல் செல்வாக்கு சரியத்தொடங்கியது.

குறிப்பாக தமிழ்மக்கள் மத்தியில் அவர்களது சமதர்ம விலாசம் 'இனவாத' விலாசமாக மாறியது.


இது சிறிமாவோவின் ஒரு அரசியல் 'சதி' அல்லது 'பொறி' என்று தான் பல மூத்த அரசியல் விமர்சகர்கள் கருதுகிறார்கள்.

பேரினவாதம் சமதர்ம சிந்தனைகளுடன் ஒரு போதுமே சமரசம் செய்து கொண்டதில்லை.

இப்போது அம்மா தொடக்கி வைத்த 'சரிவை' குழியில் போட்டு மூடும் முயற்சியில் அம்மணி ஈடுபட்டுள்ளார். பாவம் இந்த இடது சாரிகள் தமது தனித்துவத்தை இழந்து இயலாத நிலையில் மிச்சமிருக்கும் (?) கௌரவத்தையும் காற்றில் பறக்க விடப் போகிறார்களா?

சிலமாதங்களில் தெரிந்து விடும்....

## இந்திய நிலைப்பாடும் சந்திரிகாவின் மௌனமும்.



சிறிலங்காவின இனப்பிரச்சினைக்கான தீர்வொன்றை எட்டுவதற்கான சமாதான முயற்சி முன்னெடுப்புகள் குறித்தும் போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு- கிழக்கு பகுதிகளின் புனரமைப்பு மற்றும் பாதிக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்வு குறித்தும் ஜப்பான் காட்டிவரும் ஆர்வம்மிக்க ஈடுபாடு இந்தியாவினால் ஏற்றுக் கொள்ள முடியாத இன்னும் சரியாகக் கூறுவதானால் இந்தியாவால் சகிக்க முடியாத ஒன்றாக இருப்பது வெளிப்படையாகத் தெரியும் விடயமாகிவிட்டது.

வடக்கு-கிழக்கில் பௌத்த ஆலயங்களைச் சீரமைக்கவும் புனரமைக்கவும் இந்தியத் தூதர் ஆர்வம் காட்டுகையில், அதே பகுதி மக்களின் - வாழ்விடங்களில் புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு நடவடிக்கைக ளில் ஜப்பான் மட்டுமல்ல வேறெந்த நாடும் ஈடுபடுவதை இந்தியா விரும்பவில்லை. இதற்கு அதன் புவிசார் அரசியல் அபிலாஷைகள் காரணமாக இருக்கலாம்.

இந்தியாவின் இந்த அரசியல் உள்நோக்கம் கொண்டதான போக்கு ஜப்பானுக்கோ- ஏனைய நாடுகளுக்கோ புரியாத ஒன்றுமல்ல. ஆனால் சமாதானத் திற்கான செயற்பாடுகளில் ஆரோக்கியமான, அவசியமான, சர்வதேச ஆதரவுடன் கூடிய முன்னெடுப்புகளை, மற்றும் தீர்மானங் களை இந்தியா எதிர்ப்பதோ, அல்லது விரும்பாமல் இருப்பதோ இந்தியா குறித்த உலக அபிப்பிராயத்தில் பாதிப்பை ஏற்படுத்தவே செய்யும்.

ஏன்... ஜப்பானிய சிறப்புத் தூதுவர் 'இலங்கை அரசையும் விடுதலைப்புலிகளையும் ஜப்பான் இந்தச் சமாதான செயற்பாடுகளில் சமநிலையில் வைத்தே நோக்கும் .- செயற்படும் என்று தெளிவாகவும் திட்டவட்டமாகவும் கூறியிருப்பது சிறிலங்காவின் பேரினவாதிகளை அதிர்ச்சியடைய வைத்துள்ளது.

'ஒரு பௌத்த நாடு இப்படிச் சொல்லலாமா? என்று பேரினவாதத் தலைவர் ஒருவர் அதிர்ந்து போய்க் கூறினாராம்.

இதேவேளை தாய்லாந்து, ஜப்பான், சீனா போன்ற பௌத்த நாடுகள் புலிகளுடனான சமாதானப் பேச்சு வார்த்தையை பகிரங்கமாக ஆதரித்து அனுசரணை செய்வதும் பௌத்த மதபீடங்களுக்கும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதாம்.

ஜப்பானின் சிறப்புத் தூதரை சந்திரிகா அம்மையார் சந்திக்க மறுத்ததும், பின் அதற்குச் சமாதானம் கூறியதும் பிற அழுத்தங்கள் காரணமாகத் தானாம்...

பேரினவாதிகள் எல்லாருமே தலையைச் சொறிந்து, கைகளைப்பிசையும் நிலையை ஜப்பானியத் தூதரின் நேர்நோக்குடன் கூடிய வார்த்தைகள் ஏற்படுத்திவிட்டது உண்மையே.

உண்மை சுடத்தான் செய்யும். அதற்கு என்ன செய்ய முடியும்?


சரி ஜப்பானின் முயற்சியை இந்தியா எதிர்ப்பது குறித்து சந்திரிகா என்னதான் சொல்கிறார்....

அவர் கருத்துக் கூற மறுத்துவிட்டார். இந்த விடயத்தில் கருத்துக் கூற நான் விரும்பவில்லை எனக்கூறிய அவர் இந்த விவகாரத்துடன் நான் சம்பந்தப் படவில்லை என்றும் ஒரு நழுவல் பதிலைக் கூறியுள்ளார்.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளில் ஜப்பானே முதலிடம் வகிக்கிறது என்பது மட்டுமல்ல.... மீண்டும் தனது கட்சி ஆட்சிக்கு வரநேரிட்டால் ஜப்பானின் உதவிகளுக்காக கையேந்துவது தவிர்க்க முடியாதது என்பது சந்திரிகாவுக்குத் தெரியும்.

இதுவே அனைத்திற்கும் காரணம் என்று சொல்லலாமா? சொல்லிவிபரிக்க முடியாத காரணங்களும் அழுத்தங்களும் கூட இருக்கலாமல்லவா?

**செங்குட்டுவன்**



# தன்ரபண்டம் அரிசி தங்கச்சிபண்டம் தவிடு

**புரிந்துணர்வு** உடன்படிக்கை வந்தாலும் வந்துது. சனம் 'ஏனைன்' வீதியைச் சக்கைவேறு சாறு வேறாத்தான் புழியுது. அதுசரி இவளகாலமா நானும் பிறந்து வளர்ந்து இந்த வீதிய அண்டித்தான் சீவிக்கிறன். சின்ன வயசில 'கரிக்கோச்சி'யில வவுனியாவுக்கும் யாழ்ப்பாணத்துக்கும் போகேக்க கெடுப்பட்டு, எஞ்கினுக்குப் பக்கத்துப் பெட்டியில ஏறுவம். கழுத்த நீட்டி வெளியாலபாகக, கரித்துாள் கண்ணில விழும். ஆத்தை "தலைய நீட்டாதயுங்கோடி. பாலம்வந்தா தலைய வெட்டிப்போடும்" எண்டு பிறடியில அடிப்பா. அப்ப நொச்சி மோட்டையிலும் ஆனையிறவிலுந்தான் தலைவெட்டிப்பாலம் இருந்தன.

இப்ப ரெயிலுமில்ல தலைவெட்டிப்பாலங்களுமில்ல. என்ன காலம் பற ஒரு வசு. பின்நேரம் ஒரு வசு எண்டு ஒவ்வொரு ஊராலும் வரும். எங்கட ஊருக்க அய்யாத்துரையர் தான் 'அயரு'க்கு காரோடினது. அப்ப ஏதேன் செத்தவீடெண்டா அஞ்சாறுபேர் சேர்ந்து தனிக்கார்பிடிச்சு யாழ்ப்பாணம் போகில் முப்பதுரூவா கார்க்கூலி. மாட்டு வண்டில் கட்டியும் போறதுண்டு. கூடாரவண்டில் தான்.

பின்ன இதெல்லாம் இப்ப ஏன் சொல்லுறனண்டா. இந்தக்காலத்தில உப்பிடி கணக்கு வழக்கில்லாத அளவில சனம் அங்காலும் இஞ்சாலும் பிழங்குதுகள். நகரங்கள் பெருத்தும், ஊருகள் சுருங்கியும் போச்சுது. பின்ன ஒப்பந்தம் வந்த உடன 'காஞ்சமாடு கம்பில விழுந்த மாரி' சனம் அவாப் பட்டு ஓடித்திரியுது. வன்னிக்க 'வசு'க்காறர் இதோட உழைச்சுப் போட வெண்டு சனத்தை வாகனத்துக்க திணிக்கிறாங்களாம்.

எட, எரிபொருள் தட்டுப்பாடு. வாகனத்தட்டுப்பாடு, இதுகளுக்க நாலுகரையும் செல்லடிக்கவும், அஞ்சாம ஆமி புறமுதுகிலை சுட்டாலும் சுடுவான் எண்ட நிலைமையிலும், கிளிநொச்சி இரணைமடுச் சந்தியாலும் ஐயன்குளத்துக்கு கொக்காவில்லாலும் வசு ஓடினவங்கள் தான். நானறிய மாங்குளத்தால ஒட்டு சுட்டானுக்கு ஒரு தட்டிவானில போவம். புதுக்குடியிருப்பு வான்தான். மணவாளம்பட்ட முறிப்படியில எதிரிலவாற வாகனகாறர் செல்லடிக்கிறான் எண்டு சொல்லிப் போட்டுப் போறார். எங்கட வான் ரைவர் சொல்லுறார். "செல்லடிக்கு என்னேயிறது பலனிருந்தா விழும்" எண்டு. சொன்னதோடயில்ல ஆள்நிக்காம ஓடுறார். கடவுளே ஒட்டு சுட்டான் திரும்ப 'சமீர்' 'ச்சமீர்' எண்டு செல்விழுற சத்தம் பக்கத்த கேக்குது. வாகன மெண்டா பறக்கிற கியரில தான் ஓடுது. மனிசன் பேராத்தில போய்த்தான் நிப்பாட்டிச்சுது.

இப்பிடிப் பட்ட வசுக்காறரை நாங்கள் பாராட்டினதில்லைத்தான். ஆனா திட்டாம விட்டிருக்கிறமோ. என்ன மூக்கில கை வைக்கிறியள். இந்த மனிசிக்கென்ன தட்டிக்கிட்டிப் போட்டு தெண்டு பாக்கிறியளோ. ஒண்டுமில்லை.

ஞானம் வெளிச்சிருக்கு' ஞானம் எண்டா அறிவு. மண்டை வெளிச்சிருக்கு எப்பிடி?

இவளநாளும் வவுனியாவுக்க மோட்டச்சயிக்கில்ல ஹாயாப்போய் ஹாயா வந்தநான். இப்ப போன முப்பதாந்திகதி சாரதி அனுமதிப்பத்திரமில்லாம மோட்டச் சயிக்கில் கொண்டுபோகேலாதெண்டு ஆமி சொல்லிப் போட்டான். என்ன செய்யிறது? மோட்டச் சயிக்கில விட்டுப் போட்டு சீ-ரீப்பீ வசுவில போகவேண்டியதாப் போச்சு. பொடியன்பாடு பறவாயில்ல சனத்தோட சனமா மேவிருவாங்கள். நான் வரிப்புலிச் சீருடை இல்லாட்டியும் காற்சட்டை சேட்டும் இடுப்பில கறுப்புப் பட்டியும் கட்டியிருந்தன். என்ர பஸ்பயணத்தை ஏன் சொல்லுறியள்.

போனா - அஞ்சு பஸ்நிக்கிது. நானும் போக, கொழும்பு கொழும்பெண்டு கத்துறான் சிங்களப் பெடியன்தான். கொஞ்சம் தாமதிச்சிட்டு 'வவுனியா எந்த வஸ்' எண்டு கேட்டன்.

"மேடம் நீங்கள் இதில ஏறுங்க," எண்டான். ஏறிற்றன். ஏற்கனவே சனம் நிறம்பீட்டுது நானும் ஏறிஒரு கம்பியோட நிண்டன். பிறகென்ன ஏத்துறான், ஏத்திறான் அப்பிடி ஏத்துறான் ஒரளவுக்கு நிக்கிறவை அங்கால இஞ்சால திரும்பேலாது. எண்ட ளவில பஸ் வெளிக்கிட்டுது. வெளிக்கிட்டு ரோட்டுக்கு ஏறின உடனே ரண்வேயில ஓடி வானத்தில எழும்பீற்றுது. மேல எலியோடிக்கை கையக்குடுத்தவை ஒவ்வொரு சந்தும் திரும்பேக்க ஆனந்த விகடனில வாற காட்டுன் சித்திரங்கள் மாதிரி பாயினம். அப்பிடி கண்வெட்டித்திறக்க வவுனியா பஸ் நிலையத்துக்க வந்து நிக்குது வஸ். ஓ என்னப்போல கனபேர் வேகம் தாளாம கண்ணை மூடித்தான் போட்டினம். எனக்கெண்டா வயித்தப் பிரட்டுற மாதிரிக் கிடக்கு.

இறங்கி அடுத்து நான்போக வேண்டிய வஸ் பக்கத்திலயே நிக்க அதில ஏறினன். ஓமந்தை 'ரூ' வவுனியா பதினைஞ்சு ரூவா - இருவது ரூவாயில அஞ்சுரூபா மிச்சம் அது இந்த வசுவுக்கு தமிழீழம் வன்னியில இன்னுந்தான் உந்தவசுக்காசு குறையேல்ல. இஞ்ச 'ஆறுகப்பல் வந்தாலும் பாறுகப்பல் அரிசிக்கப்பல் வந்தாலும் தவிட்டுக்கப்பல்' ஒருநாளும் விடியாது.

பின்ன வசு வெளிக்கிட்டுத்து. நான் காசை நீட்டி இடத்தைச் சொல்ல கண்டக்டர் சின்ன சிரிப்புச் சிரிச்சுப் போட்டு அங்கால போட்டான். காசு வாங்கேல்ல. உரிய இடத்தில இறக்கிவிட்டு போட்டு 'வாங்கோ அக்கா சந்தோசம்' எண்டான். பஸ்சுக்க நிறைய அறிஞ்சசனம். அவையும் சந்தோசமா கதைச்சினம்.

இறங்கின இடத்தில வேலை முடிஞ்சு ஒரு மணித்தியாலத்தால இன்னொரு கிராமத்துக்குப் போக பஸ் எடுக்கவேணும். வந்து ரோட்டில நிண்டன் ஒரு மினிபஸ்... மறிச்சன் நிண்டுது. மிதிபலகையில நிண்டவைய மோதிநெரிச்சு ஒரு மாதிரி உள்ளுக்க போயிற்றன். ஒரு காலக் கீழவச்சிட்டன் மற்றக்கால் வேற ஆற்றயோ காலுக்கு மேல நிக்குது. இதுக்க, மாற்று இயக்கப் பெடியள் இரண்டு அதே பஸ்ஸில வருகினம். ஒரு நட்புரீதியான சிரிப்பு பிறகு நான் அந்தப்பக்கம் பாக்கேல்ல.

கண்டக்டர் - காசு நீட்ட வேண்டாமெண்டு கையமர்த்தினார். ரவுணுக்க இறங்கி அடுத்தபஸ், இப்பவும் மாலை ஆறுமணியை நெருங்கிக் கொண்டிருக்கு கடைசி பஸ் நிறம்பி வழியிது, கண்டக்கடர் திரும்பத்திரும்ப சனத்தக் கூப்பிடுறான். அந்த பஸ்சும் தமிழீழமொடல். தகரங்கலெல்லாம் கறள் பிடிச்சு, வயருகளெல்லாம் புடுங்குப்பட்டு, ரைவர் வந்து குறட்டால அதையிதை முறுக்கி ஸ்ராட் பண்ண ஒரு மாதிரி உறுமுது. இதுக்குள்ள பஸ்ஸுக்க சனம் ஒண்டையொண்டு மிதிக்கத் துவங்கிற்றுதுகள். "என்னப்பா - 'இடிக்காத' ஸ்...ச்ச"எண்டு சத்தம் வருது. என்ர மடியில ஆற்றயோ பிள்ளை யொண்டு இருக்குது. சுத்தவரசாமான் பொட்டலங்கள். இனி ஏலாதெண்ட நிலையில வாகனம் வெளிக்கிடுது. வன்னியிலமாதிரி ஆரும் வாய் திறக்கோணுமே.? ஊகும் வஸ் வெளிக்கிட்டு ஓடத்துவங்கினா ஏன் கேக்கிறியள். நரகலோகத்தை நான் அண்டைக்குத்தான் நேரகண்டன். ஆனா அங்கயெல்லாம் மனிசர் வசிக்கினம். அதைப்பற்றி தனிய எழுதுறன். வெளியால முகப்பூச்சு உள்ளுக்கு தொழுநோய் இதுதான் வவுனியா.

பஸ்காரர் நான் போகவேண்டிய இடத்தில இறங்கி ஒரு கடைக்காரரிட்ட எனக்குரிய வீட்டையும் காட்டச் சொல்லிக் கேட்டுத்தான் போகினம் - இவரும் கட்டணம் எடுக்கேல்ல.


மற்றநாள் நெளுக்குளம் பயணம் இதே போல நகரத்துக்கான பஸ் ஆட்களேயில்லாமல் வந்தது. நான் கட்டாயப்படுத்தி கட்டணம் ஆறுரூபாவைக் குடுத்தன். அங்கயிருந்து நெளுக்குளம் அஞ்சு ரூபா குடுத்தன். வரயுக்கயும் கால்வைக்கவே இடமில்லாத ஒரு வசுவில வந்தன். அதிலயே ஒரு சிறிலங்காப் பொலிசுக் காறரும் ரெண்டு ஆமிக்காறரும் வந்திச்சினம். எல்லாம் நேரந்தான். ஒரே வசுவில பல கோணங்கள் சந்திக்குதே எண்டு நினைச்சன்.

நகரத்துக்கு போய் ஓமந்தைக்கு வசுபிடிக்கப் போனா வெளிக்கிட ஆயத்தமா நிண்ட ஒரு வஸ் சாரதி - என்னப்பாத்த உடன "இதில ஏறமாட்டிங்கம்மா அடுத்தவஸ்ஸில வாங்க" எண்டிட்டார். அடுத்தது உடனே வந்துது. எங்கட ஊரப்போல சனம்கொஞ்சம் ஏறினபிறகு ஏறினன். முன்பக்கமா ரெண்டு பொடியள்.

பின்னால இருந்து ஒரு பொம்பிள இறங்கிவாறா பக்கத்தில நிண்ட சிவலைப் பெடியன் சிங்களத்தில என்னை அந்தச் சீற்றில இருக்கச் சொல்லிக் கேக்கிறார். பரவாயில்லை. அங்கால பிள்ளையோட நிண்ட ஒரு பொம்பிள்ளயை அதில இருக்கவிட்டன். வஸ் ஓமந்தையில நிக்க அந்தப் பொடியளும் இறங்கி என்னோட கதைச்சபடியே வந்து தங்கட காவல் நிலைக்குப் போகினம் "நல்லம் அம்மா. போயிட்டு வாங்க" எண்டான் அவன். நானும் பயணப்பையச் சுழட்டிக்கொண்டு எங்கட பகுதிக்க போக வாறன். இல்ல இந்த வசுவில போக வேண்டி வந்ததால தான் ஒண்டை நினைச்சன். எல்லாவஸ்சும் ஒரே மாதிரித்தான். எங்கடசனம்... இயக்கத்தோட எடுத்ததுக் கெல்லாம் பாயுறமாதிரி அங்க பாயிறதில்லை. அவையள் அந்நியம். இது எங்கட பிள்ளையள் தானே எண்ட உரிமைதான் வேறயென்ன? "தன்ர பண்டம் அரிசி தங்கச்சிபண்டம் தவிடெண்டாளாம்" ஒருத்தி.

**- மாயா**

---



# செவ்வாயில் மனிதன் இறங்கமுன்...

செவ்வாய்க் கோளுக்கு அடுத்த ஓடும் வாகனத்தை அமெரிக்கா அனுப்பவுள்ளது. ஏற்கனவே 1997 அமெரிக்கா பாத்பைன்டர் என்ற விண்கலத்தை தரையிறக்கி சோஜேணர் என்ற 6 சக்கர வாகனத்தை ஓடச்செய்தது.

இதற்கடுத்ததாக இந்த ஆண்டில் 2வது ஓடும் வாகனத்தை அமெரிக்காவின் நாஸா நிறுவனம் தரையிறக்கி ஓட்டவுள்ளது.

சூரியமண்டலத்தில் பூமிக்கு அடுத்ததாக, பூமிக்கு மிக அண்மையாக, ஒத்ததாக செவ்வாய் கருதப்படுகின்றது. செவ்வாயில் உயிரினத்தேடல் நடைபெறுகின்றது. சோவியத் யூனியனும் - அமெரிக்காவும் மாறி மாறி செவ்வாய்க்கு விண்கலங்களை அனுப்பி வருகின்றன. செவ்வாயில் முதலில் விண்கலத்தை தரையிறக்கிய நாடு சோவியத் யூனியன் 1991ல் சோவியத் கலைந்து போனதுடன் - பொருளாதார நெருக்கடியால் சோவியத்தின் விண்ணாய்வுகள் மட்டுப்பட்டன. செய்யப்படும் விண்ணாய்வுகளும் பன்னாட்டுக் கூட்டுறவிலேயே சோவியத்தின் பிரதான சக்தியாக இருந்த ரஸ்யாவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

இந்த வகையில் 1996ல் ரஷ்யா செலுத்திய மார்ஸ் 96 விண்கலம் புறப்பட்டசிறிது நேரத்திலேயே விண்ணில் சிதறியபோது அதன் செவ்வாய் விண்கல நடவடிக்கைகள் நின்று போயின. ஆனால் செவ்வாய்க்கு முதலில் தானே மனிதனை அனுபவேண்டும் என்பதில் ரஷ்யா தீவிரமாக உள்ளது. விண்வெளி ஆய்வில் பல 'முதலில் களை' நிகழ்த்திய ரஷ்யா - இதுவரை எந்த ஒரு



பிறகோளிலும் (சந்திரனுட்பட) தனது மனிதர்களை தரையிறக்கவில்லை.

பூமியின் சுற்றுப் பாதைக்குள்ளேயே ரஸ்யாவின் மனித விண்பயணங்கள் அமைந்தன. அமெரிக்காவும் கூட விண்வெளியில் தான் எதையாவது 'முதலில்' சாதிக்க வேண்டும் என்ற சோவியத்துடனான அரசியல் போட்டியிலேயே சந்திரனில் மனிதரை தரையிறக்கியது.

சந்திரனைத் தவிர பிறகோள் எதற்கும் இதுவரை மனிதன் செல்லவில்லை மனிதன் அனுப்பிய விண் கலங்களோ சூரியமண்டல எல்லையைத் தாண்டிப்பயணித்துக் கொண்டிருக்கின்றன.

செவ்வாயில் தானமனிதனை முதலில் தரையிறக்க வேண்டும் என்ற போட்டியில் அமெரிக்கா செவ்வாய் ஆய்வை தொடர்கின்றது.

1997ல் பாத்பைண்டர் தரையிறக்கத்தின்பின் 'மார்ஸ் குளோபல் சேவையர்' விண்கலத்தை நாஸா அனுப்பியது அது செவ்வாயை தொடர்ந்து வலம்வந்து அதன் வரைபடத்தை தயாரிக்க உதவியாகப் படங்களை அனுப்பிக் கொண்டிருக்கின்றது. சேவயரை அடுத்து ஶ்ரீமார்ஸ் போலர் லான்டர்' என்ற விண்கலத்தை நாஸா செவ்வாயின் துருவத்தில் தரையிறக்கியது. தரையிறங்கியதுடன் அதன் தொடர்பை நாஸா இழந்து விட்டது, ஆகவே 'போலர் லான்டர்' தோல்வியடைந்தது.

அதன் பின் 'மார்ஸ்பேஸ்ஒமஸி' செவ்வாய்க்கு அனுப்பப்பட்டது. அது செவ்வாயினை வலம் வந்து கொண்டிருக்கின்றது.

இதன் அடுத்தகட்டமாக செவ்வாயில் தன் 2 வது வாகனத்தை இறக்கி ஓட்டநாஸா தயாராகி வருகின்றது. இது செவ்வாயின் தரையில் நாளொன்றுக்கு 100மீற்றர் தூரம் ஓடி ஆராயும்.

இது செவ்வாயில் மனித தரையிறக்கத்தை நிகழ்த்த முன்னோடியாக அதற்கான இடத்தை தெரிவு செய்யும் நடவடிக்கையாகும்.

அடுத்த ஆண்டு செவ்வாயில் உள்ள பெருங்கால்வாய்கள் நீரோடைகளாக இருந்தனவா என்பதை ஆராய ஒரு ஆய்வு கூடத்தை செவ்வாயில் நிறுவ நாஸா ஆலோசிப்பதாக நாஸா ஆய்வாளர் கலாநிதி கார்வின் கூறினார்.

அமெரிக்கா செவ்வாயில் தீவிரமாக இருக்க ஐரோப்பிய விண்ணாய்வு மையமான - ESA யும் ஜப்பானிய விண்ணாய்வு மையமும் செவ்வாயில் கவனம் செலுத்தத் தொடங்கியிருக்கின்றன.

தென்னாசியச் சூழலில் செவ்வாயில் தீவிரஅக்கறை இருக்கிறது - எதில்? - சோதிடத்தில்!!

**து. அருவி**



# தாய்மடி வாசம் 10

அந்தப்பிஞ்சுக்கைகள் எனக் காய்த் தந்த வாழையிலையை என் கைப்பையில் வைத்துக் கொண்டு அம்மாவிடமும், அம்புலியிடமும், அம்புலியின் போராளிக் கணவரிடமும், கங்கையிடமிருந்தும் விடை பெற்றுக் கொண்டு புறப்படுகிறோம்...

**இருள்** போர்த்தக் காத்திருந்த மாலைப்பொழுது. பகல் வெக்கையைத் தன்னுள்ளே அள்ளிக்கொண்டு அந்தக்கடற்காற்று எங்களையும் இதமாகத் தொட்டது.
இந்தக்கடலுக்கு என்னபேர் நந்தா? நந்திக்கடல்.பரந்து நீண்டிருந்த நந்திக்கடலின் அருமைபற்றி உலைக்களம் வியாசன் எழுதிய கவிவரிகள் என் நினைவை ஒருகணம் ஆக்கிரமித்து மீள்கிறது.

"மெல்லப்போங்கோ நந்தா நல்ல வடிவாயிருக்கு இந்த இடம். வியாசனின்ரை கவிதையிலை படிச்ச நந்திக்கடலை நேரிலை தரிசிக்கிறதுக்குக் கிடைச்சிருக்கு... நந்தா... இந்த இடங்களுக்கெல்லாம் வருவனெண்டு கனவிலைகூட நினைச்சிருக்கேல்லை."
"எனக்குப் பிடிச்சதே வன்னிதானக்கா... நல்ல வளமிக்க பூமி" சொன்னாள் நந்தா.
"எனக்கும் தான் நந்தா. வன்னியிலை பிடிச்ச இடமே இந்த முல்லைத்தீவு மண்தான்."
இனிதாய் வந்துரசிப்போய்க்கொண்டிருந்த நந்திக்கடலின் காற்று அந்த இடத்திலேயே இருந்துவிடு என்றிருந்தது.

அப்பாவுடன் சின்னவயதில் ஒவ்வொரு சனியும் மீன் வாங்கப் போகும் மயிலிட்டிக் கடலிப்போ சிங்களம் ஆழ்கிறது. வசாவிளானில் படித்தபோது தோழிகளுடன் பலாலிக்கடல் பார்த்துக் குளித்த நாட்களும், ஒவ்வொரு ஆடி அமாவாசைக்கும் மாவிட்டபுரத்தீர்த்தமாட கீரிமலை சென்று குளித்ததும். எழுந்து வரும் பேரலையை எதிர்த்து நின்று விழுந்ததும், அப்பாவின் நேசத்திற்கினிய சன்னிதியான் கடலும், வல்லிபுரக்கடலும் நினைவோடு சேர்ந்து அந்தக் கடற்கரைகளில் கொண்டுபோய் நிறுத்தியது,

*அப்பாவின் அப்புச்சயிக்கிள் கரியலில்*
*கடகடா குடுகுடா...*
*கரகர... சத்தத்துடன்*
*மயிலிட்டிக் கடல் பார்க்க*
*அந்த மணல்த்தரையில்*
*விளையாட மனசோடிப் போகிறது...*

*பலாலிக்கடல் பார்க்க விரும்பி*
*பொய் சொல்லி அம்மாவுக்கு*
*பலாலித் தோழியை*
*பக்கத்துணையளைத்து*
*அலைவரக் கரை ஓடிவந்து*
*அதன்பின் போய்க் குளித்து*
*அந்த உடை காயும் வரை*
*அங்கேயே தவமிருந்து*

*பலநாள் ஆசை நிறைவேற்றி*
*பலாலிக்கடல் பார்த்த*
*பழைய ஞாபகத்தில்*
*தேனூறி இனிக்கிறது...*

*தோளுயரம் நீர்வரைக்கும்*
*தோளுயர்த்தி நிமிர்ந்து நின்று*
*தலைமூடி அலைவரும் வரைக்கும்*
*அம்மாவின் எச்சரிப்பு*
*எதுவும் காதில் ஏறாது*
*அலையடித்து வீழ்த்திவிட*
*அந்தக்கல்லில் அடிபட்டு*
*காலில் ரத்தம் கசியும் வரை*
*எதிலும் கவனம் இருக்காது*

*காதில் ஏறாத வார்த்தையெல்லாம்*
*கல்லடித்தபின் அம்மா என அழுது*
*அப்போ வரும் ஞானம்*
*கீரிமலைக்குளிப்பின் நினைவு சொல்லி*
*நெஞ்சேங்கி நிற்கிறது...*

*அப்படித்தான் சன்னிதியும்*
*வல்லிபுரக்கடல் நினைவும்*
*வந்து வந்து ஆயிரம்*
*வரலாறு சொல்கிறது...*

அம்மாவுக்குத் தெரியாமல் அடிக்கடி போய் வந்த வண்ணாத்திப்பால ஆறும் நினைவோடு சேர்ந்தன... இனியெப்போ அந்தக் கரைகளிலெல்லாம் காலாற நடப்பது ஏக்கமுடன் நான் சொல்ல... "நீங்க அடுத்தமுறை வரேக்கை அங்கையெல்லாம் குளிக்கலாமக்கா.."

என் ஏக்கங்கள் நிறைவாகுமென வாக்குச் சொன்னாள் நந்தா. எங்களுக்கு முன் ஒரு மாடுகளின் தொகுதி. எம்மை வழிமறித்தது, நாங்கள் அவர்களுக்கு வழிவிட்டு ஒதுங்கி நிற்கிறோம். அந்த மாடுகளின் சொந்தக்காரன் மாடுகளைச் சாய்த்துக் கொண்டு போகிறான்.

எங்கள் ஊரில் தோட்டங்களிலிருந்து திரும்பும் போது தோட்டக்காரருடன் மாடுகளும் மாட்டு வண்டிகள் சுமக்கும் வாழைக்குலை, வெங்காயம், கத்தரி, வெண்டி, பாகற்காய், பயிற்றங்காய், புடலங்காய், பீற்கங்காயென்று எங்களது விவசாயிகளின் வேர்களான அந்தக் காய்களும், கனிகளும் எத்தனை இனிதான வாழ்வுக்கு அன்று கட்டியம் கூறிநின்றன.
இவையெல்லாவற்றையும் எந்தப்பேய்க்காற்றுகலைத்துப் போட்டதுவோ... நாங்களும் தொலைவாகி, எங்கள் காணிநிலங்களும் தனியாகி, காய்கறிகளும், அவைகாய்த்த தறைகளும் அவர்களின் டாங்கிகளும், கவசவாகனங்களும் உழுதுபோகும் நிலமாகி...

*போயிற்று எல்லாம்*
*எம் பொன்னூரும், நெல்வயலும்,*
*வளம்மிக்க விவசாய நிலங்களும்,*
*நாம் வாழ்ந்திருந்த நல்வாழ்வும்*
*பேய்தின்னக் கொடுத்து*
*வீதியிலே நாம் கிடந்து*
*விதியேயென்றழுது – நாம்*
*விழிமூடிக்கிடந்திருக்க*
*வீறுகொண்டெழுந்த*
*வேங்கையணி*
*படைத்த வெற்றிகளின்*
*பின்னால் நாம்*
*வன்னியைப் பெற்றோம்.*

*பகை சூழ்ந்த*
*யாழ் மண்ணும்*
*கரையோடி விளையாடி*
*மனசைக் கரையவைக்கும்*
*கடற்கரை மணல் நிலமும்*
*காணிப்புலங்களும்*
*கண்ணெட்டும் தூரம்வரை*
*குவிந்திருக்கும்*
*உறவுகளும்*
*கூடிடும் நாள் ஒன்றுக்காய்*
*கைகளில் கருவியேந்தி*
*களம் வந்த*
*என் அன்பு நந்தா போல்*
*இந்தத் தேசமெங்கும்*
*தங்களைத் தந்துநிற்கும்*
*வேங்கைகளின் கால்களுக்கு*
*ஓய்வொன்றுவிரைவாய் எட்டாதோ...?*
*அவர்களும் எம்போல்*
*ஆறுதலாய் தூங்கியெழ*
*ஒரு பொழுது உதிக்காயோ*
*விரைவாய்...?*

"என்னக்கா பேசாம வாறீங்கள்..?" அமைதியாய் வந்த என்னைக் கேட்டாள் நந்தா.
ஒண்டுமில்லை.
எங்களைக்காவிய மோட்டார் சயிக்கிள் சிவநகர் ஒழுங்கைக்கு வந்து விட்டது. சனநடமாட்டம் குறைந்து விட்ட மைம்மல் பொழுது.
"மதுரா வீட்டு வாசலில் என்னை இறக்கிவிட்டு நாளைக்கு விடிய 9 மணிக்கு வெளிக்கிட்டு நில்லுங்கோ." சொல்லிவிட்டுத் திரும்பினாள் நந்தா.

காலை பத்து மணி இளவெயில் சூடு இதமாயிருந்தது. நு செஞ்சோலை சிறுவர் இல்லம். சுற்றிவர அழகாய் வேயப்பட்ட வேலிக்கு நடுவே மரந்தடிகள் சூழ்ந்திருந்த அருமையான இடமது. வாசலில் எங்களை வரவேற்றாள் அந்தப் பெண் போராளி.

புற்களால் வேயப்பட்டிருந்த சில கொட்டகைகளுக்குள் பலர் காத்திருந்தனர்.
"அவர்கள் யார்?" கேட்ட எனக்கு நந்தா சொன்னாள்.
"இஞ்சையிருக்கிற பிள்ளைகளின்ரை சொந்தக் காறார்" இண்டைக்கு ஞாயிற்றுக்கிழமைதானே அதுதான் பிள்ளைகளைப்பார்க்க வந்திருக்கினம். அதோ ஒரு சுட்டிப்பட்டாளம் ஆரவாரமாகக் கதையும், சிரிப்புமாக வந்து கொண்டிருந்தனர்.
'பெரியம்மா, பெரியம்மா' வென அந்தப்பிள்ளைகள் தோளிலும், கையிலும் தங்கள் பிஞ்சுக்கைகளால் சேட்டைகள் செய்தபடி வந்து கொண்டிருந்தார்கள்.
"அக்கா இப்ப வருவா அங்கைவந்திருங்கோ" என எங்களை அழைத்துக் கொண்டு போனாள் அந்தப் பெண்போராளி.

சுதந்திரா



அழகிய சிறிய மாளிகையது. மண்ணாலான சுவர், சீமெந்தாலான நிலம், புல்லாலான கூரை பார்க்கவே மகிழ்ச்சியாக இருந்தது அந்த இடம்.
"அதுதான் ஜனனியக்கா" என்றாள் நந்தா. தனது பிள்ளைகளுடன் எங்களிடம் வந்தா ஜனனியக்கா.
"வணக்கம்வாங்கோ" என எங்களை அன்புடன் வரவேற்றா. மெல்லிய அந்தச் சிறிய உருவத்துக்குள் எத்தனை ஆழுமை உறைந்து கிடக்கிறது. ஓ...இதுதானே தமிழீழத்தலைவன் வளர்த்தெடுத்த புதுமைப் பெண்ணியம். போராட மட்டுமே பெண்களை இயக்கம் பயன்படுத்துகிறது எனும் புலம் பெயர் நாடுகளில் இலக்கியச் சந்திப்புகள் செய்து உளறிக்கொட்டும் புத்திஜீவிகளின் உளறல்களைப் பொய்யாக்கி நிமிர்ந்திருக்கும் இந்தப்பெண்ணியம் அவர்களைப் பொறுத்தவரை அடிமைப்பெண்ணியம் தானே. பெண்ணியம் என்பதற்கான பொருளை அவர்கள் புரிந்து வைத்திருக்கும் கற்பிதம் இந்தமண்ணின் பெண்ணியத்துடனும், இந்த மண்ணின் பெண்ணுடனும் ஒத்துவராதவையே.

அற்புமாய்க் கிடைக்கின்ற மேற்கத்தைய சுகங்களே சுதந்திரம் என்கிறார்கள் அவர்களில் பலர்... ஒரு சமூகத்தின் வாழ்வு, பண்பாடு, பழக்கவழக்கம், கலை, என்பவற்றை அடிமைத்தனம் என்றோ, அது ஒரு அடிமைச் சமுதாயம் என்றோ ஒதுக்கிவிட முடியாது. ஏனெனில் ஒவ்வொரு இனத்துக்கும் ஒவ்வொரு பண்பாடு, கலை, பழக்க வழக்கம், சமூக அமைப்பு எனப்பல ஒழுங்குகள் இருக்கின்றன. காலமாற்றத்திற்கேற்ப அவற்றுடன் புதியவற்றைச் சேர்க்கலாமே தவிர அவையெல்லாம் மூடத்தனம் என ஒழிக்க நினைப்பதும் செயற்படுவதும் சரியானதல்ல. இதை அங்கு பலர் தவறாகப்புரிந்து வைத்துக்கொண்டு இந்தப்பெண்கள் மீது தங்கள் பேனாக்களாலும், பேச்சுவன்மையாலும் இவர்கள் தவறான பாதையில் செல்கிறார்கள் என வாதமிடுகிறார்கள்.அங்கிருக்கும் அந்தப் புத்திஜீவிகளால் இந்தப்பெண்களுக்குள்ளிருக்கும் பேராற்றலை எவ்வாறு புரிந்து கொள்ள முடியும்...?
'இவர்களது ஆற்றலை ஆழுமையை அவர்கள் புரிந்து கொள்ளும் ஒருகாலம் மலரும்' மனதில் எண்ணினேன்.
"சரி எல்லாரும் போய் விளையாடுங்கோ... இந்த அன்ரி பெரியம்மாவோடை கதைக்க வந்திருக்கிறா.."
அந்தப்பட்டாம் பூச்சிக் கூட்டத்திற்கு சொன்னா ஜனனியக்கா. எங்களது உரையாடல் ஆரம்பமாக அந்தப் பட்டாம் பூச்சிகள்
"பெரியம்மா...அபி நுள்ளிப்போட்டா...,பெரியம்மா கஸ்தூரி அடிக்கிறா..."
என முறைப்பாடுகள் செய்து கொண்டிருந்தார்கள்.
"பாருங்கோ நல்ல பிள்ளையளெல்லே பெரியம் மாவைக் கொஞ்ச நேரம் கதைக்க விடுங்கோ"
எனச்சொல்லியும் அவர்களோ கேட்பதாயில்லை. தொடர்ந்தும் முறைப்பாடுகள் செய்தபடிதானிருந்தார்கள். ஆச்சரியமாகவிருந்த அந்தப் பெரியம்மாவின் பொறுமையும், சிரிப்பு மாறாது, சினக்காது அந்தச்சின்னன்களை அன்பான தன்சொல்லுக்குள் கட்டிய ஆழுமையும் உண்மையிலேயே எனக்கு ஆச்சரியம் என்பதை விட அதிசயமாய் இருந்தது.
நான் ஒரு தாயாக இருந்தும் பிள்ளைகளை எப்படி ஆழுவது என்பது தெரியாமலேயே இருந்தேன். இந்தச்சோலையின் பெரியம்மாவைக் காணும் வரை நான் கூட எனது அம்மா காலத்து அம்மாவாய், பிள்ளைகளின் குழப்படி தாங்க முடியாவிட்டால் அடித்துவிடும் அம்மாவாகவே இருந்தேன். ஆனால் இந்தப் பெரியம்மாவின் பொறுமையும் பிள்ளைகளின் கோபத்தை தன் ஆழுமையால் சமன்படுத்தி ஆழுகின்ற இந்தப்பெரும் பணி எனக்கும் எனது பிள்ளைகளை எப்படிக் அணுகவேண்டும் என்பதை, குழந்தை உளவியலை எப்படி கையாள வேண்டும் என்பதை எனக்கு உணர்வித்தது. புலம் பெயர் நாடுகளில் வாழும் ஒவ்வொரு அம்மாவும் படிக்க வேண்டிய குழந்தை வளர்ப்பையும், குழந்தை உளவியலையும் இந்தச்சோலைப் பெரியம்மாவிடமும் இங்கு பணியாற்றும் ஒவ்வொரு தாய்மாரிடமும்தான் கற்கவேண்டும். தொடரும்...



## சிறுகதை

# ஈடு

ஆங்கில அகரவரிசையின் முதல் எழுத்தும், எண் கணித வரிசையின் கடைசி இலக்கமும் ஒன்றாக சங்கமித்தால் ஏ-9 என்று பெயர் கொண்டதாலோ என்னவோ, உலக ஊடகங்களில் தனியிடத்தைப் பிடித்துக்கொண்ட யாழ்-கண்டி வீதி வழியே அந்த டொல்பின் வாகனம் வேகமாக பயணித்துக்கொண்டிருந்தது. சோழகக்காற்று வேகமாக வீசிக் கொண்டிருந்த போதிலும் சூழலில் வெப்பம் அதிகமாக இருந்ததை வானத்தினுள் இருந்த இலத்திரனியல் வெப்பமானி சுட்டிக் காட்டிக்கொண்டிருந்தது. சூழல் வெப்பம் 40பாகையாகவும், வாகனத்தினுள் வெப்பம் 30 பாகையாகவும் இருந்தது. ஏ-சி பொருத்தியதால் சூழ்நிலை வெப்பத்தை வாகனத்தினுள் உணர முடியாமல் இருந்தது. சாரதிக்குப் பக்க இருக்கையில் வசதியாக அமர்ந்திருந்து கண்டி வீதியின் இருபக்ககாட்சிகளையும் பார்த்து ரசித்தபடியிருந்த மகாலிங்கம் தனது கடிகாரத்தில் நேரத்தைப் பார்த்த போது பகல் 12-36 மணியாக இருந்தது. இது சிறிலங்கா நேரம். தமிழீழ நேரம் அரை மணித்தியாலம் குறைவு என மனதுக்குள் நினைத்துக்கொண்டவர். கடிகாரத்தை 12.07 மணியாக நேரத்தை மாற்றிக் கொண்டார். இற்றைக்கு பதினைந்து வருடங்களுக்கு முன் தாய் நாட்டில் இருந்தால் உயிர் வாழ முடியாதென்று "சேவ்ரிட்றவல்ஸ்" பேரூந்தில் குடும்பத்துடன் கனடாவுக்குத் தப்பியோடியவர் இன்று மீண்டும் தனது சொந்த மண்ணைப் பார்ப்பதற்காக குடும்பத்துடனேயே சென்று கொண்டிருந்தார். கனடாவுக்கு பயணம் வெளிக்கிட்டு போகும் போது ஈரப்பெரியகுளம் ஆமிக் காம்பில செக்கிங்கிற்காக பேரூந்து நின்ற போது தாயின் மடியில இருந்து மூத்திரம் பெய்து சேலையை நனைத்த மூத்தமகள் பிரியா இண்டைக்கு பெரிய குமரியாகி விட்டாள். காலையில விளக்கு வைத்தகுளம் சாவடியால வரேக்கல சென்றிக்கு நிண்ட ஆமிக்காரனொருவன் ஏதோ சேட்டைவிட்டுப் போட்டானெண்டு தாயோ பொரிஞ்சு கொண்டு

**ரஞ்சித்குமார்**

வந்தாள். மகளைத் திரும்பிப்பார்த்தார். கட்டிடக் காட்டுக்குள்ளேயே வளர்ந்தவள் வீதியின் இருபக்கமும் காய்ச்சு ஓய்ந்து விட்டிருந்த பாலைமரக்காட்டை ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள். பத்து வயதான மயூரன் அக்காவின் மடியிலேயே நித்திரையாகியிருந்தான். றைவர் பொடிப் பிள்ளையும் கண்ணாடிக்குள்ளால பிரியாவை அடிக்கடி பார்த்துக் கொண்டு வாறதை மகாலிங்கம் கவனிக்கத்தவறவில்லை.

முறிகண்டிக்கு வாகனம் வந்தபோது நேரம் ஒரு மணி தாண்டியிருந்தது. முறிகண்டிப் பிள்ளையார் பழைய கோலத்திலேயே இருந்தார். குடும்பத்துடன் சாப்பாட்டுக்கடைக்குள் சென்றவருக்கு பழைய நினைவுகள் வரத்தொடங்கியது. யாழ்ப்பாணத்து பனந்தோப்புக் கிராமத்தில் பிறந்து, பக்கத்து ஊர் மிசனரிப் பள்ளிக்கூடத்தில பத்தாம் வகுப்பு வரை படித்து விட்டு வேலைவெட்டியில்லாம திரிந்ததும், அரசியல் கட்சி பிரமுகருக்கு வால்பிடிச்சு திரிஞ்சதால கிடைச்சபலனோ என்னவோ கிளிநொச்சி குடியேற்றமொன்றில திட்டக்காணியொன்று கிடைச்சு புதுவாழ்வு பெற்றதும் மறக்க முடியாத நிகழ்வுகள்.கலியாணம் முடிச்ச இடமும் வசதியான இடமாகிப் போய்விட மடையன் மகாலிங்கமெண்டு செல்லக் கண்டம்மான் வைத்த பெயர் மாறி வட்டிக்கார மகாலிங்கம் என்ற பெயர் கொஞ்ச நாட்களிலேயே ஒட்டிக்கொண்டு விட்டது. அப்பேக்கில இங்கால இருந்த சனத்துக்கும் படிப்பறிவு குறைவுதான். வைபோசாக வெட்டின காணிகள நூறு இரு நூறு ரூபாவுக்கு கூட குடுத்த சனங்கள் இருக்குதுகள். பணக் கொடுக்கல் வாங்கலெண்ட போது மகாலிங்கத்துக்கு ஞாபகத்தில் முதலில் வருவது மார்க்கண்டுவின் முகம்தான். மார்க்கண்டுவும் யாழ்ப்பாணப் பக்கந்தான் திட்டத்தில காணி கிடைக்கும் போது மகாலிங்கத்தின்ர காணியில இருந்து மூன்றாவது காணி மார்க்கண்டுவுக்கு கிடைச்சது. கொஞ்சம் பிரயாசக்காரன் எல்லோரையும் விட வேகமாக முன்னுக்கு வந்தவன். கொஞ்ச நாளில பரந்தன் சந்தியில கடையொண்டு கட்டி கடையோடை சேர்த்து வீடும் கட்டிப்போட்டான். மார்க்கண்டுவுக்கு மூத்தது பெடியன் மற்றதெல்லாம் பொம்பிளைப் பிள்ளைகள், பொடியனுக்கு பிரியாவை விட ரெண்டு மூண்டு வயது கூடுதலாகத்தான் இருக்கும். ஒரு முறை மார்க்கண்டுவும் மகாலிங்கமும் பரந்தன் பாரில குடிச்சுக்கொண்டிருக்கேக்கில, வெறியில இருந்த மார்க்கண்டு மகாலிங்கத்தைப் பார்த்து மச்சான் என்ரை பெடியன உன்ரை மூத்தவளுக்குத் தான் கட்டி வைப்பன் என்று உளறினான். மகாலிங்கத்துக்கும் என்ன அடி மனதில சின்ன விருப்பம் தான்.


கொஞ்சநாளில நிலைமை மாறிவிட்டது. மார்க்கண்டுவிட பெடியனுக்கு ஏதோ வருத்தம் புடிச்சிட்டுது, இருந்த எல்லாத்தையும் வித்துச் சுட்டு ஊரெல்லாம் திரிஞ்சும் வருத்தம் சுகமாக வில்லை. கடைசியா இந்தியாவுக்கு கொண்டு போறதுக்காக அம்பதாயிரம் காசு கேட்டு மகாலிங்கத்திடம் மார்க்கண்டு வந்தபோது, ஈடாகப் பெற்றுக் கொண்டே பணத்தைக் கொடுத்தான். மார்க்கண்டுவின் கடையில ஒருகண் வைச்சிருந்த மகாலிங்கத்துக்கு இது நல்ல சந்தர்ப்பமாய் அமைந்துவிட்டது. கொஞ்சக் காலம் கழிச்சு மகனை சுக மாக்கிக்கொண்டு வந்த மார்க்கண்டு முரசுமோட்டைப்பக்கம் போய் வெள்ளாமை விதைச்சு கொஞ்சக் காசோட மகாலிங்கத்திட்ட வந்து கடையைக் கேட்ட போது முதல்ல ஐம்பதாயிரம் வட்டி எழுபத்தையாயிரம் எண்டு ஒண்டே கால் இலட்சத்துக்கு கணக்குக் காட்டிய போது, எதுவுமே பேசாமல் அறுதியாக எழுதிவிட்டுப் போன மார்க்கண்டு அதுக்குப் பிறகு மகாலிங்கத்திடம் வருவதில்லை. பன்னங்கண்டிப் பக்கம் குடும்பத்துடன் இருப்பதாக கேள்விப்பட்டதுண்டு. பழைய நினைவுகளில் இருந்து மீண்டவர், பழையதையும் புதியதையும் இணைத்து கணக்குப்போடத் தொடங்கினார்.


பிரியாவுக்கு கட்டிவைப்பனெண்டு மார்க்கண்டு சொன்ன மூத்த பெடியனும் இப்ப வளர்ந்திருப்பான் தானே. ஆனா பிரியாவைக் கட்டுறதுக்கு அவனுக்கு என்ன தகுதியிருக்கும். பிரியாவுக்கு தமிழே சரியாகக் கதைக்க வராது முழுக்க முழுக்க இங்கிலிஸ்தான், கனடா பல்கலைக் கழகத்தில கொம்பியூட்டர்சயன்சில பட்டப்படிப்பு படிக்கிறாள். வெளிநாட்டுச் சுவாத்தியத்தில என்ன வெள்ளையா என்னவடிவா இருக்கிறாள். இவளுக்கு முன்னால மார்க்கண்டுவிட பெடியன் எந்த மூலைக்கு, அவன் முந்தியே கொஞ்சம் கறுப்பன், அதுவும் வன்னி வெய்யிலில காஞ்சு இன்னும் கறுப் பனாயிருப்பான். ஒழுங்காய் படிச்சானோ தெரியாது. அப்பனோட சேர்ந்து வயலில நிண்டு மாடு திரத்திக் கொண்டிருப்பான். இதுக்கும் மேலால கிளிநொச்சியில இருக்கிற காணி பூமியளுக்கும், கனடாவில இருந்து உழைச்ச கோடிக்கணக்கான சொத்துக்களுக்கும் பிரியாதானே உரிமைக்காரி. அவளுக்கு இவனெல்லாம் ஒரு தூசு என முகம் தெரியாதவர்களைப்பற்றி ஒப்பீட்டுக்கணக்கை தேவையின்றி போட்டுக்கொண்டு வந்தார்.

பகல் இரண்டு மணியளவில் வாகனம் கிளிநொச்சிக்கு வந்து சேர்ந்தது, இடிந்த கட்டிடங்களும் வளைந்து வரும் மண் அணைகளும் சமர்க்களத்தின் சாட்சிகளாக காட்சியளித்தன. ஓ.... ஓயாத அலை ரெண்டிலதானே கிளிநொச்சி பிடிபட்டது. கிளிநொச்சி பிடிபட்டவுடனேயே தன்னுடைய சகாக்களுடன் விருந்துண்டு

பரந்தன் சந்தியில் இறங்கி, மார்க்கண்டுவிடம் இருந்து வாங்கி வியாபாரம் செய்தகடையைப் பார்த்தார். "பிரியா றேடர்ஸ்" என தமிழில் எழுதிய எழுத்துக்கள் நிறம் மங்கி மெலிதாகத் தெரிந்தது. மகள் பிரியாவுக்கு ஆங்கிலத்தில் கூறி சுட்டிக்காட்டிய போது ஆர்வமின்றி அதனைப் பார்த்தாள். கடைச்சுவரில் 08GBCOY என ஏதோ எழுதியிருந்தது. அது என்னவெனச் சுடுடிக்காட்டி பிரியா கேட்டபோது மகாலிங்கத்தால் விளங்கப்படுத்தமுடியவில்லை. அருகில் நின்ற றைவர்ப் பெடியன் தான் "அது உங்க நிண்ட ஆமி எழுதியிருக்கிறான் இதில எட்டாவது கஜபா றெஜிமெண்டிட கொம்பனிக்காறன் நின்றிருக்கிறான் " என தமிழில் கூற மகாலிங்கம் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். கடையைச் சுத்தப்படுத்தி யாரோ குடியிருப்பது








> **பகல் இரண்டு மணியளவில் வாகனம் கிளிநொச்சிக்கு வந்து சேர்ந்தது, இடிந்த கட்டிடங்களும் வளைந்து வரும் மண் அணைகளும் சமர்க்களத்தின் சாட்சிகளாக காட்சியளித்தன. ஓ.... ஓயாத அலை ரெண்டிலதானே கிளிநொச்சி பிடிபட்டது.**

மகிழ்ந்ததை ஒரு கணம் நினைவில் கொண்டு வந்தார் மகாலிங்கம், கனடாவில் இருந்தாலும் தாயகத்தில் கொஞ்சமென்றாலும் பற்று இருந்தது. விடுதலை சார்ந்த சகல பணிகளிலும் அக்கறையுடன் பங்களித்துள்ளார். ஓயாத அலைகளின் வெற்றியின் போது தானே நேரில சமர்க்களத்தில் நிற்கும் உணர்வுடன் கனடா வீதிகளில் உலாவந்துள்ளார்.

பற்றைகளாலும், புற்றுகளாலும் நிறைந்து போயிருந்த தனது குடியிருப்பை மகள் பிரியாவுக்கு காண்பித்தபோது அவள் முகம் சுழித்ததை அவரால் சகிக்க முடியவில்லை. மம்மி நாங்க எப்ப கனடாவுக்குப் போவம் என மகன் சுத்தமான ஆங்கிலத்தில் தாயிடம் நச்சரிக்கத் தொடங்கினான். தொடர்ந்தும் அங்கு நிற்க விரும்பாத மகாலிங்கம் பரந்தன் சந்திப் பக்கம் வாகனத்தை விடுமாறு றைவர் பெடியனுக்கு கூறினார். மார்க்கண்டுவின் கடையும் வீடும் இப்போது தனது பெயரில் இருப்பதனால் அவற்றைச் சென்று பார்க்கும் ஆர்வம் எழுந்ததாலேயே பரந்தனை நோக்கிப் புறப்பட்டார்.

போல் தெரிந்ததால் யாராயிருக்கும் என உரிமையோடு கடைக்குள் சென்று பார்த்த போது மகாலிங்கம் அதிர்ந்து போனார். அங்கு நின்றது மார்க்கண்டுவின் மனைவியென்பதை இலகுவில் இனங்கண்டு நீங்களெப்படி இங்க இருக்கிறியள் மார்க்கண்டு எங்கேயென கேட்க அவள் கையை காட்டிய திசையில் பார்த்தார். வெள்ளை உடையில் மார்க்கண்டுவின் படமும், வரிப்புலிச்சீருடையில் இளைஞனொருவனின் படமும் மாலையிட்டு காணப்பட்டது. ஏன்?..... ஏன்? என்ன நடந்தது? மேலீட்டால் மகாலிங்கத்தின் குரல் தடக்கியது.

இவர் காணிபார்க்க வந்த நேரம் ஆமிபிடிச்சு சுட்டுப்போட்டான், பெடியன் ஓயாதஅலை ரெண்டு சண்டையில கிளிநொச்சியில.... அவள் பதில் கூறிக் கொண்டிருக்க என்ன நடந்ததோ தெரியவில்லை அந்த இரு படங்களின் முன்பாகவும் தலையைக் குனிந்து கொண்டார் மகாலிங்கம். ஆக்கிரமிப்பாளரிடம் ஈடு வைக்கப்பட்ட தாயக பூமியை, மீட்பதற்காக உயிரையீந்த தியாகிகளின் வீரத்திற்கும், போராட்டப் பழுவை தோளில் தாங்கியோரின் அர்ப்பணத்திற்கும் முன்பாக எவர்தான் சமமாக முடியும். ●●



# நூல்நோக்கு

நூலின் பெயர்:
நாமும் பேசுவோம்
(சிறுவர்களுக்கான மேடைப்பேச்சுக்கள்)
ஆசிரியர்:
மணிமேகலை குமாரசுவாமி(**B.A**)
(உள்ளூராட்சி உதவியாளர் கரைச்சி பிரதேச சபை கிளிநொச்சி.)



சிறுவர்களுக்கான மேடைப்பேச்சுக்களைத் தாங்கி "நாமும் பேசுவோம்" என்ற சிறு நூல் வெளிவந்துள்ளது. இதனை வடமராட்சியின் கரவெட்டி கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட, சிறப்புப் பட்டதாரியான மணிமேகலை குமாராசாமி அவர்கள் தனது மனத்தில் எழுந்த ஆர்வமிகுதியால் ஆக்கி அளித்துள்ளார்.

மக்களாகப் பிறந்தவர்கள் எல்லோரும் ஒரே இயல்புடையவர்களாகவும், ஒரே சிந்தனையறிவு உடையவர்களாகவும் இருந்து விடுவதில்லை. அவரவர் செல்லும் பாதையே அவர்களை வழிநடத்திச் செல்லுகின்றது. பாதைக்கேற்பவே அவர்களின் பயணம் வெற்றியளிக்கிறது. அந்த வகையில் இவர் தெரிந்தெடுத்த பாதை இவரை ஒரு தொண்டராக, மாணவர் சமூகத்தை உயர்த்தி விடும் ஒரு மாணிக்கமாக நிலையமர்த்தியுள்ளது எனலாம்.

தமிழிலே சிறப்புப் பட்டதாரியான இவர் இப்படிச் சிறுவர்களுக்கான மேடைப்பேச்சுக்களை எழுதவேண்டுமென்று எதனால் தூண்டப்பட்டார் என்பதை எண்ணுவோமாகில், அது அவர் அடிமட்டப்பிரச்சினையாகவுள்ள விடயமொன்றை அனுபவாயிலாக அனுபவித்துள்ளாரோ அல்லது அறிந்து தெரிந்துள்ளாரோ என எண்ணச்செய்கிறது.

நல்ல கனிகளைப் பெற வேண்டுமென்ற அவாவுள்ளவர்கள் எல்லோரும் அக்கனிகளைத்தரும் மரத்தை நாட்ட வேண்டுமென்பதிலோ அதை வளர்த்தெடுக்க வேண்டுமென்பதிலோ அக்கறை கொள்வார்கள் என்பது சொல்வதற்கில்லை. அப்படியல்லாது, சிறுவர்களின் எதிர் காலத்தை தனது சிந்தனையிலே நிறைத்து, அவர்கள் இம் மண்ணில் சிறந்த சிந்தனாவாதிகளாகவும், சொற்பெருக்காற்றும் தகுதியுடையவர்களாகவும் திகழவேண்டு மென்பதில் மிகுந்த அக்கறை கொண்டுள்ளார் என்பது அவரது செயற்பாட்டிலிருந்து விளங்கிக் கொள்ளக்கூடியதாகவுள்ளது. அதன் வெளிப்பாடே இந்நூல் எனலாம்.

இதற்கான ஆசியுரையில், "இணரூழ்த்தும் நாறா மலரனையர் கற்றது உணர விரித்துரையாதார்" என்ற குறட்பாவை மேற்கோளாக்கியுள்ளமைக்கு ஏற்பவே நூலாசிரியரின் பணி பெருமை பெறுகின்றது.

குழந்தைகளின் வயதிற்கேற்றவாறு பேச்சுக்கள் ஆக்கப்பட்டிருப்பது பாராட்டப்படக்கூடியது என்ற பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்களின் அணிந்துரை நூலாசிரியரின் உளப்பான்மைக்கு விருது கொடுத்து நிற்கிறது.

"எழுதியவர் பேசுகிறேன்" என்ற பகுதியில், இளமையிற் கல்வி சிலையில் எழுத்து என்பதற்கொப்ப மாணவர்களை இளமைப்பராயத்திலேயே திறமையுள்ளவர்களாக வளர்த்தெடுப்பதில் நூலாசிரியர் எத்தகைய ஆவலும் உறுதியும் கொண்டுள்ளார் என்பது புரிந்து கொள்ளக்கூடியதாகவுள்ளது. தனது இறுதிவரிகளில், அச்சேற்றியவர்களுக்கு நன்றி தெரிவித்தபான்மைக்கு மறுவளமாகப் பின்புற அட்டை மனத்தில் ஒரு வித நெருடலை ஏற்படுத்துகின்றது. தமிழில் டிப்ளோமா பெற்றவருடைய நூலில் இப்படி ஒரு நிலை ஏன் ஏற்பட்டது என்பது வேதனையாகவே எழுகிறது.

"அன்னையின் பெருமை" என்ற ஆரம்பப் பேச்சின் மூலம் அன்பு என்பது மனித வர்க்கத்திற்கு எத்தகைய முக்கியத்துவம் வாய்ந்தது என்பது முன்வைக்கப்பட்ட தன்மை வரவேற்பிற்குரியது. இத்தகைய பேச்சுக்கள் வெறும் பேச்சுக்களாகத்




தோன்றினாலும், மாணவர்கள் அந்த விடயங்களை மனனம் செய்கின்ற போது அவர்களுடைய மனம் சிறிது சிறிதாக அந்த விடயத்திலே ஊறிப் போகின்ற தன்மை ஏற்படுகின்றது என்பதைக் கற்றவர்கள் நிச்சயமாக மறுக்க முடியாது.

இன்று சாதாரணமாக உயர்கல்வி கற்றவர்கள் என்று தமக்குள்ளே பட்டயம் சூட்டிக் கொண்டுள்ளவர்கள் கூட, தமது எண்ணக்கருத்துக்களை நாலுபேருக்கு மத்தியில் எடுத்து விளக்கக் கூடிய தன்மை அற்றவர்களாகக் காணப்படுவது சகஜமாகவுள்ளது. இந்த நிலை ஏன் ஏற்பட்டது என்ற கேள்வி நூலாசிரியரின் மனத்தில் எழுந்ததினாலேயே இந்நூல் உருப்பெற்றது எனக்கொள்ள இடமுண்டு.

ஒவ்வொரு பக்கங்களையும் புரட்டிச் செல்லும் போது, கொடுக்கப்பட்டுள்ள விடயங்கள் இலகு நடையிலும், இளையோரின் மனங்களில் களிப்பூட்டும் வகையிலும் தயார் செய்யப்பட்டுள்ளன. இந்த வரிசையில் 'மரம் நாட்டுவோம்' என்ற தலைப்பிலான பேச்சு குறிப்பிடக்கூடியதொன்று. காலத்திற்கேற்றமுறையில் எல்லோரும் கவனத்திற் கொள்ளவேண்டியதும் நடைமுறைப்படுத்த வேண்டிய தொன்றுமாகும். சமகாலத்தில் தமிழீழ மண்ணில் ஏற்பட்டுப்போன மரம் அழிப்பு நடவடிக்கையினை உற்று நோக்கும் போது, இங்கே சொல்லப்படுபவை அதற்கான மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடிய மன உணர்வினை இளம்பருவத்தினரின் மனத்தில் விதைக்கின்றது என்பதை மறுக்க முடியாது.


ஆடம்பர நடவடிக்கைகளினால், அர்த்தமற்ற முறையில் செய்து கொள்ளப்படுகின்ற "பிறந்தநாள் விழா" போன்ற நாட்களின் போது, கனி மரங்களை நாட்டுதலை மேற்கொள்ளக்கூடிய சந்தர்ப்பத்தை ஏற்படுத்துவோமாகில், அதனை வழக்கப்படுத்துவோமாகில் அது எவ்வளவு பிரயோசனமானதாக இருக்கும் என்பதை இளையோர் மனங்களில் ஊன்றி விதைத்திருப்பது போற்றுதற்குரியது.

பேச்சுக்களைப் புரட்டிச் செல்கையில், பேச்சுப்பயிற்சியோடு மட்டும் நின்று விடாது மனித சேவையையும் ஆற்ற வேண்டுமென்பதை வலியுறுத்து மாப்போல 'சாரணீயமும் சாரணர்களும்' என்ற தலைப்பு சிறப்பாக அமைந்துள்ளது.

வளர்ந்து வரும் விஞ்ஞானம் இன்று மக்களை எவ்வளவு இன்னலுக்கு உள்ளாக்குகின்றது என்பதை சிறார்களே உணர்ந்து கொள்ளக் கூடியதாகவுள்ளது.

மொத்தத்தில் ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? என்ற வினாவுக்கு "முடியும்" என்பது விடையாக அமையுமோ, அமையாதோ அந்தக் கேள்விக்கே இடமில்லாமல் இளைஞர் சமுதாயத்தை சிறு வயதிலிருந்தே வளைத்தெடுக்க, வளர்த்தெடுக்க அருமையானதொரு பயிற்சிக் களமாக இந்நூல் அமைந்துள்ளது என்றே கொள்ளலாம். வளர்க ஆசிரியரின் பணி.

**மாவன்னா**



# திருவிழாக் கதைகளும், என் குழந்தைகளும்...

*செழித்துக் கிடக்கின்ற*
*காளி கோயில் ஆலமரநிழலில்*
*நிகழ்ந்தன நிறையக்கதைகள்*
*அந்திப் பொழுதில் காளி ஊர்வலம் வருவாளாம்*
*ஆளை வெருட்டும் சூலம் தாங்கி*
*வைரவர் காவல் இருப்பாராம்*
*நேற்றுப் பொங்கல் திருவிழா.*
*முதல் நாள் பண்டம் எடுத்தாயிற்று.*
*வெள்ளை விரித்த பந்தலில்*
*காளி அழகாய் இருக்கிறாள்.*
*மடை பரப்பி மந்திரிக்கிறார் பூசாரி.*
*உடுக்கு ஒலிக்கிறது ஓங்கி.*
*பறை அதிர்கிறது.*
*உருவேற்றப்பாடுகிறார் அண்ணாவி.*
*கைக்காப்புகள் கலகலக்க*
*கலைவந்தாடி வேப்பிலையாலடித்து*
*தேசிக்காய்வெட்டி*
*கட்டுச் சொல்கிறார் பூசாரி*
*கண்மணி அக்கா கவலைகள் தீர*
*தீருமோ தீராதோ அவர்கவலை*
*கட்டி நிற்கும் நேர்த்திக் கிடாய்கள்*
*கத்துகின்றன. கடைசிப் பசியாய் இருக்குமோ?*
*வளந்து நேர்ந்து எத்துகிறார் வடிவேலர் அடுப்பில்*
*பாற் செம்பேந்திய பெண்கள்,*
*பெண்கள் பவனி*
*வருகிறது அரோகரா பாடி*
*இரவுக் கூத்தாட மேடையும் கட்டியாயிற்று*
*காளி புகழ் பாடி கத்தும் ஒலிபெருக்கி.*
*கச்சான் காரி கடையைப்பரப்புகின்றாள்.*
*உடலெல்லாம் பலூனாய் திரிகிறான் வியாபாரி*
*பறை முழக்கம் உச்சம் அடைகிறது.*
*முழிக்கண் கிழவி நரைத்தலையுடன்*
*உருவந்தாடுகிறாள்.*
*பூசாரி சவுக்கை எடுத்து விளாசுகிறார்*
*சந்நதம் கொண்டாடுகிறாள் கிழவி*
*வலிக்காதோ?*

*தொளதொளக் காற்சட்டையை*
*ஒரு கையால் பிடித்தபடி*
*அம்மாவின் சேலைக்குள்ளிருந்து*
*எட்டிப் பார்க்கிறேன் முழிபிதுங்கப் பயத்தில்*
*சூலத்துடன் வைரவராய் வந்தாடும்*
*மீசைக்காரனின் பயங்கர ஆட்டம்*
*என்வயதுப் பிள்ளைகளை*
*வைரவர் பிடிப்பதாக கீச்சான் சொன்னான்*
*உண்மையாய் இருக்குமோ?*
*வழிவெட்டி பூசையை முடிக்கிறார் பூசாரி*
*படையல் சோற்றை*
*குழையல் குழையலாய் உண்டபின்*
*கலைகிறது ஊர் இரவுக் கூத்துக்காய்*
*ஆறுமுகத்தாரின் அன்னதானம்*
*அருமையாய் இருந்ததாகப் பேசியபடி*
*இரவுக் கூத்துத் துவங்கையில்*
*நான் தூங்கிவிடுவதால்*
*எனக்கதிகம் சொல்லத் தெரியாது கூத்தைப்பற்றி*
*வைத்த கண்வாங்காது*
*"ம்" "ம்" கொட்டி கதை கேட்ட மகள்*
*"காட்டு உன்னூர்" என்றதால்*
*கூட்டி வந்தேன் கட்டிட வயல்நிறை*
*பெருநகரத்திலிருந்து*
*என் பிள்ளைகளை!*

*காளிகோவில்,*
*ஆலமரம்,*
*பூசாரி, அவர் வீடு.*
*என்வீடு, என் மனிதர் எனச் சொல்ல*
*எவருமில்லை, எதுவுமில்லை*
*முட்கம்பி வேலிசூழ்*
*காவலரண்களையாட காட்டுவேன்*
*என்னூரென்று.*

**கி. சிவஞானம்.**

## சாலை ஓரக்கதைகள்-1



## மனிதமற்றவர்கள்

"சோளம் எடுங்கோ... சோளம் ரண்டு ஆறுரூவா..."

சிறுவன் ஒருவன் சாலை ஓரமரநிழல் ஒன்றின் கீழிருந்து உரத்துக் கத்திக் கொண்டிருந்தான்.

"டேய்! பொடியா சோளம் என்ன விலையெண்டு சொன்னனி...?"

அந்தச் சாலை வழியே வந்த ஒரு வாட்ட சாட்டமான ஆள், தனது வண்டியை நிறுத்திக் கேட்டான்.

"ரண்டு ஆறுரூவா..." சிறுவன் கூறினான்.

அந்த ஆள் தனது வண்டியைத் திருப்பிக் கொண்டு வந்து அவனருகில் நிறுத்தினான். அவனுக்கு சோளம் சாப்பிட விருப்பமாக இருந்தது. அவித்துவைக்கப்பட்டிருந்த ஒரு சோளப் பொத்தியொன்றை எடுத்து இரண்டாக முறித்தவன், சிறுவனின் அருகில் கிடந்த ஒரு மரக்குற்றி ஒன்றில் உட்கார்ந்து கொண்டு, சோளத்தைச் சாப்பிட ஆரம்பித்தான்.

சிறுவன் மீண்டும் தனது வியாபாரத்தில் கவனம் செலுத்தத் தொடங்கினான்.

"சோளம் ரண்டு ஆறுரூவா...ரண்டு ஆறுரூவா..."

சுமார் அரைமணித்தியாலம் கழிந்தநிலையில், அந்த ஆள்எழுந்து வந்து அச்சிறுவனிடம் காசைக் கொடுத்தான்.

"என்னையா அஞ்சுரூவா தாறியள்? மொத்தம் மூண்டு சோளம் எடுத்திருக்கிறியள். ஒம்பது ரூவா தாங்கோ..."

"டேய்! எனக்குக் கணக்குச் சொல்லுறியா? இரவிரவா சோளக் கொல்லைகளுக்குள்ளை போய் களவெடுத்துக் கொண்டு வந்து அவிச்சுப் போட்டு, பகல்ல விக்கிற உங்களைப் போல பொடித்தரவளியளை எனக்குத் தெரியாதே. அறைஞ்சு பல்லை உடைச்சுப் போடுவன். ராஸ்கல்."

ஐந்து ரூபாக்குற்றியை அச்சிறுவன் முன் விட்டெறிந்து விட்டு, நகர்ந்தான் அந்த ஆள் தனக்கேயுரிய திமிர்த்தனத்தோடு...

**அலெக்ஸ் பரந்தாமன்**



# இளையநாதம்

## குட்டிக்கதை

# உண்மையே உயர்வு

சிவாவும் சங்கரும் நல்ல நண்பர்கள். வறுமையால் இருவரும் பாடசாலையை இடையில் நிறுத்திவிட்டு, வியாபாரம் செய்யத் தொடங்கினார்கள்.

சிவா நேர்மையானவன். எப்போதும் உண்மையே பேசுவான். பெரியோரை மதித்து நடப்பான். தன்னைப் போன்றவர்களுடன் சகஜமாகப் பழகுவான். எல்லா உயிர்களிடத்தும் அன்பு காட்டுவான்.

வழமைபோல் அன்றும் அவர்கள் வியாபாரம் செய்யச் சென்றார்கள். தாம் கொண்டு சென்ற பொருட்களை பரவலாக, அழகாக அடுக்கினார்கள்.

வயது முதிர்ந்த ஒருவர் சங்கரிடம் "தம்பி, இந்தத் தேங்காய் என்ன விலை?" என்றார். "ஐயா, இது இருபது ரூபாய். நல்ல தேங்காய். நேற்றுத்தான் மரத்தில் பிடுங்கியது'' என்று சங்கர் கூறினான். பெரியவரும் சங்கர் கூறியதை நம்பி, தேங்காயை வாங்கிக் கொண்டு சிவாவின் கடைக்குச் சென்றார்.

"தம்பி, இந்த விளாம் பழம் என்ன விலை" என்றார்.

"ஐயா, இந்த விளாம்பழத்தில் கொஞ்சம் பழுது உள்ளது. இது மட்டுந்தான் எஞ்சியுள்ளது" என்றான்."தம்பி வியாபாரம் செய்யும் நீ இப் பழத்தில் உள்ள பழுதைச் சொன்னால் உனக்கு நட்டமல்லவா வரும்" என்றார் பெரியவர்.

"ஐயா, பொய்யைச் சொல்லி இந்தப் பழத்தை உங்களிடம் விற்றால், நாளை இப் பணத்தைப் போல் இரு மடங்கை நான் இழக்க நேரிடும். எப்போதும் உண்மை பேசினால் இன்று போல் என்றும் வாழலாம்" என்றான்.

பெரியவர் சிவாவின் நேர்மையைப் பாராட்டினார். "தம்பி, நீ நல்லாய் இருப்பாய்" என்று வாழ்த்திவிட்டு அவ்விடத்தை விட்டுச் சென்றார்.

சந்தை முடிந்து, மாலை வீடு திரும்பும் போது "சிவா, உனக்குப் பிழைக்கத்தெரியுமா? நான் அந்த முட்டுக்காய்த் தேங்காயை நல்ல விலைக்கு விற்றேன். அந்தத் தேங்காயில் உள்ள பழுது அவருக்குத் தெரிந்ததா? நீ விளாம்பழத்தில் உள்ள பழுதை சொல்கின்றாயே. உனக்கு வியாபாரம் செய்யத்தெரியுமா? மடையா?'' என்று சிவாவை ஏசினான்.

சிவா பெரியவரிடம் கூறியதையே கூறினான்.

மறுநாள் காலை இருவரும் வியாபாரஞ் செய்யச் சென்றார்கள். முதல் நாள் வந்த அப் பெரியவர் சிவாவின் கடைக்குச் சென்றார். தனக்கு வேண்டிய பொருட்களை சிவாவிடம் வாங்கினார். "தம்பி, இன்றிலிருந்து எல்லாப் பொருட்களையும் உன்னிடந்தான் வாங்குவேன்" என்றார். சந்தைக்கு வருபவர்களுக்கும் சிவாவின் கடையை அறிமுகப்படுத்தி வாடிக்கையாளரைப் பெருக்கினார். சங்கரின் கடையை திரும்பிக்கூடப் பார்க்கவில்லை.

சங்கரின் கடையில் எவரும் பொருட்கள் வாங்குவதில்லை. சங்கர் தான் செய்த பிழையை உணர்ந்தான். நாம் யாரையும் ஏமாற்ற நினைத்தால் அது கேடாகவே அமையும். சிவாவின் நேர்மையையும், உறுதியையும் பாராட்டினான். "நான் இன்றிலிருந்து உண்மையே பேசுவேன்" உண்மையே உயர்வு என்பதை உணர்ந்து கொண்டான் சங்கர்.

இசைவிழி


## வாரம் ஒரு குறள்



கவரிமான் தனது உடலில் இருந்து ஒரு மயிரைக் கூட இழக்க நேர்ந்து விட்டால் தனது உயிரையே போக்கி விடுமாம். ஒரு கவரிமானுக்குள்ளமான உணர்வைப் பாருங்கள். இதேபோல மனிதனுக்கும் மானம் என்பது கட்டாயம் தேவை. மானத்தை இழந்து வாழ்பவன் மனிதனே அல்ல. அதனால் தான், ஒரு மயிரைத் தானும் இழந்த கவரிமான் உயிரைவிடுவது போல, மானம் வருமானால் அதற்காக மனிதன் உயிரைத் தியாகம் செய்ய தயாராக இருக்க வேண்டும் என்பதைப் பொய்யா மொழியார் அழகாகச் சொன்னார். இதோ அதற்கான அருமைக் குறள்.

**"மயிர் நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்**
**உயிர் நீப்பர் மானம் வரின்"**

## பழங்கள்



பழங்கள் நல்ல பழங்களாம்
மஞ்சள் நிறப் பழங்களாம்
சுவை மிக்கப் பழங்களாம்
தின்னத் தின்ன ஆசையாம்

சத்து மிக்கப் பழங்களாம்
வடிவு மிக்கப் பழங்களாம்
தின்று மனம் மகிழுமாம்

மா,பலா,வாழை முக்கனிகள்
கடவுளுக்குப் படைக்கவும்
அர்ச்சனைகள் செய்யவும்
உதவும் நல்ல பழங்களாம்.

மாணவர்கள்
தரம் 7A,
C.C.T.M.S

## உயிரினங்கள்



பித்தப்பை இல்லாத முலையூட்டி எது - எலி.



நீந்தத் தெரியாத விலங்கு- ஒட்டகம்.



கடல் நீர் பருகும் பறவை எது பென்குயின்.



ஞாபகசக்தி கூடிய விலங்கு ஒட்டகச்சிவிங்கி.



நீலநிறமுடைய கடல் உயிரினம் நண்டு.

க. மதிவதனன்,தரம்-10
கிளி/பூநகரி ம.வி. ஜெயபுரம்.

## போதுஅறிவு

1) முதலில் தமிழ் அகராதியைத் தொகுத்தவர் யார்?
ந. கதிரவேற்பிள்ளை.

2) கடல் கடந்த தந்திச் சேவை இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு?
1857ஆம் ஆண்டு.

3) இலங்கையில் உயர் நீதிமன்றம் நிறுவப்பட்ட ஆண்டு?
1801ஆம் ஆண்டு.

4) இலங்கையில் துறைமுகம் நிறுவப்பட்ட ஆண்டு?
1841ஆம் ஆண்டு.

5)1919ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட வங்கி எது?
இலங்கை வங்கி.

ச. ஆஷா,
தரம் - 8
கிளி/சிவநகர்.அ.த.க.பாடசாலை


## நகைச்சுவை



நோயாளா: டாக்டர் இந்த, ஒப்பிரேசனில நான் பிளைச்சிட்டன் என்றால் பிள்ளையாருக்கு நூறு தேங்காய்கள் உடைப்பதாக நேர்ந்திருக்கிறன்.
டாக்டா: கவலைப்படாதீர் அந்தச் செலவே உமக்குத்தேவையில்லை...!

இ.ராஜ்குமார்
மு/புதுக்குடியிருப்பு .ம.வி

## குறுக்கெழுத்துப் போட்டி 06




**இடமிருந்து வலம்**
01) பூமி
06) மலர்
07) புண்ணியதலங்களில் ஒன்று
22) இரவுக்கு எதிரானது.
32) இசைக்கருவிகளில் ஒன்று

**மேலிருந்து கீழ்**
01) புதுமை
02) கருணை
03) உழுவதற்கு பயன்படுவது குழம்பியுள்ளது.
11) சூரியன்
18) வீடு
26) தெரு தலைகீழாக உள்ளது.

**குறுக்கெழுத்துப் போட்டி — 04**
பரிசுக்குரியவர்
ச.நளினி
இராமநாதன் கல்லூரி
உடுவில்.
பாராட்டுக்குரியவர்கள்
க.மிதிலை
புலோலி மேற்கு
பருத்தித்துறை.

க.மீனா
இல.64, சூசைப்பிள்ளையார்குளம்
வவுனியா.

ச.துவாரகா
தரம் -9A
மு/யோகபுரம் ம.வி.

**குறுக்கெழுத்துப் போட்டி — 04**


| | |
|---|---|
| இடமிருந்து வலம் | 02)வதனம் |
| 01) அவரோகணம் | 03) ரோகினி |
| 07) கிளித்தட்டு | 04)கடுகதி |
| 22) திம்பு | 06) விளிம்பு |
| 31) மாவீரர் நாள் | 23) நாண(ய)ம் |
| மேலிருந்து கீழ் | 25) மாமா |
| 01) அட்டை | 27)தர |


இளையவர்களே!
மேலுள்ள கட்டத்தை வெட்டி சரியான சொற்களை இட்டு நிரப்பி அனுப்புங்கள்.

குறுக்கெழுத்துப்போட்டி இல.06
**வெள்ளிநாதம்**
**ஈழநாதம்.**
முதன்மைச்சாலை,
கிளிநொச்சி.

## அப்பம் உணர்த்திய பாடம்

கதை: சு.உமையவன்
மு/வித்தியானந்தக்கல்லூரி
முள்ளியவளை.
ஓவியம்: சு.கௌரீஷன்
மு/வித்தியானந்தக்கல்லூரி
முள்ளியவளை.



# பெற்றோலிய மாற்றீடாக மதுசாரம் வன்னியில் கரும்பு உற்பத்திக்கு ஒரு ஊக்குவிப்பு

**வின்செண்ற் புளோறன்ஸ்**



பெற்றோலியத்தை அடிப்படையாகக் கொண்ட எரிபொருட்கள் சக்தி முதல்கள் என்ற வகையில் நீண்ட காலமாகவே மேலாண்மை கொண்டிருப்பதற்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன.

1. அவற்றின் பயன்படுத்த இலகுவான தன்மை
2. அவற்றின் குறைந்த விலை ஆகியவையே ஆகும்.

அதிகரித்த உற்பத்தி, தளர்ந்து விட்ட கேள்வி முதலியவற்றால் அவற்றின் விலை வீழ்ச்சியடைந்திருந்தாலும் அவற்றின் விலை தவிர்க்க முடியாத விதத்திலே அதிகரித்துச் செல்லும் போக்கே காணப்படுகிறது. பெற்றோலியம் என்பது மீள உற்பத்தி செய்ய முடியாத வளம். இதன் இருப்பு அருகிக் கொண்டே செல்கிறது. மசகொண்ணையின் உற்பத்தியும் விநியோகமும் அரசியல் நிகழ்வுகள் காரணமாக தடைப்படக் கூடும். வளர்ச்சியடைந்து வரும் நாடுகளின் சக்தி நுகர்வும் அதிகரித்து வருகிறது. எனவே பெற்றோலியப் பொருட்களுக்கு மாற்றீடாக மதுசார எரிபொருட்கள் போன்ற சுதேசிய சக்தி முதல்களை கருத்திலெடுக்க வேண்டியது அவசியமாகிறது.

பலஉலர் வலய நாடுகளிலே, பல்வேறு தாவர வகைகளை வளர்த்து, அந்த உயிரியல் திணிவுகளிலிருந்து (BIO MASS) மதுசாரத்தை (ALCOHOL) உற்பத்தி செய்து, அதனை எரிபொருளாக மாற்றம் செய்வதென்பது பெற்றோலிய பயன்பாட்டுக்கான ஒரு மாற்றீடாக அமைந்துள்ளது.

<u>மதுசார எரிபெருட்களில் ஏற்பட்டுள்ள உலகளாவிய ஆர்வம்</u>

பெருமளவிலான மதுசார பயன்பாடு தொடர்பான முன்னோடி முயற்சிகளை பல நாடுகளும் எடுத்து வருகின்றன. உதாரணமாக 80 களிலே தனது பெற்றோலிய தேவையில் 80 விழுக்காடு அளவானவற்றை இறக்குமதி செய்த பிறேசிலிலே நிலமும், தொழிலாளர்களும் கிடைக்கக் கூடியதாக இருப்பதும் கரும்புச் செய்கையில் உள்ள வலுவான அடித்தளமும் இணைந்து பேரார்வமான மதுசார எரிபொருள் திட்டங்களை உருவாக்கி விட்டிருக்கின்றன. 1930 களிலிருந்தே மதுசார - பெற்றோல் கலவைகளை பிறேசில் பயன்படுத்தி வந்தது. பிறேசிலின் 10 மில்லியன் வரையான கார்கள் 17% மதுசார கலவையிலேயே ஓடுகின்றன. புதிதாக உற்பத்தி செய்யப்படும் கார்களில் 10 விழுக்காடு அளவானவை தனி மதுசாரத்தில் ஓடும் விதத்தில் தயாரிக்க வேண்டும் என பிறேசிலில் ஒரு சட்டமும் இயற்றப் பட்டுள்ளது. 1979 ம் ஆண்டிலே 82.8 விழுக்காடு பெற்றோலிய தேவைகளுக்கு வெளிநாடுகளை நம்பியிருந்த பிறேசில், 1982 ம் ஆண்டளவில் இதை 68 விழுக்காடு அளவுக்குக் குறைத்து 2000 ஆண்டளவில் பெற்றோலிய இறக்குமதியை முழுமையாக இல்லாதொழித்து விட திட்டமிட்டு செயற்பட்டு வந்தது.

கோஸ்ராறிக்காவில் மதுசார உற்பத்திக்கென நிறுவப்பட்ட ஆலைகளால் 15 விழுக்காடு அளவான பெற்றோலிய பயன்பாடு மாற்றீடு செய்யப்பட்டது.

சீனி வளம் மிக்க பிலிப்பைன்சில் 1978 ம் ஆண்டில் எண்ணை கண்டுபிடிக்கப்பட்டாலும், மதுசார உற்பத்திக்கான தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

பெற்றோலிய தன்னிறைவு கொண்ட ஆர்ஜென்ரீனாவிலும் 1980 களில் மதுசார உற்பத்திக்கென 3,500,000 தொன் கரும்பு ஒதுக்கீடு செய்யப்பட்டது.

நிலக்கரியை திரவ எரிபொருளாக மாற்றுவதில் முன்னோடியாக இருந்த தென்ஆபிரிக்கா, உயிரியல் திணிவில் இருந்து ஒரு வருடத்துக்கு 800,000 தொன் மதுசாரத்தை உற்பத்தி செய்யக்கூடிய ஆலைகளை நிறுவுவதில் கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறது.

சூடான், கென்யா, இந்தோனேசியா, பப்புவா, நியுகினியா மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளில் மதுசார எரிபொருள் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுவிட்டன. ஓட்டு மொத்தமாகப் பார்க்கப் போனால் உலகம் முழுவதும் மதுசார எரிபொருளின் உற்பத்தியும் பயன்பாடும் வேகமாக அதிகரித்து வருகின்றன என்பது வெளிப்படையாகும்.

<u>எரிபொருள் மதுசாரங்கள்</u>

எரிபொருளாக பயன்படுத்தவென மிகப் பொதுவாகக் கருத்திலெடுக்கப்படும் இரண்டு மதுசாரங்களாக எதனோலும், மெதனோலும் இருக்கின்றன.

எதனோல் (ஈத்தையில் மதுசாரம் அல்லது தானிய மதுசாரம்) ஆனது(தானியமணிகள் கரும்பு இனிப்பு பீற்றூட் முதலியவற்றிலிருந்து பெறப்படும்) ஹெக்ஸோஸ் சீனிகளை (HEXOSE SUGAR) காடிச் சத்து (YEAST) கொண்டு நொதிக்க வைத்து பெறப்படும் நீர்க்கரைசலை காய்ச்சி வடிப்பதன் மூலம் பெறப்படுகிறது. எளிமையான இச் செயன்முறை மூலம் பெறப்படும் உற்பத்தியானது 95% வரையான அளவில் மதுசாரத்தைக் கொண்டிருக்கும். முழுமையாக நீரற்ற எதனோலை பெறுவதற்கு மேலதிக பதப்படுத்துதல்கள் (TREATMENT) அவசியமாகவிருக்கும்.

மர அல்லது பயிர் எச்சங்கள் போன்றவற்றிலிருந்து பெறப்படும் செலுலோஸ் (CELLULOSE) உற்பத்திகளை வாயுவூட்டல் (GASIFICATION) மூலம் மெதனோலை உற்பத்தி செய்யலாம். தற்போது வர்த்தக ரீதியான மெதனோல்களில் கிட்டத்தட்ட அனைத்துமே இயற்கை வாயுக்களிலிருந்து தயாரிக்கப்படுகின்றன. மதுபானங்கள் வழியாக நுகரப்படும் மதுசாரமான எதனோலானது ஒரு கரைப்பனாகவும் பயன்படுத்தப்படுகிறது. வேறு இரசாயனங்களை உருவாக்குவதற்கு ஆரம்பப் பொருளாக பரவலாகப் பயன்படுத்தப்படும் மெதனோல் ஆனது ஒப்பீட்டளவில் நச்சியல்பான (TOXIC) தாக இருக்கிறது.

<u>மதுசார எரிபொருட்களின் பயன்பாடு</u>

மதுசாரத்தின் நன்கு அறியப்பட்ட ஒரு பயன்பாடாக பெற்றோலுக்கு மாற்றீடாக அதனைப் பயன்படுத்துவது இருக்கிறது. இயந்திரங்களை மாற்றியமைக்கவேண்டிய அவசியமில்லாமலே 20 விழுக்காடு வரையினதான எதனோலை பெற்றோலுடன் கலந்து பயன்படுத்தலாம். இவ்வாறு பயன்படுத்தப்படும் எதனோல் நீர் கலவையில்லாமல் இருக்க வேண்டும். மதுசாரமும் நீரும் கொண்ட ( கொதிநிலை மாறாக்கலவை - CONSTANT BOILING -MIXTURE யான) எதனோலின் 95% வடிவமானது இயந்திரங்களை மாற்றியமைக்காமலே நேரடியாகப் பயன்படுத்தக் கூடியதாகும். மெதனோலை 15 விழுக்காடு வரையான அளவில் பெற்றோலில் கலந்தும், 100 விழுக்காடு அளவில் மாற்றியமைக்கப்பட்ட இயந்திரங்களிலும் பயன்படுத்தலாம்.

பெற்றோல் இயந்திரங்களில் பயன்படுத்துவது போல் இலகுவாக மதுசார எரிபொருட்களை நேரடியாக டீசல் இயந்திரங்களில் பயன்படுத்த முடியாது. டீசல் இயந்திர அமைப்பில் அவை உடனடித் தகனம் அடையமுடியாமையே இதற்கு காரணமாகும். டீசல் இயந்திரங்களில் இவற்றைப் பயன்படுத்துவதாயின் மதுசார எரி பொருட்களை ஒப்பீட்டளவில் விலை கூடிய அமைல் நைற்றேற் (AMYL NITRATE) போன்ற பொருட்களுடன் கலந்து அவற்றின் தகனத் திறன்களை அதிகரிக்க வேண்டும். அல்லது வளி உள்ளெடுப்பிடத்திலே பொருத்தப்படும் விசேட சாதனத்தின் மூலம் டீசல் எரிபொருளோடு அவற்றை இழுபடச்செய்ய வேண்டும். பரவலான பாவனைக்கு அறிமுகப்படுத்தக் கூடிய விதத்திலே நிறைதிருப்தியான முறையில் டீசல் இயந்திரங்களில் மதுசார எரி பொருட்களைப் பயன்படுத்தும் முறை எதுவும் இதுவரையில் கண்டுபிடிக்கப்படவில்லை. டீசலுக்கான (தொழில்நுட்ப ரீதியாக) எளிமையான மாற்றீடாக மரக்கறி எண்ணை (VEGETABLE OIL) யை பயன்படுத்துவதிலேயே கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

வெப்பமூட்டுதல், ஒளியூட்டுதல் நோக்கங்களுக்கும் மதுசாரத்தை பயன்படுத்தலாம். இவை தூய்மையானவையும் ஒப்பீட்டளவில் பாதுகாப்பானவையுமான எரிபொருட்களாக இருக்கின்றன. இவை நீரோடு கலக்கும் தன்மை கொண்டவையாக இருப்பதால் இவற்றால் ஏற்படும் தீயை அணைப்பது ஒப்பீட்டளவில் இலகுவானதாகவிருக்கும்.

<u>நிலையான மற்றும் மாறக் கூடிய உற்பத்திச் செலவுகள்</u>

மதுசாரத்தை உற்பத்தி செய்வதில் ஏற்படக் கூடிய சில செலவுகள் செய்முறைகளைப் பொறுத்து ஏற்படுபவையாக இருப்பதோடு ஒப்பீட்டளவில் ஒரே அளவினதாக இருக்கின்றன. இத் தொழிற்சாலைகள் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் இருந்தாலென்ன, தொழில் துறைமயமாகிவிட்ட நாடுகளில் இருந்தாலென்ன இச் செலவுகள் ஒரேமாதிரியாக இருக்கும் போக்கே காணப்படுகிறது. பொருண்மிய அடிப்படையிலே சிறிய அளவு தொழிற்சாலைகளில் உருவாக்கப்படும் மதுசாரம் அதிக விலை கொண்டதாகவே காணப்படுகின்றது. குறிப்பாக மெதனோலைப் பொறுத்தவரை இது உண்மையாக இருக்கிறது. மெதனோல் உற்பத்திக்கென அமைக்கப்பட்ட சிறிய தொழிற்சாலைகள் இதுவரையில் இலாபகரமானவையாக மெய்ப்பிக்கப் படவில்லை. ஒரு கலனுக்கு ஒரு வருடத்துக்கான முதலீட்டுச் செலவானது (வருடாந்தக்கலன் - ANNUAL GALLON) எதனோலுக்கு அண்ணளவாக $1.50 - $2.00 வரையானதாக இருக்கிறது. மெதனோலினுடையது $1.20 ஆகும்.

எதனோல் உற்பத்திக்கான மொத்தச் செலவிலே 60 - 70 இடைப்பட்ட விழுக்காடு மூலப் பொருட்களுக்கும், 20 விழுக்காடு உற்பத்திச்செலவுகளுக்குமாக மிகுதி முதலீட்டுக்கான இலாபமாகவும் இருக்கிறது. மெதனோலின் மூலப் பொருட்களின் கிரயம் எதனோலுடையதைவிட குறைவானதாக இருக்குமெனினும் தொழிற்சாலைக்கான முதலீடு அதிகமானதாக இருக்கும். அதிக கனவளவிலான மூலப் பொருட்களும் தேவைப்படும்.

இவை இரண்டினதும் உற்பத்திக்கான மூலப் பொருட்களை உற்பத்தி செய்து விநியோகிப்பதற்கு பயன் விளைவான அமைப்பு ஒன்று இருப்பது இலாபத்தை அதிகரிக்கும்.

தொடரும்..



# காசாளரின் கைங்கரியம்

**மாவன்னா**

அன்று சனிக்கிழமை. வீட்டிற்குச் செல்வதற்காகப் புறப்பட்டுக் கொண்டிருந்தேன். பஸ் தரிப்பிடத் தில் எனது சக நண்பன் ஒருவர் அமைதியற்ற முகத்தோடு காணப்பட்டார். வணக்கம் என்று சொன்னதற்குக் கூட பதில் வணக்கம் வரச் சுணங்கியது.

"என்னப்பா? கவலை போல் தெரிகிறதே என்ன சமாச்சாரம்? சொல்லி ஆறலாமல்லவா'' என்றேன் அவர் தொடங்கினார்:

''என்னுடைய சகோதரி ஒருத்தி கனடாவிலிருந்து 4 லட்சத்து 5 ஆயிரம் ரூபாவை எனது கணக்கிற்கு அனுப்பியிருந்தாள்: அம்மா, அப்பா, சகோதரிகளுக்காக. அதை எடுப்பதற்காக யாழ்ப்பாணத்தில் உள்ளதனியார் வங்கிஒன்றுக்குப் போயிருந்தேன். எல்லா நடவடிக்கைகளும் முடிந்து பணம் கைக்கு வந்தது. ஏற்கனவே பணத்தைப் பெற்றவர்கள் அதை எண்ணிப் பார்க்காமலே கொண்டு சென்றது எனக்குச் சிறிது கிலேசமாக இருந்தது. ஆகவே எண்ணத் தொடங் கினேன்.

நான் யாரையும் கவனிக்காததினால் என்னை யார் கவனிக்கிறார்கள் என்பதைப் பொருட்படுத்தாமல் பணத்தை அவதானமாக எண்ணினேன். ரூபா இருபதினாயிரம் இல்லாமலிருந்தது. உடம்பெல்லாம் வியர்த்தது. எனது ஒரு வருட உழைப்புக்குச்சமன். விடயத்தைச் சொன்னேன். எந்தவித சலனமுமின்றி இருபதினாயிரம் பலகையில் விழுந்தது. என்னால் நம்பவே முடியவில்லை. எண்ணிப் பார்க்காத எத்தனைபேர்களுக்கு இப்படி...? வரவர சுருதி குறைந்து கொண்டு போனது அவர்குரலில்.

"நீர் உடனடியாக இந்த விடயத்தை அவ்விடத்திலேயே பிரஸ்தாபித்திருக்கலாமே?" என்றேன்,

எனக்கு ஒரு விதத்தில் பயமாக இருந்தது. இதைப்பற்றி நான் பலமாகக் கதைத்து நாலுபேரைக் கூட்டி விட்டால் எனது பணத்திற்குப் பாதுகாப்பு இல்லாது போய் விடுமோ எனப் பயந்து விட்டேன். இது எனக்கான பணமுமல்ல. எனது இளைய சகோதரியின் திருமணத்திற்காக அனுப்பப்பட்ட பணம். நல்ல வேளை, எண்ணிப் பார்க்காது விட்டால் திருமணத்திற்கு முன்னர் எங்கள் குடும்பமே சின்னா பின்னமாகியிருக்கும். நான் இருபதினாயிரத்தை மடக்கி விட்டதாக நினைக்க மாட்டார்களா? பிறகென்ன..."

அவர் முடித்து விட்டார் என்பதை விட நான் ஆவேசமாகி விட்டேன் என்பது தான் உண்மை. எத்தனை பேருக்கு வங்கியில் பெற்றுக் கொண்ட பணத்தை எண்ணிப் பார்ப்பது கௌரவக் குறைவாகப்படுகின்றது. பாடுபடாத பணம் தானே என்ற கரிசனையற்ற தன்மையும் இதற்கு ஒரு காரணமல்லவா? போலித்தனமான கௌரவங்களால் எவ்வளவு மோசமான செயல்கள் ஏற்பட்டுப் போகின்றன.

கேட்டவுடன் பணத்தைக் கொடுத்தவர் கூட, வாடிக்கையாளர்களின் அசமந்தப் போக்கையும், போலிக்கௌரவத் தையும் புரிந்து பழகியதினால் தானே தவறான இந்த நடவடிக்கையில் தன்னை ஈடுபடுத்த முடிந்துள்ளது. களவாடுபவன் மட்டுமல்ல: களவு கொடுப்பவரும் களவுக்குக் காரணம் என்பதை நன்றாக உணர்ந்து கொண்டால் இந்தச் சந்தர்ப்பங்கள் இல்லாமல் போக வாய்ப்புண்டல்லவா?

# வேகமாய் நகர்த்தப்படும் காய்கள் இலக்கை எட்டக் கூடுமா?





பதின்னான்காந் திகதி இரவு. சுவர்ணவாஹினியின் பத்திரிகையாளருக்கு 'சனாதிபதி மந்திரய'வில் சிறிலங்காவின் நிறைவேற்றதிகாரமுள்ள சனாதிபதி சந்திரிகா அம்மையார் தனது பரிவாரங்களுடன் கூடியிருந்து வழங்கிய செவ்வியில் இலங்கையின் அரசியல், சமூக, பொருண்மிய வாழ்வுக்கான கனவுகள் மீது அதிரடித் தாக்குதலொன்றை நடாத்தினார். அரசல் புரசலாகவும் நேரடியாகவும் இதுவரை அவரும் அவரது பரிவாரங்களும் தெரிவித்து வந்த கருத்துக்களின் பச்சையான சாராம்சத்தை சந்திரிகா தன்வாயாலேயே அன்று போட்டுடைத்தார்.

"சிறிலங்காவின் பிரதமர் எந்தவித அதிகாரமுமற்றவர். அவர் அமைச்சரவையில் ஒரு உறுப்பினர் மட்டுமே. வேண்டுமென்றால் சனாதிபதி இறந்தால் அவரின் கதிரையில் அமரும் அதிகாரம் மட்டுமே அவருக்குண்டு. ஆனால் தற்போதய பிரதமர் அதிகாரங்களுள்ள ஒருவர் போல நடந்து கொள்கிறார்."

"மூன்று வருடங்களுக்கு பாராளுமன்றத்தைக் கலைக்க மாட்டேன் என உறுதிமொழி வழங்கியிருந்தேன். ஆனால் அவர்கள் அதனை நம்பாமல் 19 வது திருத்தத்தைக் கொண்டுவர முயன்றார்கள். எனது அந்த உறுதிமொழி இப்போது செல்லுபடியாகாது."

இவ்வாறு சந்திரிகாவினது சுவர்ணவாஹினிச் செய்தியின் சாராம்சத்தைப் பதினைந்தாம் திகதியன்று பீ.பீ.சீ. வெளியிட்டது. இக்கூற்றின் இறுதி வசனத்தைத்தான் முதற்பத்தியில் 'அதிரடித் தாக்குதல்' என விபரிக்கப்பட்டுள்ளது.

சுதந்திர சிறிலங்காவின் 2வது அரசியல்யாப்பின் சிக்கல்களின்படி பாராளுமன்ற அதிகாரத்துக்கும் நிறைவேற்றதிகாரத்துக்குமான இழுபறி, 'சகவாழ்வு' என்பவற்றுக்கு நடுவே நிறைவேற்றதிகாரம் தனது நட்டாமுட்டித்தனத்தோடும் அரசியல் கயவாலித்தனத்தோடும் முன்னகர முற்படும் போக்கின் தெளிவான எச்சரிக்கை அல்லது குறிகாட்டியே இதுவாகும். இப்போது தன்னிடம் எஞ்சியுள்ள நிறைவேற்றதிகாரம் என்ற மந்திரக்கோலினைக் கையிலெடுக்கச் சந்திரிகா தயாராகி விட்டாரா? என்னும் கேள்விக்கு நேர்ப்பதிலைத் தருவது போலப்படுகிறது.

அரசியல் கயவாலித்தனமான பொ.ஐ. முன்னணியின் நடவடிக்கையாகத் தற்போதய பாராளுமன்றத்துள் தூண்டில் போடுவதும் அதற்கான இரையாகத் தீவிரசிங்கள இனவாதத்தை வீசியும், முஸ்லிம் கட்சிகளை உடைத்தும் குழப்பியும் ரவூப் ஹக்கீம் குறிப்பிட்டது போல "தற்போதய பாராளுமன்றச் சமன்பாட்டை மாற்றி" பின்கதவால் ஆட்சியைக் கைப்பற்றிவிடும் பகீரதப் பிரயத்தனம் அமைகிறது. இப்பிரத்தனம் ஏதோ வெற்றி பெற்றே விட்டது என்பது போல சமநாளன்று அம்பாந்தோட்டையில் எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ச பொதுக்கூட்டமொன்றில் (அரசுக்கெதிரான ஆர்ப்பாட்ட ஊர்வலத்தினைத் தொடர்ந்து நடந்த பொதுக்கூட்டத்தில் ) மிக வெளிப்படையாகவே பேசியுள்ளார்.

இப்போதய அரசியல் சூழ்நிலையில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஜே.வி.பி.யுடன் அமைத்துள்ள கூட்டணி சந்திரிகா எங்கே நிற்கிறார் என்பதைச் சொல்லிவிடப்போதுமானது. அத்தோடு, விடுதலைப்புலிகளுடன் அரசாங்கம் சேர்ந்து இயங்கக் கூடுமானால் ஜே.வி.பி.யுடன் நாங்கள் ஏன் கூட்டணி சேரக் கூடாது? என்று கேள்வி எழுப்பும் அளவுக்கு அவர்கள் போய்விட்டதும் குறிப்பிடத்தக்கது.

ஆகவே இன்றைய சூழலில் சிறிலங்காவின் அரசியற்புலத்தில் என்ன நடக்கலாம்? மூன்றுவிதமானசாத்தியப்பாடுகளை அவதானிகள் சுட்டிக் காட்டுகின்றனர்.

ஒன்று, பாராளுமன்றத்தில் உள்ள எதிரணியினர் அனைவரையும் ஒரே கூடையுள் திரட்டியும் ஐ.தே.கட்சியில் இருந்து முடியுமான வரை அதிருப்தியாளர்கள், தீவிர இனவாதிகள் தேர்தலுக்கு முகங்கொடுக்க அஞ்சுபவர்கள் என சாத்தியப்படும் அனைவரையும் பெயர்த்தெடுத்தும் பொ.ஐ.முன்னணியின் தலைமையில் புதிய அரசாங்கமென்றை அமைத்தல்.

இதற்கு ஜே.வி.பி.யின் கூட்டு, முஸ்லிம் கொங்கிரசின் அதிருப்தியாளர்கள் தே.ஐ. முன்னணி, ஈ.பி.டீ.பி., ஐ.தே.கட்சியிலிருந்து பெயர்த்தெடுக்கப்படுவோர் அகியோர் உதவக் கூடுமெனவும், 110 ஆசனங்களைத் திரட்டினால் இ.தொ.காங்கிரசின் ஆதரவையும் பெற்றுக்கொள்வது சாத்தியமெனவும் பொ.ஐ. முன்னணி நம்புகிறது. கூறிக்கொள்கிறது. திட்டமிடுகிறது.காய் நகர்த்துகிறது.

ஆனால் எவ்விதமான சித்து விளையாட்டுக்களை ஆடிய போதும் ஆட்சியமைப்பதற்குத் தேவையான 113 உறுப்பினர்களின் ஆதரவைத் திரட்டுவ தென்பது முயற்கொம்பாகவே இருக்கும். இங்கு தமிழ்த்தேசியக் கூட்டணியின் 15 ஆசனங்களும் 'தீர்மானிக்கும் சக்தி' யாக மாற்றமெடுக்கும் சூழல் உருவாகக்கூடும் ஐ.தே.முன்னணியில் இருந்து யாராவது வெளியேறின், 'ஆட்சியமைப்பதற்குத் தேவையான 113 உறுப்பினர்களின் ஆதரவு 'என்ற இலக்கை அடைவதற்கு தமிழ்க் கூட்டமைப்பின் 15 உறுப்பினர்களின் ஆதரவு இருபகுதியினருக்குமே முக்கியமானதாக அமையும். "முஸ்லிம் கொங்கிரசின் உட்பூசலால் அரசாங்கத்துக்கு ஆபத்து விளையுமானால் தமிழ்க்கூட்டமைப்பு அரசாங்கத்துக்கு ஆதரவளிக்கும்'' என அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்கள் குறிப்பிட்டது இங்கே கவனம் பெறுகிறது.

இரண்டாவது, ஏதாவது ஒரு காரணத்தை, சாட்டைக்கூறி ரணிலின் அரசைப்பதவிநீக்கம் செய்துவிட்டு 'பிரதமரையும் அமைச்சரவையையும் நியமிக்கும்' தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி, தனதுகட்சியைச் சேர்ந்த ஒருவரைப் பிரதமராக்கி அமைச்சரவையையும் நியமிப்பது. (புலிகளின் குரல் வானொலிக்கான எவ்.எம். ஒலிபரப்புச் சாதனங்கள் விவகாரம்கூட இதற்கான காரணமாக அமையக்கூடும்.)

சரி, இவ்வாறு 'நியமிக்கப்படும் அரசாங்கத்தால்' நிலைத்திருக்க முடியுமா? அது பாராளுமன்றத்தில் தனது பெரும்பான்மை ஆதரவை நிரூபிக்க முடியுமா? மக்களின் நம்பிக்கையைப் பெறமுடியுமா? இங்கேதான் சிறிலங்காவின் தற்போதைய அரசியலமைப்பின் ஓட்டைகள் தனக்கு உதவுமெனச் சந்திரிகா எதிர்பார்க்கிறார் போலும்.

நியமிக்கப்படும் பிரதமருக்கு தனது பெரும்பான்மைப் பலத்தை நிரூபித்துக்காட்ட வேண்டிய கடமைப்பொறுப்பெதுவும் தற்போதைய அரசியலமைப்பின்படி கிடையாது. அப்படியாயின் இதற்கு ஐ.தே. முன்னணி எவ்வாறான பதில் நடவடிக்கை எடுக்கக் கூடும்? புதிய பிரதமரின் அரசாங்கத்தின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றைக் கொண்டுவரலாம். இதனைச் சபாநாயகரிடம் சமர்ப்பித்தால் (தற்போதைய சபாநாயகர் ஐ.தே. கட்சியைச் சேர்ந்தவர் என்பது இங்கு முக்கியம் பெறுகிறது.) அதனை அவர் பாராளுமன்ற நிகழ்ச்சி நிரலில் சேர்த்த பிற்பாடு விவாதத்துக்கும், வாக்கெடுப்புக்குமான திகதியையும் அறிவிக்க வேண்டும்.

இவ்வாறான கட்டம் வருமெனில், விவாதம் ஆரம்பமாவதற்கு முன்னர் 2000ஆம் ஆண்டில் செய்ததைப் போன்றே பாராளுமன்றத்தை ஒத்திவைக்கலாம். கிடைக்கும் கால அவகாசத்தில் மேலும் தூண்டில் வீசலாம். 'இருமனத்தோடு' அல்லாடும் பாராளுமன்ற உறுப்பினர்களை வளைத்துப் போட்டுக் கொள்ள முடியுமாயின் பெரும்பான்மை பெறுவதை நோக்கி முன்னேறலாம். அது நிறைவேறாதுவிடின் பாராளுமன்றத்தைக் கலைத்துப் பொதுத்தேர்தலுக்கு உத்தரவிடலாம்.

அல்லது இவை எவற்றிலுமே பட்டுக் கொள்ளாமல் நேரடியாகவே பாராளுமன்றத்தைக் கலைத்துப் புதிய தேர்தலுக்கு உத்தரவிடுதல். இதுவே மூன்றாவது சாத்தியப்பாடு.

சரி, இவ்வாறான ஆட்சி மாற்றத்துக்கோ, பொதுத்தேர்தலின் போது பொ.ஐ. முன்னணிக்கோ மக்கள் ஆதரவளிப்பார்களா?

இந்தப் பெரிய கண்டத்தைத்தாண்டவே "பேச்சுவார்த்தைகள் மூலம் நாடு துண்டாடப்படப் போகின்றது" என்னும் பேரினவாத

இ. விவேகானந்தன்

ஆயுதத்தையும் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு என்ற 'மக்கள் நல' ஆயுதத்தையும் இருகைகளிலும் ஏந்திச் சுழற்றிவருகிறார். கிடைக்கும் சிறுசிறு துரும்புகளையும் பல்குத்தப் பாவிக்கிறார். மக்களின் கஸ்ரங்கள் குறித்து மிக அதிகமாகவே கவலைப்படுகிறார். அவரின் ஆள், அம்பு, சேனைகள் சிறிலங்காவின் பட்டிதொட்டியெங்கும் 'அரசின் மக்கள் விரோதப் போக்கைக்' கண்டித்து ஆர்ப்பாட்டங்கள், கண்டனக்கூட்டங்கள் நடத்துகிறார்கள். தொழிலாளர்களின் உரிமைகள் பற்றி அதீதமாக அக்கறை எடுத்துக் கொள்கிறார்கள். அரச ஊழியர்களுக்குச் சம்பள அதிகரிப்பு வழங்கப்படாததையிட்டுக்கவலையடைகிறார்கள்.

இந்த ஆயுதங்கள் பயனளிக்கப்போவதில்லை என்பது சந்திரிகாவுக்குத் தெரியாமலில்லை. ஆனால் சமாதானப் பேச்சுவார்த்தைகள் மேலும் முன்னேறி ஒரு தீர்க்கமான கட்டத்தை அடைந்து விட்டால்; மக்கள் சமாதானக்காற்றைச் சுவாசித்து அதன் பலன்களை அனுபவித்து அதிகாரப்பரவலாக்கல் ஒன்றிற்கான மனப்பக்குவத்தை அடைந்து விட்டால் தமக்கான அரசியல் எதிர்காலம் கிட்டிய எதிர் காலத்துக்குச் சூனியமாகி விடுமென்பதே அவரின் கவலை. எனவே இந்தப் பேராபத்தில்' இருந்து மீள்வதற்காக தற்போதய அமைதிச்சூழலை இல்லாதொழிப்பதற்கு அவர் பகீரதப்பிரயத்தனங்களை எடுத்து வருகிறார்.

சரி, நாங்கள் இப்போது சர்வதேச சமூகம் இதுபற்றி என்ன கருதும் என்று பார்ப்போம். சந்திரிகா அம்மையாரின் மேற்படி 'அதிரடித் தாக்குதல்' நிகழ்ந்து சில தினங்களாகியும் எந்த நாடும், சர்வதேச அமைப்பும் இது பற்றி அலட்டிக் கொண்டதாகத் தெரியவில்லை.

மாறாக, கிளிநொச்சியில் நடைபெற்ற புனர்வாழ்வு, புனரமைப்புக்கான உபகுழுக் கூட்டத்தில் ஜப்பான் பிரதமரின் விசேட பிரதிநிதியும் அவரது குழுவினரும், ஐ.நா. அகதிகள் உயர் ஸ்தானிகராலயப் பிரதிநிதிகளும், மற்றும் உலக வங்கியின் தெற்காசியாவுக்கான பிரதித்தலைவரும் அவரது குழுவினரும் பங்குபற்றியிருக்கிறார்கள். நிதியுதவிகள் யூன் மாதத்தில் ரோக்கியோவில் நடைபெறவுள்ள இலங்கைக்கான உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு என்பவை. பற்றியெல்லாம் பேசியிருக்கிறார்கள்.

இதையே பீ.பீ.சி. பின்வருமாறு விமர்சித்தது. "சர்வதேச நாடுகளும் மக்களும் சமாதான முயற்சிகள் மீது அதீத அக்கறை செலுத்தி வரும் சந்தர்ப்பத்தில் சனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்." அதாவது சனாதிபதியின் கருத்து எவ்வாறிருந்தபோதும் உலகினதும் மக்களினதும் ஆதரவும் கருத்துக்களும் தற்போதய அரசின் மீதும் அதன் சமாதான நகர்வுகள் மீதுமே சாதகமாகவுள்ளன என்கிறது பீ.பீ.சி.

இதனை எதிர் கொள்ளவே அம்மையாரின் அணியினர் இந்தியாவை தம்பக்கம் வளைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். இந்தியாவின் நலன்கள் மீது பொதுசன ஐக்கிய முன்னணிக்கும் அதற்கு முண்டு கொடுக்கும் சக்திகளுக்கும் அதீத அக்கறை பிறந்துள்ளது. "அமெரிக்காவை விட நோர்வேயைவிட எமக்கு இந்தியாதான் முக்கியமானது'' என்கிறார் சனாதிபதியின் ஆலோசகர் அனுரா! இந்தியாவை விட இந்தியநலனில் இவர்கள் அதிக அக்கறை கொண்டுள்ளனர். முதலில் அனுரா, சரத் அமுனுகம, மங்கள சமரவீர இப்போது கதிர்காமர் எனத் தூதுகள் இந்தியாவுக்குப் போய்க்கொண்டே இருக்கின்றன. எப்படியாவது இந்தியாவைக் கோதாவில் இறக்கிவிடுவது என்ற இலக்குடன் உருவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் டில்லியின் 'சவுத் புளொக்' கில் உருஏறுவதாகத்தெரியவில்லை.

ஆனாலுங்கூட அம்மையார் தற்போதய அமைதிச் சூழலின் காற்றின் ஒவ்வாமையால் தனது காய்களை வேகமாக நகர்த்திக் கொண்டே இருக்கிறார். நாட்டின் நலன் மக்களின் எதிர்பார்ப்பு என்ற எந்தக் காயை வெட்டியாவது தனது இலக்கை நிறைவேற்ற அவர் தீவிரமாகவேயுள்ளார். ■

> "சிறிலங்காவின் பிரதமர் எந்தவித அதிகாரமுமற்றவர். அவர் அமைச்சரவையில் ஒரு உறுப்பினர் மட்டுமே. வேண்டு மென்றால் சனாதிபதி இறந்தால் அவரின் கதிரையில் அமரும் அதிகாரம் மட்டுமே அவருக்குண்டு. ஆனால் தற்போதய பிரதமர் அதிகாரங்களுள்ள ஒருவர் போல நடந்து கொள்கிறார்."

உழைக்கும் கரங்கள், வழிபடும் கரங்களை விட மதிப்பு மிக்கவை. - ஸரதுஸ்திரர்.







# குதூகலம்




## வாசகப் பிரியர்

எனக்குத் தெரிந்த சந்தை ஒன்றின் மனேஜர் சரியான வாசகப்பிரியன். அதாவது நல்ல வசனங்கள் கிடைத்தால் உடனேதன் அறையில் அதைக் குடியேற்றி விடுவார்.

ஒரு நாள் அவரின் அறைக்கு விஜயம் செய்தேன். வாசகம் இல்லாத இடத்தைத் தேடினேன் எங்கும் வாசகம். எதிலும் வாசகம். அதில் என்னைக் கவர்ந்த வாசகம் இதுதான்.


"இங்கு யார் வந்தாலும் நான் மகிழ்ச்சியடைகிறேன். சிலர் வரும் போது மகிழ்சியடைகிறேன். மற்றும் சிலர் போகும் போது மகிழ்ச்சியடைகிறேன். நீங்கள் எந்த ரகமோ...?"



## பொழுது போக்கு

அமெரிக்க அதிபர் கால்லின் கூலிப்பிடம் ஒரு பெண்மணிகேட்டார் "உங்களின் பொழுது போக்கு என்ன"


"பதவியில் இருப்பது" என்று பதில் வந்தது.



## படப்பிடிப்பாளர்

இறந்து போனவரைப் படம் எடுக்கச் சென்றார் ஒரு படப்பிடிப்பாளர் படம் எடுக்கத்தயாரானவுடன் பழக்க தோசத்தில் சொன்னார்

"ஸ்மைல் பிளீஸ்" என்று




## ஆறடி உயரம்

அப்பாவுக்கு அறுபதாவது பிறந்தநாள் பத்திரிகையில் வாழ்த்துப் பிரசுரிக்க வேண்டும். எவ்வளவு காசு? என்று கேட்டவருக்கு

"சென்ரி மீற்றருக்கு நூறுரூபாய்" என்று விளம்பர முகாமையாளர் சொன்னார். அதைக் கேட்டவுடன் விளம்பரம் கொடுக்க வந்தவர் "என் அப்பா ஆறடி உயரம் எமக்கு அவளவு கட்டுப்படியாகாது என்றார்.

சீர் நேர்மைக்கதை, சிறப்பாகச் செல்லும்; நேர் இயல்பு நடையில், நவிலும் போது. — வில்லியம் ஷேக்ஸ்பியர்.

# அரங்கேறுமா இன்னுமொரு மோதல்



இதை வேறு எப்படித் தான் அழைப்பது..?

இது அப்பட்டமான ஆக்கிரமிப்பிற்கான அச்சுறுத்த லேதான்!

காலமும் தீர்மானிக்கப் பட்டு விட்டது :- வரும் பெப்ரவரி பிற்பகுதி.

ஊடகங்கள் தினமும் தகவல்களை அள்ளித்தரு கின்றன:- ஈராக் - அமெரிக்க மோதல் குறித்து.

ஈராக்கின் மீதான படை யெடுப்பிற்கு அமெரிக்கத் தலை மையிலான கூட்டு, அதியுச்ச செயற்பாடுகளில் இறங்கியுள்ளது. ஏற்கனவே. நவீன போராயுதங் களுடன் 150,000 பேர்வீரர்கள் ஈராக்கின் அயலிலுள்ள அமெரிக்க நட்பு நாடுகளுக்கும். கடற்பிராந் தியங்களுக்கும் அமெரிக்காவி னால் அனுப்பிவைக்கப்பட்டு சிறப்பு பயிற்சிகளிலீடுபடுகின்றனர். மேலும் 37,000 போர்வீரர்கள் அவர் களுடன் இணைகிறார்கள். கூட் டாளி பிரிட்டன் 30,000 வீரர்களை மேலதிக போர்க்கரங்களுடன் அனுப்பி வைத்துள்ளது. இது தவிர தொலைதூர அடியொற்றி களும் தங்கள் பங்குக்கு "சனநாய கத்தை" க்காக்க வேண்டுமே என்ற ''குறிக் கோளுடன்'' கூட்டில் இணைகின்றனர்.

ஐ.நா.பாதுகாப்புச்சபை யின் தீர்மானத்திற்கமைவாக ஈராக் சென்றிருக்கும் பேரழிவு ஆயுத சோதனைக் குழுவினர் ஓடி ஓடித் தேடியலைகிறார்கள் - மோப்ப நாய்களுடன். பேரழிவு ஆயுத சோதனைக் குழுத்தலைவர் ஹன்ஸ் ப்ளிக்ஸ் கொடுத்துள்ள அறிக்கையை - ஐ.நா பாதுகாப்பு சபை வரும் மாதம் 3ஆம் நாள் மதிப்பீடு செய்யுமாம்.

அமெரிக்கப் பாதுகாப்புச் செயலர் கொலின் பவல் ஈராக்கின் பேரழிவு ஆயுதங்களைக் களை வதற்கான பொறுப்பு ஐ.நா. விடம் உண்டு என ஐ.நா.பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் கடந்த 20ஆம் திகதி மொழிந்தார். போரின் பின் விளைவுகள் குறித்து சில பாதுகாப்பு சபையின் உறுப்பு நாடுகளான பிரான்ஸ், ஜேர்மனி உட்பட சில நாடுகள் படையெ டுப்பை எதிர்க்கின்றன. உலகெங் கும், அமெரிக்காவின் நகரங்க ளிலும் கூட "ஈராக்கில் கை வையாதே" என்ற கோஷங்க ளுடன் பெரும் பேரணிகள் முன்னெப்போதுமேயில்லாத வகையில், ஒரே விடயத்தை முன்வைத்து நடந்தேறுகின்றன.

கூட்டாளி பிரிட்டனின் 80 வீதமான மக்கள், அண்மைய கருத்துக்கணிப்பின்படி ஈராக் மீதான போர்த் தொடுப்பை எதிர்க் கிறார்கள்.

ஈராக்கின் அதிபர் சதாம் ஷுசைன் பழம் பெருமை பாராட்டி, எப்படி மொங்கோலிய ஆக்கிரமிப்பாளர்கள் முன்னர் தலைநகர் பக்தாதின் வாசலில் கொல்லப்பட்டார்களோ அதே போன்று வரலாறு திரும்பும் என்ற எதிர்பார்ப்புடன் இப்புதிய ஆக்கிரமிப்பாளர்கள் அழிக்கப் படுவார்கள் என்கிறார். அத்துடன் தனது தூக்கம் அப்படி ஒன்றும் கெட்டுவிடவில்லை என்றும் கூறகிறார். (கட்டித்தழுவி கண்ணீருடன் கணவர் களையும் பிள்ளைக ளையும் வழியனுப்பும் அமெரிக்கப் பெண்களுக் கும், பெரும் அழிவை எதிர்நோக்கும் ஈராக்கின் மக்களுக்கும் தூக்கம் முகவரியின்றியே தொலை ந்து விட்டது என்று நீங்கள் முணுமுணுப்பதும் கேட் கிறது)

உலக அபிப்பிரா யத்தை மீறி யுத்த சன்னதங் கொண்டுள்ள புஷ், பிளே யர் கூட்டு என்ன கூறு கிறது?

1) அயல்நாடுகளுக்கு எதிராகவும் தனது ஈராக்கிய குர்தீஷ் மக்களை அழிக்க வும் (ஈராக்கிய அதிபர், குர்தீஷ் மக்களது தேசிய விடு தலைப் போராட்டத்தை நசுக்கு வதற்காக நச்சுக்குண்டுகளை வீசி, 5000 குர்திஷ் பொதுமக்களை முன்னர் கொன்றிருந்தார் எனக் கூறப்படுகிறது) ஈராக் பேரழிவு ஆயுதங்களைப் பிரயோகிக்கத் தயங்காது.

2) இவ்வகையில், சதாம் உலகின் வெறுக்கத்தக்க அநாகரீக நபர், ஆபத்தான மக்கள் விரோதி.

3) எனவே, சதாம் அகற் றப்படவேண்டும். அல் லது அழிக்கப்பட வேண்டும்.

4) சதாம் அரங்கிலிருந்து அகற்றப்பட்டாலேயே ''உன்னதமான சன நாயகம்'' காப்பாற் றப்படும், "மனித நாக ரீகம்" பேணப்படும்.

இந்தவகை "சனநாயகத்தை" காக்கப் போகின்ற தான்தோன் றிப் பாதுகாவலர்கள், ஈராக்கிய மக்களது மீற முடியாத, மறுதலிக்கக் கூடாத இறைமையை ஏறி மிதித்துக் கொண்டு, சனநாயகத்தை மீட்டெ டுத்தல் எனும் அரிதாரத் தைப் பூசி ரௌத்திர தாண்டவம் ஆடவரு கிறார்கள்.

புதிய உலக ஒழுங்கின் கீழான சனநாயகத்தைப் பாது காக்க, வன்முறை அச்சுறுத்தல், அல்லது வன்முறைப்பிரயோகம் அவசியம் என்றால், "சனநாய கத்தைப்'' பேணமக்களது இறைமை மீறப்படுதல், ஏற்றுக் கொள்ளப்பட்ட விதிமுறையாகி விடுமல்லவா?

சனநாயகம். இறைமை என்ற சொற்களுக்கு புதிய வரைவிலக்கணம் அவசியமாகி விட்டதா?

சிறிது பின்னோக்கிப் பார்ப்போம்:

ஈராக் அதிபரின் மீது பெரும் குற்றச்சாட்டொன்று முன்வைக்கப்படுகிறது. ஈராக் அயல்நாடுகளை ஆக்கிரமிக்கும் நோக்கம் கொண்டது என்பதை ஆதாரப்படுத்த முன்வைக்கப் படுவது, - 1990, ஒகஸ்ற் 20ஆம் நாள் குவைத்தின் மீதான அதன் படையெடுப்பு ஆகும். ஒகஸ்ற் 20 ஆம் நாளிற்கு ஒரு வாரம் முன்னர் யூலை 25ஆம் நாள், ஈராக்கிற்கான அமெரிக்கத் தூதுவர் APRIL GLASPIE சதாமிடம் இவ்வாறு கூறியிருந்தார். "அமெரிக்காஉங் களது குவைத்துடனான எல்லைப் பிரச்சினையில் எதுவித கருத்து களையும் கொண்டிருக்க வில்லை." மேலும் அவர், "(அமெ ரிக்க) இராஜங்க அமைச்சர் STANLEY BAKER, அமெரிக்க அதிபரின் இப்பணிப்பினை, எமது உத்தியோகபூர்வப் பேச்சாளர் வலியுறுத்திக் கூறவேண்டும்.'' என்றதாகவும் சஞ்சிகையொன் றின் (HARPERS MAGAZINE) கட்டுரையாளர் ஜனவரி 1991 இல் குறிப்பிட்டிருந்தார். கசிந்த இத் தகவலை ஆராய்ந்த பத்தி எழுத்தாளர் JAMES MCCA





RTNEY, குவைத் மீதான ஈராக் படையெடுப்பிற்கு இது ஒரு அங்கீகாரமாகவே இருந்தது என்கிறார். படையெடுப்பிற்கு

**குத்தூசி**

இரண்டு நாட்களின் முன்பு, துணை இராஜாங்க செயலாளர் JOHN KELLY அமெரிக்க மக்க ளவையில் இடம் பெற்ற ஒரு விளக்கமளிப்பின் போது 'அமெரிக்காவானது குவைத்தி னது பாதுகாப்பைப் பொறுப் பெடுக்கவில்லையென குறிப்பிட்டி ருந்தார். அமெரிக்காவின் இரட்டைத்தன்மையான ராஜதந் திரம் வென்றது. குவைத்தின் மீதான சதாமின் படையெடுப்பு, அமெரிக்கப் படையணிகள் நிரந்த ரமாகவே மத்திய கிழக்கில் நிலை கொண்டுள்ள பாதையைத் திறந்து விட்டது. இக்கதை இப்போது தொடர்ந்து, பல புதிய தலை யீடு களுக்கு வழி சமைத்து விட்டது.

மேற்கத்திய போராயுத ஊட்டமுடன் முன்னர் வளர்த் தெடுக்கப்பட்ட அமெரிக்காவின் செல்லப்பிள்ளையான சதாம் அமெரிக்காவின் நலன்களுடன் ஒத்துப்போன போது அவரது நடவடிக்கைகள் கண்டு கொள் ளப்படவில்லை ஈரான், ஈராக் யுத்தத்தின் போது, எதிரிக்கு எதிரி தமது நண்பன் என்ற வகையி லேயே நடந்து கொண் டது அமெரிக்கா. செல் லப்பிள்ளை தோளுக்கு மேல் வளர்ந்து முரண் பட்டு தனது சொந்தத் தேசிய நலனில் முனைப படைந்து மத்திய கிழக் கின் சக்தியாக மாறு தல் அடைந்து வந்த போது, இது அமெரிக்க நல னுக்கு பாதிப்பு ஏற்படுத் தியதைத் தொடர்ந்து - சதாம் அமெரிக்காவின் வேண்டாப் பிள்ளை யானார். சதாமின் தேவை அமெ ரிக்காவிற்கு அவசியமில்லை என்றாகியது.

அமெரிக்க நலன் என்பது எப்போதுமே பெரும் மூலதனங் கொண்ட பல்தேசிய பகாசுர நிறு வனங்களது நலனைப் பேணுவ தைத் தவிர வேறெதுவுமில்லை. இவ்வகை நலனை மட்டுப்படுத்தி கட்டுப்படுத்தவல்ல மத்திய கிழக் குப் பிராந்திய சக்தியொன்றின் வளர்ச்சி அதாவது ஈராக்கின் வளர்ச்சி தாங்கவொண்ணாததா கியது. எனவே சதாம் அகற்றப் பட வேண்டியது முன்தேவையா கியது. ஈராக்கில் அடிப்பொடி யாக விளங்கல்ல ஒரு பொம்மை அரசு ஆட்சியிலமர வேண்டும் என்பதே இப்போதையகரிசனை.

பிராந்திய அரசியல் என் பது, குறிப்பிட்ட பிராந்தியத்தின் முதன்மை வலுக்கொண்ட நாட் டுடன் பிராந்தியத்தின் மற்றைய நாடுகள் கொண்டுள்ள பொருண் மிய, சமூக இராணுவ உறவு களாலும், தம்மிடையேயான, உறவுகளாலும், சர்வதேச வலுப் பெற்ற நாடுகளுடன் அவை கொண்டுள்ள உறவுகளாலுமேயே நிர்ணயிக்கப்படுகின்றது. வேறு பிராந்தியத்தைச் சேர்ந்த நாடுக ளின் ஊடுருவலை, பிராந்திய முத ன்மை வலுக்கொண்ட நாடு விரும் புவதில்லை. (நீ ஏன் எனது பிராந் தியத்தில் வந்து மூக்கை நுழைக் கிறாய் என்ற அதிகாரக்குரல் மிக அருகில் கேட்கிறதல்லவா?)

பிராந்தியத்தின் நாடு ஒன்று தங்கு நிலையற்று வலுப் பெற்றுவருவதை என்றுமே சர்வதேச சக்திகள் விரும்புவ தில்லை. ஏதோ ஒருவகையில் மட்டந்தட்டவே செய்கின்றன. சர்வதேச சக்திகள் தமக்கே உரித்தான சித்துவேலைகளில் இறங்கி, பிராந்திய நெருக் கடிக ளைப் பெரும் மோதல்களாக உருவாக்கிக் காய்களை நகர்த்து கின்றன. விளைவு, - பலமற்றவை- சரிவை எதிர்நோக்குகின்றன.

எனவேதான் ஈராக் - அமெரிக்க மோதலானது, நாடுக ளுக்கிடையேயான மேம்போக் கான அதிகாரப் போட்டியாகவோ, அல்லது மெய்யான முதன்மை



முரண்பாட்டிலிருந்து திசைதிருப்பு வதற்காக சிலரால் முன்வைக்கப் படும் நாகரீகங்களின் மோதலா கவோ கருதுவது, அறிவியில் ஆய்வாகாது. மாறாக அவை மெய்யான சனநாயகத்தையும், மக் களது இறைமையையும் கேலிக் கூத்தாக்கி நவீன ஏகாதிபத்தியத் திற்கு துணை போவதாக அமைந் துவிடும்.

அமெரிக்காவுக்கு அருகி வரும் பெற்றொலிய எரிபொருள் வளத்தினை கட்டுப்படுத்த நேரடி யாகவே அதன் உற்பத்தியையும், விநியோகத்தையும் கையகப்ப டுத்தவேண்டிய சூழலும் உருவா கியுள்ளது, பெற்றோலிய எரி பொருள் காணப்படும் புவிப் பரப்பு அமெரிக்க மேலாதிக்கத் திற்கு உட்பட்டிருக்க வேண்டி யதை புரிந்து கொள்வது எளிது.

அமெரிக்கத் தலைமையி லான கூட்டணி பொருண்மிய நெருக்கடிகளுக்கு ஆளாகி வருகி றது. போர்த்தளபாட உற்பத்தியை முதன்மைத் தொழிலாகக் கொண் டுள்ள நாடுகளுக்கு, சரியும் பொருண்மியத்தைத் தடுத்து நிறு த்த காலத்திற்கு காலம் யுத்தம் ஒரு அவசியத் தேவையாகும்.

மத்தியகிழக்கில் உரு வாக்கப்பட்டுள்ள ஈராக் - அமெ ரிக்க மோதலானது, நவீன ஏகாதி பத்தியத்திற்குள்ளேயே தோன்றி விட்ட உள்முரண்பாடுகளின் புறத் தோற்றமே. எனவே, உருவாகி வரும் ஏகாதிபத்திய எதிர்ப்பு எனும் முதன்மை முரண்பாட்டுடன் என்றோ ஒரு நாள் மோத வேண் டிய வரலாற்றச் சூழலைப் புரிந்து கொண்டுள்ள அமெரிக்கத் தலை மையிலான நவீன ஏகாதிபத்தி யம், உள்முரண்பாடுகளுக்கு முத லில் தீர்வு காணுவதற்காக முன் னெடுக்கும் ஒரு வேலைத்திட்ட மாகவே ஈராக் - அமெரிக்க மோத லைக் கணிக்கலாம்.

++

# நேர்நோக்கு

# ஏமாற்று வேலைகள் எடுபடாது

ஐரோப்பிய நாடுகளில் கடைப்பிடிக்கப்படும் சமஷ்டி முறை குறித்து ஆராய, ஆளும்கட்சி, பிரதான எதிர்க்கட்சி மற்றும் ஏனைய கட்சிப்பாராளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழு, ஐரோப்பிய நாடுகள் பலவற்றுக்குச் சென்று திரும்பியுள்ளது. மீண்டும் செல்லவுள்ளது. இனப் பிரச்சினைக்குத் தீர்வாக சமஷ்டி முறையில் அமைந்த அரசியலமைப்புக் குறித்து பரிசீலிப்பது என்று அரசாங்கத்துக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட இணக்கப்பாட்டின் அடிப்படையில் இந்தப் பயணங்கள் அமைகின்றன. இவ்வாறு பயணம் சென்று திரும்பிய எதிர்க்கட்சியினர் சிலர் சில நாடுகளின் சமஷ்டி முறை குறித்து சிபார்சு செய்யவும் தயங்கவில்லை.

இதேவேளை யாழ். குடாநாட்டுக்கு அண்மையில் சென்று திரும்பிய எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச வடபகுதி மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய செயற்திட்டம் ஒன்றை தயாரிக்க வேண்டும் என்றும் கேட்டிருக் கிறார். சிறிலங்கா சுதந்திரக் கட்சி உடனடியாக தேவைப்படும் செயற்பாடுகளை ஆரம்பிக்க வேண்டும் எனவும் அவர் கேட்டிருக்கிறார். சிறிலங்கா சுதந்திரக் கட்சி முக்கிய பிரமுகரான இவர் யாரிடம் இந்த வேண்டுகோளை முன் வைக்கிறார்? என்ற கேள்வி ஒரு புறம் எழுகிறது. அடுத்ததாக எப்பொழுது இந்தச் செயற்திட்டத்தை முன்வைக்கப்போகிறார் என்ற கேள்வியும் எழுகிறது.

தற்போதைய அரசாங்கத்தைச் சமஷ்டி முறை குறித்துச் சிந்திக்க வைத்தவர் தமது சனாதிபதி தான் என்று பொ.ஐ.மு.வினர் சிலர் பெருமையடித்துக் கொள்கின்றனர். 7வருட காலம் தொடர் யுத்தம் நடத்திய சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, தான் நடத்துவது "சமாதானத்திற்கான யுத்தம்" தான் என்பதை உலக நாடுகளுக்கு நிரூபிக்க முன் வைத்த தீர்வுப் பொதியை அடிப்படையாகக் கொண்டே இவ்வாறு அவர்கள் பெருமையடித்துக் கொள்கின்றனர். தமிழ் மக்கள் மீதான பாரிய யுத்தத்தை அவர் ஆரம்பித்தவேளை முன்வைத்த "முற்போக்கான" திட்டத்தில் பிராந்தியங் களின் ஒன்றியம் என்ற ஒரு விடயம் முன்வைக்கப்பட்ட போதும் பொ.ஐ.மு.வின் முதலாவது ஆட்சிக்காலத்தின் இறுதியில் அவரால் முன்வைக்கப்பட்ட தீர்வு சகல முற்போக்குத்தனங்களையும் இழந்திருந்தது.

இதேவேளை விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தைகளை நோர்வேயின் மத்தியஸ்தத்துடன் ஆரம்பித்து வைத்தவர் சனாதிபதி சந்திரிகாவே எனவும் அவரது கட்சியினரில் சிலர் பெருமை பேசுகின்றனர்.

ஆனால் பொதுசன ஐக்கிய முன்னணியின் இரண்டாவது ஆட்சிக்காலத்தின் இறுதியில் நோர்வேயின் சிறப்புத் தூதுவர் எரிக்சொல்ஹெய்மை இந்நடவடிக்கையிலிருந்து வெளியேற்ற சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எடுத்த இறுக்கமான நடவடிக்கைகள் சமாதான முயற்சிகளை ஒரு நெருக்கடியான கட்டத்திற்கு நகர்த்திச் செயலிழக்கச் செய்திருந்தன.

இவ்வாறான நிலையில் சமாதானநடவடிக்கைகளில் இறங்கிய ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கமும் புலிகளும் இந்த இறுக்கங்களைத் தளர்த்தி பேச்சுவார்த்தை முன்னோக்கிச் செல்ல வழிவகுத்தனர். எனவே இச்சமாதான முயற்சிகள் குறித்து சந்திரிகாவின் ஆதரவாளர்கள் பெருமைப்பட ஒன்றுமில்லை.

உண்மையிலேயே இச் சமாதான முயற்சிகளை தாமே ஆரம்பித்து வைத்ததாகவும் சமஷ்டி முறைகுறித்து சிந்திக்க வைத்ததாகவும் பொ.ஐ.மு.வினர் பெருமை கொள்வதாயின் இச் சமாதான முயற்சிகளை இவர்கள் எதிர்ப்பதேன்? அவற்றைக்குழப்ப முயல்வதேன்?

சமஷ்டி முறை நாடு பிளவுபடவே வழிவகுக்கும் என ஒருபுறம் பிரச்சாரம் மேற்கொண்டவாறு சமஷ்டி முறை குறித்து ஆராய ஐரோப்பிய நாடுகளுக்குப் பயணம் செய்வது மக்களுக்குப்பயன் எதையும் அழிக்கப் போவதில்லை.

ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற, பாராளுமன்றத்தைக் கலைக்க பல்வேறு குற்றச் சாட்டுக்களையும் அரசாங்கம் மீதும் விடுதலைப்புலிகள் மீதும் முன்வைக்கும் பொதுசன ஐக்கிய முன்னணி இச்சமாதான முயற்சிகள் குழம்புவதால் ஏற்படக்கூடிய பாதக நிலை குறித்து சிந்திப்பதாகத் தெரியவில்லை. அது குறித்த அக்கறையும் அவர்களுக்கு இல்லை.

சமாதான முயற்சிகள் நாட்டுக்கு ஆபத்தாக முடியும் - நாட்டை பிளவுபடுத்துவதாகவே முடியும் என தாம் விடுக்கும் அச்சுறுத்தலும், விலைவாசி ஏற்றம் குறித்த பிரச்சாரமும் மக்களைத் தம்வசம் திருப்பும் என பொ.ஐ.மு.வினர் நம்புகின்றனர்.

இவ்வாறான நிலையில் சமாதான நடவடிக்கைகளுக்கு தாம் ஆதரவு எனவும் அதற்கும் மேலாக இச்சமாதான முயற்சிகளின் முன்னோடிகள் தாமே எனவும் இவர்கள் கூறுவது உலகின கண்களில் உண்மையை மறைக்கும் முயற்சியாகும் ஆனால் சமாதான முயற்சிகள் இன்று இரகசியமான முறையில் நடைபெறும் ஒன்றல்ல. அது மூன்றாம் தரப்பின் அனுசரணையுடன் வெளிப்படையாக உலக அரங்கில் நடக்கும் விடயமாகும். இதனால் பொதுசனஐக்கிய முன்னணியின் ஏமாற்றுவேலைகள் எடுபடப் போவதில்லை.

**வேலவன்**

(2ம் பக்கத் தொடர்ச்சி..)

விஜயங்கள் எத்தகைய பலன்களைத்தரும் என்பது குழப்பமாகவே உள்ளது.

தேசிய மட்டத்தில் உள்ள சிக்கல்களையும் தடைகளையும் நீக்கவோ, தாண்டவோ முடியாத நிலையில் அதற்கு மாற்றுவழி கண்டறிய முடியாத சூழலில், சமாதானத் தீர்வுக்கு - சமஷ்டித் தீர்வுக்கு எதிரான உள்ளூர் மற்றும் வெளிநாட்டு இனங்காணப்பட்ட சகதிகளின் மறைமுக செயற்பாடுகளை, சதிகளை முறியடிக்க உறுதியான நடவடிக்கை எதனையும் எடுக்க இயலாத நிலையில், தீர்வு பற்றிய ஆய்வுகள் சமாதானம் நோக்கிய நகர்வுகள், யாவும் வெறும் காலத்தைக்கடத்தும் நடவடிக்கைகளாகவே அமையும்.

சந்திரிகா தலைமையிலான எதிர்க்கட்சிகளோ, சிகல உறுமயவோ, பிக்குகள் பெரமுனவோ, ஜே.வி.பி.யோ, ஏனைய பௌத்த சிங்கள பேரினவாத அமைப்புகளோ, தமிழ்மக்களின் பிரச்சினைக்கு நியாயபூர்வமான உறுதியான, அவர்களின் அபிலாஷைகளை நிறைவு செய்யக்கூடிய ஒரு தீர்வுக்கு உடன்படுவார்கள் என எவரும் நம்பினால் அவர்களுக்காக அவர்களின் அறியாமைக்காக பரிதாபப் படுவதை விடவும் வேறொன்றும் செய்ய முடியாது.

இந்நிலையில் சர்வதேச சமூகத்தின் - நாடுகளின் உதவிகள் ஆலோசனைகள், அறிவுரைகள், ஆய்வறிக்கைகள், திட்டங்கள் ஆர்வமிக்க அக்கறைகள் எல்லாமே விழலுக்கிறைத்த நீராகி விடுமோ என்ற அச்சம் எழுவதும் தவிர்க்க முடியாததே.

தனது நாட்டின் பிரச்சினைகளுக்கு அயல்நாட்டிற்கு பொய்யான - சாத்தியமற்ற - எரிச்சலூட்டும் தகவல்களை தனது தூதுவர்கள் மூலம் வழங்கி அதன் மூலம் சமாதான நகர்வுகளைக் குழப்பத் திட்டமிட்டுச் செயற்படும் சனாதிபதியின் அதிகாரங்கள் - பறிக்கப்படாத வரையில்...

சிகல ஊறுமய போன்ற இன - மத வெறியர்களை சிங்கள மக்கள் முழுமையாக நிராகரித்து பகிரங்கமாக ஒதுக்காத வரையில்

'பிக்குமார்களும், பௌத்த மதபீடங்களும் தமது இனவாத, மதவாத சிந்தனைகளில் இருந்து விடுபட்டு மனிதத்துவ தர்மத்தின் அடிப்படையில் சிந்திக்காத வரையில்....

ஜே.வி.பி.போன்ற குழப்பவாதிகள் தென்பகுதிமக்களால் அரசியல் அரங்கிலிருந்து அகற்றப்படாத வரையில்...

தீர்வு நோக்கிய திக் விஜயங்கள் எதுவும் தீர்க்கமான தீர்மானங்களை எடுக்க எந்தவகையிலும் உதவப்போவதில்லை. அப்படி உதவினாலும் அதனை முழுமையாக அமுல்செய்வது சாத்தியமாகப் போவதில்லை...

இதனைச் சர்வதேச சமூகம் தெளிவாகப் புரிந்து கொண்டு அதற்கேற்ப சமாதான நகர்வுகளுக்கு ஒத்துழைப்பை வழங்க வேண்டியது அதன் முன் உள்ள மாபெரும் பொறுப்பாகும்.

## 31 ஆம் நாள் நினைவும் நன்றி நவிலலும்

அமரர்


### திரு. மயிலு சுந்தரம் (புறோக்கர்)

**வடமராட்சி உடுப்பிட்டியில் இமையாணன் கிழக்கைப் பிறப்பிடமாக கொண்ட சமூகத் தொண்டன் அமரர் திரு. மயிலு சுந்தரம் (புறோக்கர்) அவர்கள் கடந்த 31.12.2002 அன்று இறைபதம் அடைந்தமையிட்டு 30.01.2003 இல் (நேற்று) அன்னாரது இல்லத்தில் நடை பெற்ற 31ஆம் நாள் நினைவில் கலந்து கொண்டு உதவியவர்கள், அனுதாபம் தெரிவித்தவர்கள் அனைவர்க்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதில் நிறைவடைகின்றோம்.**

ஆர்ட்டிஸ்ற் ஆனந்த்
கரவெட்டி, வடமராட்சி.
(சி - 7240)

தகவல்: எஸ்.ஆனந்தன்
(மருமகன்)

## படத்திற்கு மெருகூட்டுங்கள்- 04



**நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப்பரிசு வழங்கப்படும்.**

படத்திற்கு மெருகூட்டுங்கள்- 04

.............................................................

.............................................................

.............................................................

.............................................................

பெயர் :.............................................

முகவரி :.............................................

.............................................

**ஈழநாதம்**
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் -03



**பரிசுக்குரியவர்**
**ம. சியாமளா,**
**இல.32,திருநகர்,**
**கிளிநொச்சி.**

### பரிசுக்குரிய வரிகள்

கடலுக்குள் மீன்பிடித்த மீனவா!
கடற்படை கால்தறிக்க குளக்கரை வந்தாயா.
உயிர்வாழ விரும்பினால் உடன் வெளியேறு
உயர்காப்பு வலயமாம் உவ்விடமும்.

### பாராட்டுக்குரிய வரிகள்

பகை தந்த வேதனை - உன்
காலில்பட்ட வினை
பசி தந்த சோதனை - நீ
தூண்டிலிடும் இந்த நிலை.

கே. செல்வகுமார்,
வர்த்தகப்பிரிவு,
மு/புதுக்குடியிருப்பு ம.வி.

"பாதகர்" விதைத்திட்ட மிதிவெடியில்
பாதிக்கால் பாதையிலே பறந்ததுவோ.
பாடுபட்டு தூண்டிலிடும் - உன்னைப்
பார்த்ததும் பதறுதய்யா என் நெஞ்சு.

கா. ஜனனி,
கணேசபுரம்,
கிளிநொச்சி.

மனிதா! காணாமல் போன உறவைத்தேடி
ஐ.சி.ஆர்.சி வலை வீச
காய்ந்துபோன வயிற்றைத்தேற்ற
நீ தேடும் வழியிதுவோ?

ஊர்மிலா.ம
மு/உடையார்கட்டு ம.வி.

கனவாகிப் போகாது வாழ்க்கை
கண்ணே நிலை குலையாதே.
வன்னி மண்ணின் வளத்தில் ஒன்றை
அள்ளி வருகிறேன் தள்ளிவிடு துயர்.

S.ரவிக்குமார்,
யாழ்சாலை,
முறுகண்டி.

இறால் போட்டு சுறா பிடிக்கும் உலகிலே
வயிற்றிற்காக
புழுவைக் காட்டி மீன் பிடிக்கும்
ஜீவன் ஒன்று.

V.K.மனோகரன்(புதுக்கவி)
வாகையடி, இமையாணன்
உடுப்பிட்டி




ஆரம்பித்திருக்கும் பனிக்காலத்தை எப்படி தாக்குப் பிடிப்பதென்று யோசிக்க ஒரு துருவ வெண் கரடி படத்தில்.

*Ursus Marifinus* எனும் விஞ்ஞானப் பெயர் கொண்ட இக் கரடிகள் 410 - 720 கிலோக்கிராம் நிறை வரை வளரக் கூடியவை.



# படமும் தகவலும்




எரிந்து கொண்டிருக்கும் அமெரிக்க கொடியிலே தனது சிகரெட்டை பற்ற வைக்கிறார் ஒரு போட்லாண்ட் வாசி. ஜனவரி பதினெட்டு அன்று போட்லாண்டில் இடம் பெற்ற அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றின் போது எடுக்கப் பட்ட படம் இது வா ம். ஈராக் மீது படையெடுக்கும் அமெரிக்காவின் போர் முனைப்புக்கு எதிராக பல நாடுகளில் போர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் இடம் பெற்று வருகின்றன.



இறக்கை கட்டிப் பறக்கும் பசு ஒன்றையும் பறக்க ஆரம்பிக்கும் மாளிகையையும் பார்க்க வியப்பாக இருக்கலாம். இவை அண்மையில் சர்வதேச வெப்ப பலூன்கள் வாரம் (ஜனவரி 06) அன்று சுவிஸ்லாந்தில் பலர் பங்குபற்றிய நிகழ்வில் பறக்க விடப்பட்டன.

ஸ்பெயினில் இடம் பெற்ற காளை அடக்கும் போட்டி ஒன்றில் பங்கு பற்றி காளையை அடக்கி வெற்றி வாகை சூடும் வீரன் ஒருவன் கீழே உள்ள படத்தில். அண்மையில் கிளிநொச்சியிலும் ஒரு காளை அடக்கும் நிகழ்வு இடம் பெற்றது. ஆயினும் அடக்க முடியாத "காளைகள்" போட்டியில் பங்கு பற்றியமையாலோ என்னவோ முழுக் காளைகளும் மைதானத்தை விட்டு ஓடிவிட்டன.



தமிழீழத்தின் அழகு தனி அழகே என்பதை நிரூபிக்கும் ஒரு இடத்தின் காட்சி இது. திருகோணமலையில் இயற்கையாகவே அமைந்திருக்கும் துறைமுகத்திற்கு மேலும் அழகு சேர்க்கும் இராவணன் வெட்டு என்றழைக்கப்படும் இவ்விடம் அதிகளவிலான உல்லாசப் பயணிகளை கவர்கின்றது. ஆயினும் தற்போது சிறிலங்கா இராணுவ முகாம்களினால் சூழப்பட்டிருப்பதால் இங்கே வருகை குறைந்து காணப்படுகின்றது.



இப் பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஜனவரி மாதம் 31ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.